அய்யா நாராயணர்



பொன். பாஸ்கரமார்த்தாண்டன்

நூல் விவரம்

நூலின் பெயர்	:	அய்யா நாராயணர்
ஆசிரியர்	:	பொன். பாஸ்கரமார்த்தாண்டன்
நூலின் உரிமை	:	ஆசிரியருக்கு
மொழி	:	தமிழ்
முதற் பதிப்பு	:	நவம்பர், 1995
தாள்	:	10.5kg வெள்ளைத்தாள்
நூலின் அளவு	:	1 × 8 டபுள் கிரவுன்
அச்சு எழுத்து	:	12 Pt.
மொத்தப் பக்கங்கள்	:	216
பைண்டிங்	:	சாதா அட்டை பைண்டு
வெளியிடுவோர்	:	தாமரை பதிப்பகம் 25, புத்தர் தெரு புதுப்பெருங்களத்தூர் சென்னை-600 063

விலை : ரூ. 40-00

அச்சிட்டோர்	:	வெற்றி அச்சகம், 91, டாக்டர் பெசன்ட் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14

பணிவுரை

என் மனைவி தாமரை புஷ்பம் மூலம்தான் நான் 'அய்யா நாராயணரின் இயக்கத்தைப் பற்றி ஆரம்பத்தில் தெரிந்து கொண்டேன். அவர் 'அய்யா வழி'யைச் சேர்ந்தவர். பின்னர் பூஜித குரு பிரஜாபதி அடிகளார், எழுத்தாளர் கு. பச்சைமால் போன்றோருடன் ஏற்பட்ட தொடர்பு மூலம் அந்த இயக்கத்தைப் பற்றி சற்று விரிவாக அறிந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது.

இந்து மதத்தின் ஓர் அங்கமாகத்தான் சுவாமித்தோப்பு முத்துக்குட்டி சுவாமிகளின் இயக்கம் அமைந்திருக்கிறது. என்றாலும், அதன் தனித்தன்மையால் இந்து மதத்திற்கே ஒரு ரத்தின திலகம் போல் திகழும் பெருமைக்குரியது அது. இந்த அளவு ஆன்மீகமும் சமூகஉணர்வும் கொண்ட ஒரு தெய்வீக இயக்கம் உலகத்தில் வேறு எங்கும் இல்லை என்று நான் கருதுகிறேன்.

பொன். பாஸ்கர மார்த்தாண்டன் என்ற பெயரில் நான் எண்ணற்ற ஆலயங்களைப் பற்றி எழுதியிருக்கிறேன். காலடி, சோட்டானிக்கரை, மராட்டிய மாவீரன் சிவாஜியின் பவானி ஆலயம், கொல்லூர் மூகாம்பிகை இப்படி எத்தனையோ வெளி மாநிலத்து ஆலயங்கள், தமிழ்நாட்டின் நூற்றுக்கணக்கான கோயிலில் இவற்றையெல்லாம் வழிபடும் பேறும் பெற்றிருக்கிறேன். இவை எல்லா வற்றையும் விட ஒரு தனி சிறப்பு, சுவாமித்தோப்பு

முத்துக்குட்டி சுவாமிகள் ஆலயத்தை வழிபடும் போது, எனக்கு ஏற்பட்டது. அதன் விளைவாகவே 'வாசுகி'யில் என்னுடைய ஆய்வுக் கட்டுரையை எழுதினேன்.

அய்யா நாராயணர் இயக்கத்திற்கு ஒரு பாத மலராக இந்நூலை சமர்ப்பிக்கிறேன்.

இதை நான் எழுதுவதற்கு வாய்ப்பளித்த வாசுகி நிறுவனத்தினருக்கும், அவ்வப்போது கருத்துரை வழங்கி ஊக்குவித்தும், திருத்தியும் உதவி புரிந்த 'அய்யா நாராயணரி'ன் பக்தர்களுக்கும் என் நன்றி.

இந்நூலை செம்மையாக வெளியிட்டு உதவி புரிந்த வெற்றி அச்சக உரிமையாளர் எஸ். குப்புசாமி அவர்களுக்கும், பிரதிகளை சீர்படுத்தி அச்சிட உதவிய நண்பர் எம். திருஞானம் அவர்களுக்கும் என் நன்றி. எல்லாவற்றிற்கும் மேலாக உங்களுக்கும்தான்.

அன்பன்,

தாமரை மணாளன்

1. அய்யா நாராயணர்

எளியோரைக் கண்டால்
கண்டிரங்கியிரு என் மகனே
வலியாரைக் கண்டு மகிழாதே
என் மகனே.

—அய்யா நாராயணர் அருள் வாக்கு
(அகிலத்திரட்டு பக்-212)

அந்தக் காட்சி சுமார் நாற்பதாண்டு காலமாக என்னைப் புதிராய் வியக்க வைத்திருக்கிறது.

அது—

நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்கள் முழுவதிலும்-சமீபகாலமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாகவும், என் பார்வைக்குத் தரிசனம் தந்து பிரமிப்பூட்டிக் கொண்டிருக்கும் தெய்வக்காட்சி.

தமிழகம், கேரளா, ஆந்திரம், மகாராஷ்டிரம் இப்படிப் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று சுமார் ஏழு நூறுக்கும் மேற்பட்ட புகழ்பெற்ற சிவன் கோயில்களையும், அம்பாள் தலங்களையும் வைணவ ஆலயங்களையும் தரிசனம் செய்து 'தெய்வ தரிசனம்-தேவி தரிசனம்' எழுதியிருக்கும் யான், அந்தத் தெய்வத் தலங்களில் எல்லாம் கண்டுணர்ந்து அனுபவித்த இறைத் தன்மையி லிருந்து, முற்றிலும் மாறுபட்ட புதிய நோக்கு அமைந்த ஒரு சித்தாந்தத்தை நான் குறிப்பிடும் வித்தியாசமான தெய்வக் காட்சியில் உணர முடிந்தது.

அதுதான்-

'அய்யா வழி' என்றும் 'அய்யா நாராயணர் வழி' என்றும் சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு தென் திருவிதாங்கூர் பகுதியிலுள்ள சாமித் தோப்பில் (பூவண்டன் தோப்பு-தாமரையூர் என்று பூர்வீகப் பெயர்கள்) மலர்ந்து மெல்ல தமிழகம் எங்கும் பரவியிருக்கும். மதக்கலாச்சாரம். 'சமீபத் தில் தமிழக அமைச்சரவையில் சேர்க்கப்பட்ட ஒருவர் (நடேசன் பல்ராஜ்) மற்றவர்களிலிருந்து வித்தியாசப்பட்டு பதவி ஏற்கும்போது 'அய்யா நாராயணர் துணை' என்று இறை முழக்கம் செய்து கவர்னரிடம் பதவிப் பிரமாணம் செய்து கொண்டாரே, அது இந்த நாராயணர் தெய்வீக வழிபாடுதான்!

இந்த நாராயணர் வழி கலாசாரத்தில் அப்படி யென்ன அற்புதத் தன்மை? அதை, சம்பந்தப்பட்ட ஆலயங்களிலும் பக்தர்களிடமும் காண முடிகிறது.

சின்னஞ்சிறு வயதிலிருந்தே, அந்த மரபைக் கடைபிடிக்கும் கோயில்களைத் தென் கோடி மாவட்டங்களில் (நெல்லை-குமரி) உள்ள ஒவ்வொரு ஊரிலும் பார்த்திருக்கிறேன். 'இனத்தாங்கள்' என்பார்கள்.

ஆடம்பரமான அமைப்பு இருக்காது. சிறிய அடக்கமான கோயில்களாகத் தான் இருக்கும். ஆகம விதிகள்படி அந்த ஆலயங்கள் கட்டப் பட்டிருக்காது. ஆனால் பழம்பெரும் ஆகமங்களி லிருந்து வித்தியாசப்பட்ட சில அர்த்த புஷ்டியான அம்சங்கள் அங்கே காணப்படும்-

'நாராயணசாமி கோயில்' என்று அழைப்பார் கள். ஆனால் நாராயணரின் உருவமோ, உருவ வழிபாடோ அங்கே கிடையாது.

உருவ வழிபாடு இல்லாத இந்து ஆலயங்கள் ஒரு புதுமை இல்லையா?

ஆலயத்தினுள் காவி வேஷ்டியும் உத்திராட்ச மும்தான் இருக்கும். ஆம்; நாராயணர் ஆலயத்தில் சிவபெருமானின் அடையாளங்கள். உண்மையில் நாராயணரே, 'அரகர சிவனே அய்யா' என்று

தான் வழிபாட்டு கோஷத்தை அமைத்தார். அப்படி சிவனுக்கும் நாராயணருக்கும்சமரசம். நூற்றைம்பது வருடத்திற்கு முன்பாகவே! விஷ்ணு பக்தர்களும் சிவ பக்தர்களும் ஒருவரையொருவர் எதிரியாக நினைத்து சண்டை போட்டுக் கொண்டிருந்த அந்தக் காலத்திலேயே இந்த சமரசம் அமைந்திருக் கிறது, அங்கே!

ஆலயங்களில்-எந்தவித ஆலயமாக இருந்தா லும் சரி- உண்டியல் வைத்திருப்பது தவிர்க்க முடியாதது. 'உண்டியலில் எத்தனை லட்சம் சேர்ந்தது' என்று சர்ச்சை செய்வதில் ஆலயத்தின் அந்தஸ்து இருப்பதாக கருதும் நிலையும் உண்டு.

ஆனால் இந்த நாராயணர் ஆலயங்களில் உண்டியலே கிடையாது! காரணம், 'காணிக்கை, கைக் கூலி, காவடி முதல் எந்தனுக்கு வேண்டாம்' என்று இதை நிறுவிய அய்யா நாராயணரே ஒரு நெறியை அமைத்திருக்கிறார்! (ஆலயங்களில் சண்டை, திருட்டு ஏற்படுவதே இந்த நிதிச் சேர்ப்பினால்தான் என்று தீர்க்கதரிசனமாக உணர்ந்த ஞானம், அந்த மகானுக்கு!)

ஆலய அமைப்பில் மட்டுமா? அந்த 'அய்யா வழி' பக்தர்களின் புறத்தோற்றத்திலும் ஒரு புதுமை.

பெருமாளைத் தெய்வமாக ஏற்ற வைணவர்கள் நெற்றியில் மூன்று நாமங்கள் (தென் கலை என்றும்

வடகலை என்று) இடுவார்கள். சிவபெருமானை இறைவனாகப் போற்றும் சைவர்கள் நெற்றியில் குறுக்காக வெண்மை நிற விபூதியை அணிவார்கள். இந்த 'அய்யா வழி' அன்பர்களோ, வெண்ணிற விபூதியை ஒன்றை நாமமாக நெற்றியில் தரிக்கிறார் கள் சிவனையும், விஷ்ணுவையும் பேதமில்லாமல் ஒன்றாக இணைத்துக் கொண்ட பக்குவ நிலை!

பொதுவாக ஆலயங்களுக்குள் செல்லும்போது எல்லாம் மேல் துண்டுகளை இடுப்பில் கட்டிக் கொள்வார்கள். ஆனால், அய்யா வழி பக்தர் ஆலயத்திற்குள் நுழையும்போது, தம் மேல் துண்டு களையோ, அங்க வஸ்திரங்களையோ எடுத்து தலைப்பாகையாகக் கட்டிக்கொள்கிறார்கள்!

இதற்குக் காரணம்?

'இந்தப் புதிய தெய்வ கலாச்சாரத்துக்கு அடிப் படையாக 'அய்யா நாராயணன்' என்று தொழப் பட்ட 'முத்துக்குட்டி சுவாமிகள்' நடத்திய ஒரு மகத்தான சமூக, ஆன்மீகப் புரட்சியே பின்னணி யாக இருக்கிறது!' என்கிறார், 1851-ல் இறை நிலைக்குள் சமாதியான சுவாமிகளில் ஆறுவது தலைமுறைச் சந்ததியினரும் இன்று மூலமான சாமித்தோப்பு ஆலய நிர்வாகப் பொறுப்பில் இருப்பவருமான பூஜிதகுரு பாலபிரஜாபதி அடிகளார்.

அய்யா நாராயணரைப் பற்றி நாம் பலரிடம் கருத்து சேகரித்தபோது, ஒரு வித்தியாசமான நபரிடமிருந்து அபூர்வமான கருத்து ஒன்று வந்தது.

அவர்தான் பொதுவுடமை சித்தாந்தவாதியும், அறிவியல் முற்போக்கு எழுத்தாளருமான பொன்னீலன்.

பொதுவுடமை வாதிகள் (கம்யூனிஸ்டுகள்) தெய்வ நம்பிக்கைகைய ஏற்றுக்கொள்ள மாட்டார் கள். 'அவதார புருஷர்கள்' என்று போற்றப்படுபவர் களை அப்படியே அங்கீகரிக்கவும் மாட்டார்கள். பொன்னீலனும், முத்துக்குட்டி சுவாமிகளின் தெய்வாம்சத்தைப் பற்றி கருத்து தெரிவிக்கவில்லை ஆனால் ஆணித்தரமாக, ஒரு புதிய செய்தியைச் சொன்னார். ''நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னால் ஏழை எளியவர்கள் திருவாங்கூர் மன்னர் களிடத்திலும் நிலப் பிரபுக்களிடத்திலும் அடங்கி ஒடுங்கிக் கிடந்தபோது, முதன் முதலாக சமூகப் புரட்சியைப் பற்றிப் பேசியவர் முத்துக்குட்டி சுவாமி கள்தான். ஏழைகளுக்காக வர்க்கப் போராட்டம் நடத்தியவர் அவர். பொதுவுடமைத் தந்தை கார்ல்மார்க்ஸுக்கு முந்தியே, கம்யூனிஸம் பேசிச் செயல் படுத்தியவர் அவர்' என்றார். ஆச்சரியமாக இருந்தது.

பின்னர், நான் 'அகிலத் திரட்டு' என்ற சுவாமிகளின் அருள் வாக்குத் தொகுப்பை ஆய்வு

செய்தபோது பொன்னீலன் கூறிய பொதுவுடமைக் கருத்துக்களை உணர்த்தும் ஒருவரியைக் கண்டு வியந்தேன்.

அது: 'தாழக் கிடப்பாரைத் தற்காப்பதே தர்மம்'

அய்யா நாராயணர் உண்மையில் ஆன்மீக அருள் செல்வரான அவதாரப் புருஷரா? சமூகப் புரட்சி செய்த ஏழைப் பங்காளரா?

-இந்தக் கேள்வி என் மனதில் எழுந்தபோது-

அய்யா நாராயணரின் நூல்களையும் கருத்துக் களையும் பெருமளவில் ஆய்வு செய்திருக்கும் புலவர் கு. பச்சைமால் சொல்கிறார்.

'பகவான் நாராயணர் — வள்ளலாருக்கும் கேரளத்து மகான் நாராயண குருவுக்கும் காலத்தால் முற்பட்ட அவதாரப் புருஷர்.

'1809-ல் பிறந்து 1833-ல் ஞானம் பெற்று 1851ல் வாழ்வை நிறைத்த அவர், சமூக மறுமலர்ச்சிக் காவலராகவும், அரசியல் புரட்சியின் ஊற்றாகவும், ஆன்மீக ஞானியாகவும், ஞான மொழிச் செல்வராகவும், தீர்க்கதரிசியாகவும் பரிணாம வாழ்வு வாழ்ந்தவர்' என்கிறார்!

முத்துக்குட்டி சுவாமிகளின் தீர்க்கத்தரிசனத் துக்கு உதாரணமாக அவர் சுட்டிக்காட்டியபடி, 'அகிலத்திரட்டு' என்று நூலில் காணப்படும் சில

உதாரணங்கள்; உண்மையிலேயே வியப்பூட்டுவதாக அமைந்திருக்கின்றன. அவற்றில் ஒன்று:

இந்தியா சுதந்திரம் அடையாமல் அடிமை இருள் சூழ்ந்திருந்த காலத்தில்தான், முத்துக்குட்டி சுவாமி வாழ்ந்தார். அப்போது 'சுதந்திரம் பெற வேண்டும்' என்ற ஆசை இந்தியர்களுக்கு இருக்கவில்லை. ஜாலியன்வாலாபாக் படுகொலையோ-சிப்பாய்க்கலகமோ, நடைபெறவில்லை. முதல் உலக யுத்தக் காலத்தில்கூட (1914 வாக்கில்) முழுச் சுதந்திரம் வேண்டும் என்று தேசத்தலைவர்கள் நினைக்கவில்லை.

அப்படியிருக்க 1841-ல் அகிலத்திரட்டு எழுதிய சுவாமிகள், 'இந்தியா 1947-ல் சுதந்திரம் பெறும்' என்று சரியாகச் சொல்லியிருக்கிறார்!

(அந்தப் பாடல்:

நூற்றுப் பன்னிரெண்டில் நொடிப்பேன் ஓர் கண்டத்திலே
தோற்றுவிப்பேன் யார்க்கும் தூது மிக நடந்து
பத்தாண்டுக்குள்ளே பல சோதனை பார்த்து
வித்தாரம் மேலே விசாரிப்பேன்.

பொருள்: இப்பாடலில் வரும் 112 என்பது, கொல்லம் 1112-ம் ஆண்டு. அதாவது 1937-ம் ஆண்டு. அப்புறம் சோதனை மிகுந்த 10 ஆண்டுகளுக்குப்பின் 1947-ல் இந்தியாவுக்கு சுதந்திரம்)

∴ ∴ ∴

ஒரு பிரமிப்பான முன்னோட்டம் நம்மை ஆட்கொள்கிறது.

கடந்த நூற்றாண்டில் முத்துக்குட்டி சுவாமிகள் அவதரித்த அந்தப் புண்ணிய திருத்தலமான சாமித்தோப்புக்குத் தரிசனம் பெறச் செல்கிறோம்.

நாகர்கோவிலுக்கு அருகே சுமார் 6 கி.மீ. தொலைவில் இருக்கும் அந்தப் பகுதியில் நமக்கு புரிய வைக்கப்பட்ட சுவாமிகளின் அவதாரச் செய்திகளில், ஒரு கிளர்ச்சியூட்டும் கண்ணோட்டத்தை உணர முடிந்தது. அது-

5000 ஆண்டுகளுக்கு முன் துவாரகையில் அவதரித்த கிருஷ்ணர்.

அவரைத் தொடர்ந்து 3000 ஆண்டுகளுக்குப் பின் ஜெருசலத்தில் அவதரித்த இயேசு பிரான்.

கிறிஸ்துவுக்குப் பின் சுமார் 2000 ஆண்டுகளில் பூவண்டன் தோப்பு எனப்படும் சாமித்தோப்பில் அவதரித்த முத்துக்குட்டி சுவாமிகள்.

இவர்களுக்குள் தென்பட்ட ஓர் அபூர்வ ஒற்றுமைதான் அது!

2. சமூக நீதி

அடக்கம் பெரிது
    அறிவுள்ள என் மகனே!
நன்றி மறவாதே, நாம்
    பெரிதென்று எண்ணாதே!

—நாராயணர் வாழ்க்கை நெறி.
(அகிலம் பக்: 214)

தெய்வம் மனித உருவில் தோன்றுமா?

அவதாரங்கள் எல்லாருமே கடவுளர்கள்தானா?

இது மனித குலம் தோன்றிய நாள் முதல், கேட்கப்படும் கேள்வி. அதற்கு அன்றும், இன்றும் பதில் கிடைக்கவில்லை.

நாம் அவரவருக்குத் தோன்றியபடி ஏற்றுத் தொழுது வணங்கும் கண்கண்ட தெய்வங்களும் இதற்கு விடை கூறவில்லை.

ராமபிரான் இந்துக்களின் தெய்வம். தெய்வ அவதாரம். ஆனால் அவர், தான் எடுத்த காரியம் வெற்றிபெற ஈஸ்வரனை பூஜை செய்து வணங்கினார். அவர் அப்படி வணங்கிய இடம் ராமேசுவரம்.

இயேசு பிரான், நம் கிறிஸ்துவ சகோதரர்களின் தெய்வம். பரிசுத்த யோவானே, இயேசுவைப் பற்றி, 'அவர் என்னிலும் மேன்மையானவர். நான் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; அவரோ பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர்' என்று சாட்சி சொன்னார். அதற்கு மேல் அவர் தெய்வம் என்பதில் என்ன சந்தேகம்! ஆனாலும் அந்த இயேசுபிரானோ, தான் சிலுவையில் அறையப்பட்டபோது, பிதாவே, இவர்களை மன்னியும்' என்றார்.

நபிகள் நாயகம், இஸ்லாமிய சகோதரர்கள் தொழும் இறை தூதர். ஆனால் அவரோ, 'அல்லாவே தெய்வம்' என்றார்.

-இப்படி பூமியில் அவதரித்த மனிதகுலம் கண்டு' வணங்கிய 'தெய்வங்கள்' எல்லாருமே தம்மைத் தெய்வமாக உணர்த்தவில்லை. தமக்கு மேலே இருக்கும் ஈசனையே - பிதாவையோ - அல்லாவையோதான் தெய்வங்களாக உலகத்துக்கு உணர்த்தினர்.

ஆனாலும்-

மக்கள், தங்களுக்கு இறை ஒளி காட்டிய தெய்வ மகான்களையும் இறைவனாகவோ இறைவனுக்கு தம்மை அழைத்துச் செல்லும் தெய்வத் தூதர்களாகவோ போற்றினர்.

அதனால்

இங்கு தெய்வமாகப் போற்றப்படுபவர்களைப் பற்றி ஆராய நாம் அருகதை உள்ளவர்கள் அல்ல.

நம்மைப் பொறுத்த அளவில், நம்மால் தரிசிக்க முடியாத தெய்வத்தை நாம் கண்டு உணரும்படி அறிமுகப்படுத்தும் மகான்களே, நடமாடும் தெய்வங்கள்.

'முடி சூடும் பெருமாளா'க முதற்பெயர் கொண்டு, பின் முத்துக்குட்டி என்று மறுபெயர் ஏற்று திருச்செந்தூரில் 'விஞ்சை' (ஞானம்) பெற்ற அய்யா நாராயணரும் தன்னை, வைகுண்டத்திலிருக்கும் நாராயணரின் மகனாகவே வெளிப்படுத்துகிறார்.

அவர் தெய்வமா, தெய்வ குமாரனா, தெய்வ அருளைப் பூமிக்குக் கொண்டுவந்த இறையருள் தூதனா?

யாருக்குத் தெரியும்? யாரால் நிச்சயித்துக் கூறமுடியும்? அது நம் வேலையும் அல்ல. நம் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயம்

அது. ஆனாலும், அய்யா நாராயணர், இந்த மண்ணில் அவதரித்து நடத்திய ஆன்மீக சமூக புரட்சிகள், பல்லாயிரம் ஆண்டுகள், இந்த பூதலத்தில் நடக்கும் தெய்வத் திருவிளையாட்டுக் களின் சங்கிலித் தொடராக, ஒரு மனித மேம்பாட்டுப் போராட்டமாகவே திகழ்கிறது என்பது தெளிவு.

தெய்வ மகான்கள் தோன்றுவதற்கு எப் போதுமே பூமியில் காரணங்களும் தேவைகளும் ஏற்படுவது நியதி.

கீதையில் பகவான் கண்ணன்கூட, 'எப்போது தர்மத்துக்கு சோதனை ஏற்படுகிறதோ, அப்போது தான் பூமியில் அவதரிப்பேன்!' என்றார்.

அய்யா நாராயணர், பூமியில் தோன்றும் காலத்திலும், அப்படியொரு சமூக வேதனை, அவர் தோன்றிய தென் திருவிதாங்கூரில் இருந்தது.

கம்சன் என்ற ஒரு தீயவனை ஒழிக்கவும், மகாபாரதத்தில் துரியோதனின் தர்ம விரோத செயல்களை ஒடுக்கவும் மட்டுமே அப்போது கண்ணன் அவதரித்தார். அந்த வேலையை முடித்துவிட்டு போய்விட்டார். அவர் உலகம் முழுவதும் சுற்றியலையவில்லை. ஆனால் ஏதோ ஒரு குறுகிய பிரச்சினைக்காக வந்து குருஷேத்திரத்

தில் அவர் அளித்த கீதை உலகமெங்கும் பேசப்பட்டு வருகிறது.

இயேசுபிரான் யூதர்களின் ராஜாவாகப் பிறந்து அந்தப் பகுதியில் நிகழ்த்திய அற்புதங்களும், பிரசங்கங்களும்தான், இன்று உலகமெங்கும் உள்ள ஜன சமுதாயத்தின் வேதம்.

அரேபியத்தில் அண்ணல் நபிகள் நாயகம் அளித்த அருள் ஒளி, இன்று அகிலம் எங்கும் பிரகாசிக்கிறது.

வடஇந்தியாவில் ஒரு சிறிய பகுதியில் புத்தர் சுற்றித் திரிந்து சொன்ன உபதேசங்கள், பௌத்த ஞானமாக இலங்கை, சீனா போன்ற பல நாடுகளுக்கும் கடல்கடந்து சென்றன.

எங்கோ ஒரு சிறு நாட்டில் வெளிப்பட்ட சமூக நீதி என்பதற்காக, உலகம் எதையும் தமதாக்கி ஏற்க மறுப்பதில்லை.

ஒரு பானையில் உள்ள பானகத்தை, இனிக்கச் செய்வது, ஒரு மூலையில் இடும் சர்க்கரைத்தான்.

அப்படித்தான் நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் சாமித்தோப்பு மகான் வெளிப்படுத்திய ஆன்மீக ஞானமும், சமூக எழுச்சியும், உலகம் முழுமைக்கும் சொந்தமானது.

அந்த சாமித்தோப்பு நீதியை, அதன்பின் கேரளத்தில் தோன்றிய நாராயண குரு மலர்வித்தார். சுமார் 7000 'இணைத்தாங்கல்'கள் இன்றும் அந்த ஆன்மீக சமூக நெறியை மக்களுக்கு உணர்வித்துக் கொண்டிருக்கின்றன.

தென் திருவிதாங்கூரில், 19-ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் 'பதினெட்டு இனங்கள்' தாழ்த்தப்பட்டவர்களாக ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். திருவாங்கூர் மன்னராலும் மேல்தட்டு வர்க்கத்தாலும் நசுக்கப்பட்ட, சாதிகள் இவைதான்.

சாணான், இடையன், சாதிவணிகனுடன், நாணாத காவேரி நல்ல துலுக்கப்பட்டர் முதல் சூத்திரப் பிரமான், தோல்வாணியன், பறயன், கம்மாளன், ஈளன், கருமறவன், பரவன், வெம்மான சு ாணி, வேகாண்ட நிடையர் சக்கிலியனோடு சாதி பதினெட்டுகளும்! (அகிலத்திரட்டு பக்கம்.251)

அவர்களுள் 'சான்றோர்' என்றும்-அந்தப் பெயர் மருவி 'சாணார்' என்றும் (அகிலத்திரட்டு அம்மானையில் பகவான் வைகுண்டரே அப்படித்தான் குறிப்பிடுகிறார்) கூறப்படும் இனம்தான் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

அந்த சான்றோர் குலத்தில் பிறந்த பெண்கள் இடுப்புக்கு மேல் தோள்சீலை போடுவதை மன்னரும், மேலோரும் அனுமதிக்கவில்லை. மன்னரோ,

மேல் ஜாதியினரோ வரும்போது இளம் பெண்களா லும் முதியோர்களாலும் தோளில் ஆடையின்றி திறந்த மேனியுடன்தான் வரவேண்டும். (என்ன வக்கிர நீதி) ஆண்கள் கொத்தடிமைகளாக இருந் தனர்.

அவர்களுக்கு விதிக்கப்பட்ட வரிகளோ, மிக மிகக் கடுமையானவை.

தாலிக்கும் ஆயம் [வரி] சவுரி முதல் ஆயம்.

கூலிக்கும் ஆயம். கம்புதடிக்கு ஆயம்.

கால மதுவுக்கு [அப்போது இறக்கப்படும் கள்ளுக்கு ஆயம்] தரணி தன்னில் வளர்ந்த

ஆலமரம் வரைக்கும் வரி...

இது பாடல்-

சான்றோர் இனத்துப் பெண்கள் திறந்த உடம் புடன் வர வேண்டும்; ஆண்கள் உழைக்கும்பொருள் ஒவ்வொன்றுக்கும் வரி.

அது மட்டுமல்லாமல், அவர்களுக்கு கூலியே கொடுக்காமல் வேலை வாங்கி, உழைப்பைச் சுரண்டிய கொடுமைகள் ஏராளம். உதாரணத்துக்கு சில.

குளம் வெட்டச் சொல்லி, கூலி கொடுக்காமல்.

கனம் பெரிய சான்றோரை கைக்குட்டை போட்டடிப் பான்.

அதுமட்டுமல்ல;

அந்த இனத்தார், குடை பிடிக்கக்கூடாது; மாடி வீடு கட்டக்கூடாது; செருப்பு அணியக் கூடாது; தங்க நகைகள் அணியக் கூடாது; பெண்கள் மார்பில் துணி போடக்கூடாது என்பதோடு, முழங்காலுக்கு கீழே உடுத்தக்கூடாது. பசு வளர்க்கக்கூடாது; இடுப்பில் குடம் எடுக்கக்கூடாது. இப்படி எத்தனையோ கொடுமைகள்!

இவ்வாறு நசுக்கப்பட்ட இனத்தை மேம்படுத்த எழுந்ததால்தான், அந்த இனத்தில் தோன்றிய சுவாமிகள் தன்னைப் பின்பற்றுவோருக்கு, 'சொத்தைக் குறையாதே. குறை மரக்கால்லை வைக்காதே!' என்று சமதர்மக் குரல் கொடுத்தார்.

அதுமட்டுமல்ல, பின்னால் காந்தியடிகள் வெள்ளைக்காரனுக்கு எதிராக நடத்தினாரே ஒத்துழையாமை இயக்கம், அதற்கு முன்னோடியாக சுவாமிகளே, தன் மக்களுக்கு இப்படி கொள்கை முழக்கம் செய்கின்றார்.

அவனவன் தேடும் முதல் அவனவன் வைத்து ஆண்டிடுங்கோ!

எவன் எவனுக்கும் பதறி இனி மலைய வேண்டாம்'

-என்ன அழுத்தமான சுயமரியாதைக் குரல்!

இப்படியொரு குரல் கொடுத்து காப்பாற்றப்பட வேண்டிய நிலையிலிருந்த சான்றோர் இனத்து

மக்களைக் காக்க இரண்டு சக்திகள் தோன்றின. இரண்டும் இறையருளோடு கூட ஆன்மீக சக்திகள்.

அன்று மேலை நாட்டிலிருந்து அப்போது இந்தியாவுக்கு வந்தகிறிஸ்துவம்; அடுத்து, பகவான் வைகுண்டரின் அய்யா வழி சமயநெறி. இந்த இரு சக்திகளால்தான் ஒடுக்கப்பட்ட தாழாத இனங்கள் தலை நிமிர்ந்தன. கிறிஸ்துவத்தைத் தழுவ விரும்பிய 'சான்றோர்'களை, கிறிஸ்துவரும் ஆங்கில அரசும் காப்பாற்றின.

மதம் மாற விரும்பாமல் இருந்த இந்து சான்றோர்களை எழச்செய்து தலைநிமிர்ந்தும், துணிந்து நிற்கச் செய்தது, அய்யா வழி.

அது ஒரு எழுச்சி வரலாறு—

3. அன்புக்கொடி மக்கள்

ஆடு கிடாய் கோழி பன்றி அயனுக்கு வேண்டாம் காண்
மேளதாளம் குரவை தொனிவேண்டாம் கான் ஈசனுக்கு
ஒரு அன்பு மலரெடுத்து அனுதினம் பூசை செய்வாய்!

[அய்யா வாக்கு — அருள் நூல் பக்:43]

மகான்களையும் அவதார புருஷர்களையும் அடையாளம் காணும் நுண்ணிய ஞானம், பூமியில் வெகு பேருக்குக் கிடையாது. யாருக்காவது உண்டா என்பதுவும் நமக்குத் தெரியாது.

எண்ணற்ற அண்டங்களையும், சூரிய நட்சத்திரங்களையும் இயக்கும் மகாசக்தியையோ அதன் பிரதிபலிப்பையோ — இந்தப் பிரபஞ்சத்தில் கோடானு கோடி துளிகளுள் ஒரு துளியான பூமியில் உள்ள மாந்தர்கள் அடையாளம் காண்பது எளிதா?

ஒவ்வொருவரும் தம் தம் அனுமானப்படி அவரவர் ஞான தீட்சண்யத்தை யொட்டி கருத்துக்களை தெரிவிக்கிறார்கள்,

சிலர் பூமியில் நடத்தும் அற்புதங்களைக் கொண்டு சில மகான்களின் அருட்திறனை அளக்க முயலுகிறார்கள். சில மகான்களோ, இந்த அற்புதங்களையே கேலி செய்ததும் உண்டு. அவர் களுள் ஒருவர் பகவான் ராமகிருஷ்ணர்.

அவரிடம் ஒருவர் சென்று, 'நான் நிறைய அற்புதங்களை செய்வேன். என் யோக சக்தியால் நீரின் மீது நடந்து நதியைக் கடப்பேன்' என்றார்.

அதற்கு பகவான், 'ஏனப்பா, எட்டணா காசு கொடுத்தால் படகோட்டி நதியைத் தாண்டிச் செல்ல உதவுவானே. அதற்காக உன் வாழ்க்கை யையே வீணடித்துக் கொண்டாயா? மக்களுக்கு உபயோகமாக ஏதாவது செய்யக் கூடாதா?'' என்றாராம்.

அவர் அற்புதங்களைப் பழகவில்லை; அற்புதங் களை ஒரு பெரிய சாதனையாகப் போற்றுவதைத் தான் தவறெனச் சுட்டிக் காட்டுகிறார். இந்தக் கட்டுரை எழுதும் அடியேனுக்குக்கூட ஓர் அனு பவம் ஏற்பட்டதுண்டு.

ஒரு மகானைப்பற்றி எழுதுவதற்காக அவரைத் தரிசிக்கச் சென்றபோது, அவர் என் கையில் கொஞ்சம் வேப்பிலையைத் தந்தார்.

'திறந்து பார்' என்றார்.

திறந்து பார்த்தேன். வேப்பிலைக்குப் பதிலாக ஓர் ஆஸ்திரேலிய நாட்டு டாலர் நோட்டு இருந்தது.

'சுவாமி இத்தகைய வித்தைகளை மூர்மார்க் கெட்டில் வித்தை காட்டுபவர்கள்கூட செய்கிறார்களே, தாங்கள் செய்வதற்கும் அதற்கும் என்ன வித்தியாசம்?' என்று கேட்டேன்.

அதற்கு அந்த மகான் பதில் தரவில்லை. ஆனால் வேறொரு ஞானி ஒரு விளக்கம் தந்தார். 'கோயிலில் மணி அடித்து மக்கள் கவனத்தை ஈர்ப்பதுபோல் மகான்கள் அற்புதங்கள் நிகழ்த்தி கவருவது உண்டு. தெய்வ புருஷர்கள் அத்தகைய அற்புதங்களை தங்கள்பால் ஈர்ப்பதற்காக செய்வார்களே தவிர, அந்த அற்புதங்களே தெய்வீகம் அல்ல' என்றார்.

ஆனாலும், உலக வரலாற்றில், ஆன்மீகப் பெரியவர்கள் நிகழ்த்தியதாக பல அற்புதங்களைக் குறிப்பிடுவதுண்டு.

அத்தகைய அற்புதங்களுள், எந்தெந்த அற்புதங்கள் மனிதனை தாழ்விலிருந்து மேம்படுத்த உதவியதோ, எவையெவை மாந்தர் குலத்திற்கு மனோ தைரியத்தையும், மானத்தோடு தலை நிமிர்ந்து வாழும் தர்மாவேசத்தையும் ஊட்டியதோ, அவற்றையெல்லாம் தெய்வீகம் என மக்கள்போற்றி வந்திருக்கின்றனர்.

ஆம்; மகான்கள் தனிப்பட்ட மக்களுக்காக செய்த அற்புதங்களைவிட, ஒரு சமுதாயத்துக்குச் செய்த மகிமைகளைத்தான் தெய்வீகமானவையாக பெரிதும் போற்றப்படுகின்றன.

கண்ணன் பால வயதில் பூதகியைப் பால் குடித்துக் கொன்றதையும், கம்சனால் ஏவப்பட்ட அரக்கர்களை ஒவ்வொருவராகக் கொன்றதையும் அருள் விளையாட்டுக்காக போற்றினாலும் வஞ்சனைக்கும் சூதுக்கும் உள்ளாகிக் கிடந்த பஞ்ச பாண்டவர்களுக்காக தர்மயுத்தம் நடத்தியதையும், உலகம் உய்ய கீதோபதேசம் செய்ததையும்தான் உன்னதத் தெய்வீக அற்புதங்களாக, உலகம் போற்றுகிறது.

அந்த வழியில் எத்தனையோ மகான்கள் சிறிதாகவும், பெரிதாகவும் தங்கள் மகத்துவங்களை உலகில் புரிந்துள்ளார்கள். அந்த கண்ணோட்டத்தில் நோக்கினால்—

தென் திருவிதாங்கூரில் சமூக அநீதிக்கும் அரசாங்க கொடுமைக்கும் உள்ளாகியிருந்த சான்றோர் குல மக்களை அவர்கள் மீட்சி அறியாது தவித்தபோது, தன் ஆன்மீக ஒளியாலும் சமுதாய மறுமலர்ச்சி சித்தாந்தங்களாலும் அவர்களுக்கு உயர்வு அளித்த அய்யா நாராயணரின் அற்புதங்களை தெய்வீகம் என்பதா, மனித குல புரட்சி என்பதா...?

18-ம் நூற்றாண்டின் இறுதி வரை சான்றோர் இனத்தவருக்கு இழைக்கப்கபட்ட கொடுமைகளுக்கு விடியலே இல்லை. அவர்களை ஒளி நோக்கு நடத்துவாரும் இல்லை.

1799-ல் தளவாய் வேலுதம்பி, திருவிதாங்கூர் மன்னராட்சி இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு செய்த கொடுமைகளுக்கு எதிராக பொது மக்களை திரட்டி சில வெற்றிகளைப் பெற்றார். ஆனால் அதன் பலன் சுமார் 10 ஆண்டுகளே (1809 வரை) பலனளித்தன.

அதன் பின் மீண்டும் குழப்பமான நிலை உருவாகத் தொடங்கியபோது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தோள் கொடுக்க கிறிஸ்துவம் அங்கு மலர்ந்தது.

1806-ல் மைலாடியில் நிறுவப்பட்ட கிறிஸ்துவ சபையின் பணி, வெள்ளை ஆதிக்கத்தால் ஆல் போல் பரவி வளர்ந்தது.

கிறிஸ்துவத்தைத் தழுவிய சான்றோருக்கும், தாழ்த்தப் பட்டோருக்கும் ஆங்கிலேயக் கம்பெனியாரின் பாதுகாப்பு ஏற்பட்டது. ஆங்கிலேயருக்கு திருவிதாங்கூர் மன்னர் கட்டுப்பட்டே இருந்ததால், கிறிஸ்துவத்தைத் தழுவிய தாழ்த்தப் பட்டோரும் சான்றோர் இனத்தவரும் ஒரு சமூகப் பாதுகாப்பைப் பெற்தனர்.

கிறிஸ்துவ சான்றோர், ஆங்கிலேயரின் உதவியால் உயர்ந்த கல்வி பெற்றனர். வேலை வாய்ப்பு பெற்றனர். பொருளாதார உயர்வோடு, ஆங்கிலேயருக்கு நெருக்கமானவர்களாகி விட்டதால் ஒரு சமூக அந்தஸ்தும் கிடைத்தது.

எனவே கிறிஸ்துவத்தில் இணைந்த சான்றோர் மற்ற சான்றோர்கள் அனுபவித்த கொடுமைகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டனர்.

உயர் சாதி முன்னால், சான்றோர் பெண்கள் தோள் சீலை போடக்கூடாது என்ற கட்டளையை உடைத்துக் கொண்டு, கிறிஸ்துவப் பெண்மணிகள் உயர் இனத்தவர்போல் மேல் ஆடை அணிந்தனர். அவர்களைத் தடுக்க முடியவில்லை.

கிறிஸ்துவ சான்றோர்கள், மற்ற சான்றோர்கள் அனுபவித்த கொடிய வரி விதிப்பிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொண்டனர். அவர்களிடமிருந்த தாழ்வு மனப்பான்மை நீங்கி, சமூகத்தின் மேல் மட்டத்தினருக்குச் சமமாக தங்கள் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டனர்.

ஆனால்—

கிறிஸ்துவத்தில் தன்னை இணைத்துக் கொள்ள விரும்பாத சான்றோர் இனத்தவர்கள், பழைய கொடுமைகளிலிருந்து விடுபட முடியாமல் ஊமைகளாய், புழுக்களாய் தவித்தனர்.

அப்போது—

அந்த சான்றோர் இனத்தவருக்கும் அவர்களுக்கு சமமாகப் பின் தங்கியிருந்த பதினெட்டு சாதியினருக்கும் மீட்சி நாயகனாக தோன்றியவர் தான்.... சாமித்தோப்பில் அவதரித்த முத்துக்குட்டி சுவாமிகள்!

கி.பி. 1809-ல் பொன்னு-வெயிலாள் தம்பதியருக்கு மகனாக அவர் பிறந்ததும்,

'முடிசூடும் பெருமாள்' என்று திருநாமம் இடுகிறார்கள் பெரியோர்கள்.

ஆனால், 'ஒரு தாழ்ந்த சான்றோர் இனத்தில் பிறந்த பிள்ளைக்கு முடிசூடும் பெருமாள் என்று பெயர் வைப்பதா?' என்று மேலோரும் அதிகாரிகளும் தடுப்பாணை பிறப்பிக்கவே, பெற்றவர்கள் தலை வணங்குகின்றனர். அப்படித் தலை வணங்கித்தான் ஆக வேண்டும், என்பது அப்போதைய சமூக நீதி.

உடனே 'முடி சூடும் பெருமாள்' என்ற பெயரை மாற்றி 'முத்துக்குட்டி' என்று பெயரிடுகின்றனர்.

அதன் பின், 1833-வரை அந்த இளைஞரின் சாதனைகளோ, மகத்துவங்களோ யாருக்கும் தெரியக் கிடைக்கவில்லை.

சுமார் இருபத்து நான்கு வயது இளைஞனாக திருச்செந்தூர் முருகப் பெருமானைத் தரிசிக்க குடும்பத்தோடு சென்றபோதுதான்—

அந்த அற்புதம் நிகழ்கிறது.

கடலில் நீராடச் சென்ற இளைஞனான முத்துக் குட்டியை கடல் அலைகள் இழுத்துச் செல்கின்றன. மூன்று நாட்கள் பெற்றோரும், உற்றாரும் கரையில் நின்று தரிசிக்கின்றனர். மூன்று நாட்களுக்குப் பின், விஞ்சை பெற்றவராய், 'முத்துக்குட்டி' என்ற நாமம் போச்சிய 'அய்யா வைகுண்டராக' கடலுக் குள் இருந்து திரும்பி வருகிறார்.

திரும்பி வந்த திருமகன், பெற்றோரைப் பார்த்து, 'அம்மா, இனி நான் உன் பிள்ளை அல்ல. உலகுக்குப் பணி செய்ய நாராயணன் அருள் பெற்று வந்த மகன்...' என்கிறார். அன்று முதல் சமுதாய வழிகாட்டியானார்.

அன்று அவர் பெற்று வந்த 'விஞ்சை' என்னும் அருள் ஞானம் எழுச்சி முற்றாக, பல்வேறு முனை களாக விரிந்து, பலவாகி தாழ்வுற்ற சமுதாய மக்களை வாழ்விக்கத் தொடங்கியது.

அவர்களை சமுதாயத்தில் தலை நிமிரச் செய்த சமுதாய புரட்சி என்ன, இன்றும் (20-ம் நூற்றாண் டின் இறுதியிலும்) வியந்து போற்றத் தக்கவாறு

அவர் அருளிய தீர்க்க தரிசனங்கள் என்ன, அருள் பொங்கும் ஆன்மீகத் திருவிளையாடல்கள் என்ன?

அய்யா வைகுண்டரின் திடீர் எழுச்சியால், முதலில், தான் சார்ந்திருந்த இனத்தவரை நிமித்து கிறார்.

தாழ்வுற்ற மக்களைப் பார்த்து, 'நீங்கள் எல்லா ரும் நாராயணரின் பிள்ளைகள்' என்கிறார். (இதையேதான், பின்னர் காந்தி மகான் கைக் கொண்டு 'ஹரிஜன்' என்று தாழ்த்தப்பட்டோரை உபயோகித்தார்.)

'சான்றோர் இனம் பாரம்பரியம் மிக்கது. அன்னை பத்ரகாளியின் பிள்ளைகள் சோழர்களை வென்ற இனம்' இப்படி அவர் கூறிய எழுச்சி மிக்க உறைகள், அந்த இனத்துக்கே தன்னம்பிக்கை ஊட்டியது.

மேலோர் ஆதிக்கத்தையும் மன்னரின் தீக் கட்டளைகளையும் எதிர்க்கச் செய்தது.

அந்த புதிய மதக்கலாச்சாரம்தான் 'அய்யா வழி' என்று போற்றப்பட்டது; அதைச் சார்ந்த மக்களை 'அன்புக் கொடி மக்கள்' என்று குறிக்கப் பட்டனர். ஆன்மீகத்தில் ஒரு புதிய சமரசத்தை ஏற்படுத்தியதோடு, சமூக எழுச்சியையும் உண்டாக் கினார் அய்யா.

'மக்களே, அடிமைபோல் நீங்கள் இடையில் கட்டும் துண்டுகளை, தலைப்பாகையாகக் கட்டிக் கொண்டு நிமிர்ந்து செல்லுங்கள்' என்றார். அய்யா அதன் அடையாளமாகவே இன்றும் அய்யா வழி மக்கள் தலையில் தலைப்பாகை கட்டியே பூஜை செய்கிறார்கள்.

பெண்கள் தோள் சீலை அணிந்து நிமிர்ந்து நின்றனர். நிமிர்ந்து எழுந்த இனத்தையும், அதனை நிமிரச் செய்தவர்களையும் ஒடுக்க, திருவி தாங்கூர் மன்னர் பல கொடுமைகளை ஏவி விடு கிறார். அந்தக் கொடுமைகளே, அய்யாவின் வெற்றிச் சாதனைகளாகின்றன... அவை....

4. ‘விசிறி சுவாமிகள்’ அய்யாவின் அடுத்த அவதாரமா?

தான் பெரிதென்று தப்பு மிகச் செய்யாமல்
வான் பெரிதென்று மகிழ்ந்திருந்தார் அம்மானை’

—அகிலம் பக். (10)

‘அய்யா நாராயணர்’ கட்டுரைத் தொடர், நான் எதிர்பார்த்தைவிட அதிக வரவேற்பைப் பெற்றிருக்கிறது மகிழ்ச்சி நன்றி.

நிறைய பேர், ‘இதுவரை ‘அய்யா வழி’ என்ற புதுமையான ஆன்மீக கலாச்சாரத்தைப் பற்றி கேள்விப்பட்டதில்லையே! என்று வியப்பைத் தெரிவித்திருக்கிறார்கள்.

‘அய்யாவழி’யை ஒழுகிவரும் அன்பர்கள் பம்பாய் போன்ற நகரங்களிலிருந்தும் தங்கள் மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள்.

அதோடு சில அன்பர்கள், சில புதிய தகவல்களைக் கூறியிருக்கிறார்கள். ஓரிருவர் சில 'முரண்பாடு'களையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இந்தத் தொடரின் அடுத்த பகுதிக்குச் செல்லும் முன், அந்த அன்பர்கள் கூறியிருக்கும் தகவல்களையும், அதற்கான என் விளக்கங்களையும் இக்கட்டுரையில் பதிவு செய்ய விரும்புகிறேன். அது ஆய்வில் ஓர் முக்கிய அம்சமும்கூட.

கா. கலைக்கோட்டதயம் (1, வாத்தியார் தோட்டம், முதல் தெரு, ரெங்கராஜபுரம், சென்னை-24) என்ற அன்பர், அவருடைய தந்தையார் ஆய்வு செய்திருந்த சில வரலாற்றுத் தகவல்களைத் தெரிவிக்கிறார். அவர் கடிதத்தின் முக்கிய பகுதிகள் இவை.

சான்றோர் (நாடார்) குலத்தில் பிறந்த மகானை இளைய தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தும் தங்களுடைய முயற்சி போற்றதலுக்குரியது.

என்னுடைய தந்தை அமரர் பொன். காசி உதயம் ஒரு பிரபல நாளிதழில் 'மகான் முத்துக்குட்டி சுவாமிகள் வரலாறு' என்று தொடராக எழுதினார்கள். பின்னர் அவற்றை 1967-ல், 'சேர நாட்டை கொடிகட்டி ஆண்ட நாடார்கள் வீர வரலாறு 'பகவான் வைகுண்ட சுவாமிகள் வரலாறு' என்று புத்தமாக வெளியிட்டார்கள்.

1978-ல் திருவண்ணாமலையில் இருக்கும் யோகிராம் சுரத்குமார் விசிறி சாமியாரின் வாழ்க்கை வரலாற்றை புத்தகமாக வெளியிட்டார்கள் அதில் 'அய்யா வைகுண்டரின் மறு அவதாரம்தான் யோகிராம் சுரத்குமார்' என்று ஒரு சில ஆதாரங்கள் முன் வைத்து எழுதினார்கள்.

தாங்கள் எழுதும் அய்யா நாராயணர் தொடரில் 'ஒரு தாழ்ந்த சான்றோர் இனத்தில் பிறந்த பிள்ளைக்கு முடிசூடும் பெருமாள் என்று பெயர் வைப்பதா? என்று மேலோரும், அதிகாரிகளும் தடுப்பாணை பிறப்பிக்கவே பெற்றவர்கள் தலை வணங்குகின்றனர். அப்படி தலைவணங்கித்தான் ஆக வேண்டும், என்பது அப்போதைய சமூக நீதி' என்று குறிப்பிட்டிருந்தீர்கள்.

'சமூக நீதி' என்று கூறுகிறீர்கள். ஆனால் அதற்கான விளக்கம் கூறப்படவில்லை. 'முடிசூடும் பெருமாளில்' அப்படி என்ன சமூகநீதி இருக்கிறது என்றும் விளக்கப்படவில்லை.

நான் இப்படி எழுதுவதால் தவறுதலாக எடுத்துக் கொள்ளாதீர்கள். உங்களுடைய எழுத்தில் குற்றம் கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காக எழுதவில்லை. நீங்கள் எனக்கு அறிமுகம் இல்லா விட்டாலும், உங்கள் எழுத்துக்கள் எனக்கு அறிமுகம் உண்டு. உங்களை என்றும் என் இதய சிம்மாசனத்தில் வைத்து மதிப்பவன்.

பொதுவாக திராவிடத் தமிழர்கள் தங்களைப் பற்றி தாழ்வாக நினைத்து வருகிறார்கள். தாழ்வு மனப்பான்மை அவர்களின் கூடப்பிறந்த குணமாகி விட்டது. தங்களுடைய பழம் பெருமைப் பற்றி தெரிந்து கொள்வதோ? அதைப் பற்றி கவலைப் படுவதோ கிடையாது.

சேர நாட்டில் கி. பி. 1724-ல் அரசு கட்டி லேறிய மார்த்தாண்ட வர்மா காலத்திற்கு பிறகு தான், நாடார்கள் சான்றோர்) அடக்கு முறை களுக்கு உள்ளானார்கள்.

சேர நாட்டை ஆண்ட 'சேரமான் பெருமாள்' வம்சா வழியினர் நாடார் குலத்தை சேர்ந்தவர்கள், பாண்டிய வம்சத்தை சேர்ந்தவர்கள். சேர நாட்டை சேர்ந்த நாஞ்சில் நாட்டை ராமவர்மா என்ற அரசர் ஆண்டு வந்தார். இவரது மறைவிற்கு பிறகு இவரது மூத்த மகன் பப்பு தம்பிதான் ஆட்சிக்கு வர வேண்டும். ஆனால் ராமவர்மாவின் சகோதரி மகன் மார்த்தாண்ட வர்மா மருமக்கள் வழி முறை யில் கி. பி. 1724-ல் ஆட்சியைப் பிடித்தார்.

சேர நாட்டின் பெரும்பான்மை மக்களான நாடார்களும், ஈழவர்களும் மருமக்கள் ஆட்சியை கடுமையாக எதிர்த்து வந்தனர்.

மார்த்தாண்டவர்மாவுக்கு சிறு பான்மையின ரான பிற இனத்தவர்கள் மட்டுமே உறுதுணையாக

இருந்தனர். அதைத் தொடர்ந்து உள்நாட்டுக் கலகம் தோன்றியது. உள்நாட்டு கலகத்தை கண்டு கலங்கிய மார்த்தாண்டவர்மா, ஆட்சியை சேரமான் பெருமாள் வம்சா வழியை சேர்ந்தவர்களின் அதாவது நாடார்களின் குலத்தெய்வமான திருவனந்தபுரம் அனந்தபத்மநாப சுவாமி கோவிலுக்கு ஆட்சியை அர்ப்பணிப்பதாகவும், தான் சுவாமியின் தாசனாக இருந்து ஆட்சி செய்வதாகவும் அறிவித்தார். நாடார்களின் குலதெய்வத்திடம் ஆட்சி ஒப்படைக்கப்பட்டதாக அறிவித்ததால் நாடார்கள் அடங்கினார்கள்.

சேரமான் பெருமாள் வம்சா வழியைச் சேர்ந்த மார்த்தாண்டவர்மா, மருமக்கள் வழி முறையில் ஆட்சிக்கு வந்ததால், தன்னுடைய சுய ஜாதியை மறந்தார். மருமக்கள் வழி முறை ஆட்சியை ஆதரித்தவர்களின் பேச்சை கேட்டு நாடார்கள் மீது அடக்கு முறைகளை ஏவி விட்டனர். நாடார்கள் மீது தாடி வரி, முலை வரி, தலை வரி போன்ற வரிகள் விதிக்கப்பட்டன. முட்டுக்கு கீழே துணி அணியக் கூடாது. ஜன்னல் போட்ட வீடு கட்டக் கூடாது போன்ற சட்டங்களும் போடப்பட்டன.

நாடார்கள் தங்கள் மூதாதையர்களான சேரமான் பெருமாள் மரபை மறவாதிருக்க தங்கள் பெயர்களின் கடைசியில் 'பெருமாள்' என்ற பெயரை இணைத்து வந்தனர். ஆனால் மார்த்தாண்டவர்மா காலத்தில் நாடார்கள் பெருமாள்

என்று பெயர் வைக்கக்கூடாது என்று சட்டம் போடப்பட்டது. இந்த அடக்கு முறைகள் மார்த்தாண்டவர்மா காலத்திற்கு பின்னரும் தொடர்ந்து வந்தன.

இந்த வரலாற்று முடிச்சை நீங்கள் முத்துக்குட்டி முடிசூடும் பெருமாள் உடன் இணைத்திருக்கலாம்.

இன்னொரு அன்பர்,

'அய்யா வைகுண்டர் இளைஞர் திருப்பணி இயக்கம்'

(மணலி புதுநகர், சென்னை-600103) தலைவர் பெரும்பத்து, பால். கிருஷ்ணக் கண்ணன் சில கருத்துக்களைத் தெரிவிக்கிறார்:

தாங்கள் 'அய்யா வழி மற்ற வழிபாட்டில் இருந்து வித்தியாசமானது என்பதற்கு உதாரணத்தோடு எழுதியிருந்தீர்கள்; எளிய வழிமுறை கொண்டது அய்யாவழி. ஆனால் சிலர் சமூகத்தில், 'அய்யா வழியை' ஜாதி என்கிற போர்வையினால் மூடிவைக்க முற்படுகிறார்கள். அதாவது அய்யா அவதரித்தது நாடார் இனம். ஆனால் அவர் இந்த குலத்திற்காக பிறந்ததாக பலர் பொய் பிரச்சாரம் செய்கிறார்கள். அய்யா அகிலத்தில் எந்த இடத்திலும், தான் குறிப்பிட்ட சமூகத்திற்காக அவதரித்ததாக சொல்லவில்லை. ஆயர் குலத்தை

ஆளாக்கி வைப்பேன் என்கிறார். ‘சாதி பதினெட்டும் தன்னால் கேடாகும் வரை நீதி யழியாதே நீ சாபம் கூறாதே என்கிறார்’ எனவே தாங்கள் இனி வரும் தொடரிலும் அய்யா, நாடார் குலத்திற்காக மட்டும் அல்ல; நாட்டு மக்களுக்காகத் தான் அவதாரம் எடுத்தார் என்பதை மீண்டும் தெளிவாக ஆதாரத்தோடு எழுதவேண்டும் என்பது அடியேனின் விருப்பம்.

குமரி சிறப்பிதழில் அய்யாவை 1851-ல் சமாதி ஆனதாக குறிப்பிட்டுள்ளீர்கள். இறைவனுக்கு ஏது சமாதி?

அய்யா திருச்செந்தூர் கடலில் விஞ்சை பெற்று வந்த பின்பு தன் தாய் வெயிலாள் அம்மாள் அழுத போது ‘நான் உன் மகன் அல்ல, இந்த மக்கள் துயரம் துடைக்க வந்த வைகுண்ட அவதாரம்’ என்கிறார். எனவே தாங்கள் 1851-ல் சமாதி ஆனதாக குறிப்பிட்டது என் போன்றோருக்கு வேதனை அளிக்கிறது.

ஒவ்வொரு தொடரிலும் அய்யாவின் அகில வாசகங்களையும் இடம்பெற செய்கிறீர்கள். மக்கள் தலை நிமிர்ந்து நிற்கவேண்டும் என்பதற்காக அய்யா தந்த தலைப்பாகையுடன் பல புகைப்படங் களையும் இடம் பெற செய்கிறீர்கள். நாங்கள் உங்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். இந்த

தொடர் சிறப்புடன் அமைய அய்யா உங்களோடு இருந்து வழி நடத்துவார். சென்னை வாழ் அன்பு கொடி மக்கள் சார்பாக உங்களுக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றுமொரு அன்பர் இ. நாராயணப் பெருமாள் நாடார். பி. ஏ. (சோட்டப் பணிக்கன் தேரிவிளை, தெற்கு தாமரைக் குளம், கன்னியாகுமாரி மாவட்டம்) கூறு கிறார்.

தங்கள் கட்டுரை புதிய சிந்தனையுடன் வித்தியாசமாக இருந்தது. இருந்தாலும் தங்களின் முதல் கட்டுரையில் அய்யா வழி அன்பர்கள் நெற்றி யில் இடும் திருநாமத்தை 'வெண்ணிற விபூதிய ஒற்றை நாமமாக இடுவார்கள்' என்று எழுதியுள்ளீர் கள். ஆனால் அய்யாவழி பக்தர்கள் நெற்றியில் இடுவதோ திருமண். இத்திருமண்ணையே. திருநாமமாக நெடு நாமமாக இட்டுக் கொள் கிறார்கள்.

அக்டோபர் 16-31-ம் தேதிய வாசுகியில் அய்யா நாராயணர் கட்டுரையில் முரண்பாடுகள் அதிகமாக காணப்படுகின்றன. முத்துக்குட்டி 22 வயதுவரை உலகில் சாதாரண மனிதனாகவே வாழ்ந்தார். 23-ம் வயதுமுழுவதும் தீராத நோயிலே கழிந்தது.

24-ம் வயதில், தாங்கள் எழுதியுள்ளதுபோல், முத்துக்குட்டி திருச்செந்தூருக்கு திருவிழா பார்க்கச் செல்லவில்லை. மகன் நோயால் அதிகத் துயறுறுவது கண்டு மனம் வெதும்பிய வெயிலாள் அம்மையின் கனவில் திருமால் தோன்றி.

''ஆயிரத் தெட்டாண்டிது நாளில் வருஷம்
மாசி என்ற மாதமிது வாய்த்த தியதி பத்தொன்பது
இம்மாதம் இத் தெய்தி ஏற்ற திருச்செந்தூரில்
நம் மாணைக் கொடியேற்றி நல்ல திருநாள் நடக்கு
அங்குன் மகனை அழைத்து வருவாயானால்
எங்குள் ளோருமறிய இப்பிணியும் தீர்த்து
நல்ல பேறும் கொடுப்போம் நம்மாணை தப்பாது''

என்று மொழிந்தார். அந்த மொழிப்படியே நோயின் கடுமையால் நடக்கக்கூட முடியாதிருந்த முத்துக்குட்டியை வாகன வசதியில்லாத அந்தக் காலத்தில் தொட்டிலில் வைத்து திருச்செந்தூருக்கு தூக்கிச் சென்றார்கள். நடக்க முடியாதிருந்த அவர் தோட்டாவழி ஆற்றின் கரையை கடந்தபின் குதிரையைப்போல் ஓடிச் சென்றதாக அகிலம் கூறுகிறது. அய்யா நாராயணர் கட்டுரையை அகிலத்திற்கு, மற்றும் அருள்நூல் எனப்படும் புனித நூல்களில் காணப்படும் உண்மைகளுக்கு முரண்பாடின்றி எழுதுமாறு தங்களை வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

மனமுவந்து மூன்று அன்பர்களும் தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு நன்றி.

இந்த மூவரின் கருத்துக்களையும் நான் மகிழ்ந்து வரவேற்கிறேன். ஆயினும் இத்தொடர்பற்றிய எனது அணுகுமுறையைப் புரிந்துகொண்டால் எந்த முரண்பாடும் இல்லையென்பது தெரிய வரும்.

அதை அடுத்த பகுதியில் குறிப்பிட்டு விட்டு, கட்டுரையைத் தொடருகிறேன்....

5. தர்மபதியில் உதித்த வைகுண்டராசர்

கோபமாய் விழாதே குவிய சிரியாதே
பாவத்தைக் காணாதே பராக்கிரமம் காட்டாதே!

-அகிலத்திரட்டு (பக், 210)

பல்வேறு கண்ணோட்டங்களில் என் கட்டுரைத் தொடரை அன்பர்கள் அணுகியிருப்பதே, இதன் ஆரோக்கியமான தர்க்கத்துக்கு அறிகுறி என்று உணருகிறேன்.

வரலாற்றுப் பின்னணியைச் சுட்டிக் காட்டிய அன்பர் கலைக்கோட்டு உதயம் 'சேரமான் பெருமாள்' வரலாற்று நிகழ்ச்சிகளை இணைத்திருக்கலாம் என்று தன் விருப்பத்தைத் தெரிவித்திருந்தார்.

இந்தக் கட்டுரையில் விரிவான வரலாற்று ஆராய்ச்சிகள் செய்வது என் நோக்கமல்ல. வரலாற்றைப் பொறுத்த அளவில், அய்யா

வைகுண்டர் சாமித்தோப்பு பகுதியில் விடிவு காலத்தில், அவர் சார்ந்திருந்த குலம் எந்த அளவு ஒடுக்கப்பட்டிருந்தது என்பதைச் சுட்டிக்காட்டி, தன் குலத்துக்காக மட்டுமல்லாது, தாழ்வுற்றிருந்த அனைத்து இன மக்களுக்கும் எப்படி ஆன்மீக சமுதாய நெறியூட்டினார் அய்யா? என்பதைக் கோடிட்டுக் காட்டுவது என் நோக்கம். நீண்ட ஆழமான வரலாற்று ஆய்வுகள், என் கட்டுரையின் நோக்கத்தைத் திசைதிருப்பி விடலாம். அதைநான் விரும்பவில்லை. எனக்கு அத்தகைய வரலாற்று ஆய்வில் இப்போது வேட்கையும் கிடையாது. 'அய்யா'வைப் பற்றிய என் ஆய்வு ஒருசிறிய ஆரம்பம் மட்டுமே. இன்னும் பல ஆர்வமுள்ள சிந்தனையாளர்கள், அய்யாவைப்பற்றி புதிய புதிய கோணங்களில் ஆய்வை மேற்கொள்ளக் கூடும். அவர்களுக்கு இடம் தந்துவிட்டு ஆழமான வரலாற்று ஆய்வில் சிந்தனையைச் செலுத்தாமல் நான் விலகிக்கொள்ள வேண்டியதிருக்கிறது.

இன்னொரு கருத்தையும் குறிப்பிட்டார். கலைக்கோட்டு உதயம், 'அய்யா நாராயணின் மறு அவதாரம்தான் திருவண்ணாமலையில் இருக்கும் யோகிராம் சுரத்குமார்' என்று அவருடைய தந்தையார் அமரர். பொன்காசி உதயம் அபிப்பிராயப்படுவதாக, குறிப்பிட்டிருந்தார்.

அந்தக் கருத்தை 'அய்யா வழி'யைச் சேர்ந்த அன்புக்கொடி மக்கள் 'அய்யா நாராயணர்' இளைஞர் இயக்கத் தலைவர் பெரும்பத்துபால்

கிருஷ்ணக் கண்ணன் முதல் சகோதரி சாரதா ராஜா கிருஷ்ணன் (46, சத்ய மூர்த்தி தெரு, திருநெல் வேலி டவுன்) உட்பட ஏராளமானவர்கள் ஏற்க வில்லை.

அய்யாவுக்கு மறு அவதாரமே கிடையாது. சமாதியானால் தானே மறு அவதாரமே?' என்று ஆணித்தரமாகக் கேட்கிறார்கள் அவர்கள்.

சுவாமித்தோப்பில் உள்ள பால பிரஜாபதி அடிகளார் அகிலத் திரட்டைச் சுட்டிக்காட்டி, 'அய்யாவின் மறு அவதாரம் என்று பலர் பல்வேறு பெயர்களில் தங்களை அழைத்துக்கொள்வது எல்லாம் ஆதாரமற்றவை, அய்யா அருளிய அகிலத் திரட்டுக்கு ஒவ்வாதவை' என்கிறார் அவர்.'

'யோகிராம் சுரத்குமார், 'பிரகளத்தி வாரி' தங்கையன் சாமி, 'ராசையா நாடார், 'துரைசாமி என்று பல்வேறு பெயர்களை அய்யாவின் மறு அவ தாரமாகக் குறிப்பிடுவது வெகு காலமாக நிலவிவரும் ஆதாரமற்ற சலசலப்பு அய்யாவே இதைப்பற்றி தீர்க்கத் தரிசனமாகக் கூறியிருக்கிறார்' என்ற அடிகளார் அகலத்திரட்டிலுள்ள கீழ்கண்ட பாகங் களையும் சுட்டிக் காட்டுகிறார்.

நந்தன் நான்என்பான், நாரணக்கோன் ராமன்என்பான்
முன் உதித்து வந்தவர்கெல்லாம் முன் உதித்து வந்
தேன் என்பான்.
கண்ட கண்ட அற்புதங்கள் கனகோடி செய்திடுவான்.
இந்த பேரோ என்றிடுவர்; சூட்சுமம் அறியாமல் தொல்
புவி மயங்கும்'

இப்படிபலகருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. என்னைப் பொறுத்த அளவில், இந்த சர்ச்சைக்குள் நுழைந்து வாதம் பிரதிவாதங்களில் ஈடுபடுவது என் நோக்கமல்ல. அது பல ஆயிரம் பக்கங்களில் மேற் கொள்ள வேண்டிய ஆராய்ச்சி. அப்போதும் யாராலும்எந்த முடிவுக்கும் வரமுடியாது. ஒவ்வொரு வருக்கும் அவரவர் நம்பிக்கையேவழிகாட்டி. தம் தம் நம்பிக்கை பலத்திலேயே, ஒவ்வொருவரின் மதப் பற்றுதலும் ஏற்படுகிறது.

அய்யாவுக்கு மறு அவதாரம் உண்டென்பவர் கள் கட்சியிலும் நான் இல்லை; அய்யாவுக்கு மறு அவதாரம் இல்லையென்போர் சார்பாகவும் நான் வாதாட விரும்பவில்லை.

என் கட்டுரையின் நோக்கம் ஒன்றே ஒன்று தான். புதிதாக ஒரு இறைவழிக் கலாச்சாரத்தைத் தோற்றுவித்து. தம் அன்புக்கொடி மக்களுக்கு வழி காட்டி அருள் புரிந்த அய்யா வைகுண்டர் இந்தப் பூமியில் நிலைநாட்டிய சமதர்மம் என்ன? அவருடைய தீர்க்கத் தரிசனங்கள் என்னென்ன? என்பதை அகிலத்திரட்டு வாயிலாகவும் அருள் நூல் வாயிலாகவும் உணர்ந்து வெளிப்படுவது மட்டுமே!

இ. நாராயணப் பெருமாள் என்ற அன்பர், ‘அகிலத் திரட்’டில் உள்ள எல்லா விவரங்களும் இக்கட்டுரையில் இடம் பெற வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

ஒரு குறிப்பிட்ட நோக்குடன் எழுதப்படும் இந்தத் தொடரில் 'அகிலத்திரட்டு' ஏட்டிலிருக்கும் அனைத்து விவரங்களையும் இடம் பெறச் செய்வது சாத்தியமல்ல.

முத்துக்குட்டி சுவாமிகள் 23 வயது வரை நோய்ப் படுக்கையில் இருந்ததையோ, நோயைக் குணப்படுத்த திருச்செந்தூருக்குச் சென்றதையோ நான் கட்டுரையில் இடம்பெறச் செய்யவில்லை என்பது அவருடைய மனக்குறையாக இருக்கிறது.

அய்யாவின் பால்ய கால நோயைப்பற்றி குறிப்பிடுவதில் எனக்கு தயக்கமும் கிடையாது; அதனால் சுவாமிகளின் பெருமைக்கு குறைவு என்ற நிலையும் கிடையாது.

பிற்காலத்தில் 'மண்ணும் தண்ணீரும் மருந்து' என்று தன்னைத் தேடி வந்த பிணியாளர்களையெல்லாம் சுகப்படுத்தி சரீர ஆரோக்கியம் தந்த சுவாமிகளுக்கு 'இளமைப் பருவத்தில் உடல் சுகவீனம் இருந்தது' என்பது முரண்பாடான தகவல் அல்ல.

பகவான் கிருஷ்ணர்-ராமபிரான் ஆகியோர் பூமியில் அவதாரமாகத் தோன்றியபோது, அந்தந்த மானிடத் தேகங்களுக்குரிய நியதிகளின்படி இன்ப துன்பங்களை அனுபவித்து இருக்கிறார்கள். தெய்வம் என்பதற்காக எந்த அவதாரமும் தம்

உடற்பிணிகளை விலக்கியோ, அல்லது மறைத்தோ பூமிப்பணியைச் செய்ததில்லை.

பூர்ண அவதாரம் என போற்றப்படும் கிருஷ்ணனும்; ஒரு சாதாரண மனிதப் பிறவியைப்போலவே வேடன் எய்த அம்பு பட்டுத் தான் உயிரை நீத்தார்.

தன் கால்தூசியால் கல்லாய்ப்போன அகலிகையை பெண்ணாக்கிய ராமபிரான்கூட சாதாரண மனிதனைப்போல தன் உடலுக்குத் துன்பங்களை ஏற்றிருந்தார். மரணமே இல்லாத அவதாரராமன், இந்திரஜித் ஏவிய அஸ்திரத்தால் தன் தம்பியோடு மரண மூர்ச்சை அடைந்து வீழ்ந்தார். ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையைக் கொண்டு வந்துதான் தெய்வ அவதாரங்களை உயிர்ப்பிக்க வேண்டியதாயிற்று!

இதனால் இந்த அவதாரங்களின் பெருமைக்குத் தாழ்வு ஏற்படவில்லை. ஏனென்றால் மனிதனாக மனிதர்கள் மத்தியில் தெய்வங்கள் அவதரிக்கும்போது மனிதர்களுக்குள் ஒருவராகவே அவர்கள் வாழ்வின் சுக துக்கங்களை ஏற்றிருந்திருக்கிறார்கள்

அதுபோல்—

பகவான் வைகுண்டர் 23 வயதுவரை உடற்பிணி வசப்பட்டிருந்ததாகவும், திருச்செந்தூருக்கு பெற்றோரால் பிணிதீர்க்க அழைத்துச் செல்லப்பட்டதும் அங்கே அவரே 'விஞ்சை' (ஞானம்)

பெற்று மனுக்குலத்துக்கு தான் செய்ய வேண்டிய ஆன்மீக சமூகப் பணிகளுக்காகத் தன்னை அர்ப் பணித்தவாறு தன் தாயிடம் 'நான் இனி உன் மகன் அல்ல; மக்கள் பிணி தீர்க்க வந்த நாராயணரின் அவதாரம்' என்று கூறி தவ வாழ்க்கை மேற்கொள் ளச் சென்றதும்,

மனித அவதாரத்தின் இயல்பான சம்பவங் களே!

அப்படியிருந்தும் அந்த பால்ய கால சம்பவங் களை நான் என் கட்டுரையில் பரித்துரைக்காத தற்கு காரணம் உண்டு.

அய்யா வைகுண்டரே, அந்தப் பகுதியைச் சுருக்கித்தான் அருளுரை வழங்கியிருக்கிறார்....

அகிலத்திரட்டு நூலில் மிகவும் விரிவாக பல்வேறு அவதாரங்களைப்பற்றி விளக்கிக்கூறிய சுவாமிகள்—

அருள் நூலின் தொடக்கத்திலேயே தான் விஞ்சை பெற்று அருள்பணியைத் தொடங்கியதை, ரத்னச் சுருக்கமாகவே இப்படிக் கூறுகிறார் :

''வறும்பகல் தொள்ளாயிரத்து
தொண்ணூற்றெட்டாண்டில்
பரலோகச் சங்கம் கூடிக்
கலியுகக் கொடுமை அதிகமென்று கண்டு
திருவாசகம் எழுதிப் பார்ப்பார் வசம் அனுப்பி

சகலரும் தெரியும்படி சொல்லச்
சொல்லா திருந்ததினாலே
திருவாசகத்தின்படி
ஆயிரத்தியெட்டாமாண்டு
திருச்சம்பதியில் கடலில் குளிக்க காணாமல்
விஞ்சை பெற்று
மூன்றாம் நாள் கரைசேர்ந்து
பூவண்டன்தோப்பில் ஆறு வருடம் தவமிருந்து
பின்
தண்ணீர் மண்ணால் சகல நோயை தீர்த்து
இருக்கும் சமயம்
இராசசோதனை கழித்துப்பின்...''

எனவே நானும் அதையொட்டிய சுவாமிகளின் தவவாழ்க்கை வரலாற்றைத் தொடருகிறேன்—

6. பூவண்டன் தோப்பிலே

வரம்பு தப்பாதே வழிதவறி நில்லாதே
பரம்பூமிக் கண்டு பாவித்திருமகனே

ஞானம், தியானம், இரண்டும் ஆன்மீகத்தில் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவை. இந்தப் பூமியில் அவதரித்த தெய்வ அவதாரங்களும் சரி, புண்ணிய மூர்த்திகளும் சரி இந்த இரண்டு சக்திகளைக் கொண்டே ஆன்மீகத்தை புலப்படுத்தியிருக்கிறார்கள். புத்தர் பல காலம் தியானத்திலிருந்து பின் ஞானத்தைப் பெற்றார்.

ஞானமாய் பூவுலகில் எழுந்தருளிய தெய்வ அவதாரங்கள் நம் கண் முன்னே தியானம் என்ற தவத்தை மேற்கொண்டு வழிகாட்டி இருக்கிறார்கள். ராவண யுத்தம் தொடங்கும் முன்னும் பின்னும் ராமபிரான் ஈசனை நோக்கி தியானம் செய்திருக்கிறார்.

பாலாற்றங்கரையில் அன்னை காமாட்சி ஈசனை மண்ணினால் வடிவம் செய்து தியானம் செய்திருக்கிறார்.

தாமிரபரணி தீரத்தில் அன்னை காந்திமதி யம்மாள் 32 அறங்களும் தழைக்க தியானம் செய்திருக்கிறார்.

இந்த தெய்வ அவதாரங்களின் தியான ஞானங்கள் உலகளாவியவை.

ஏசுபிரான்கூட தாம் உலக சேவைக்கு வெளிப்படுமுன் தவ வாழ்க்கை மேற்கொண்டதாக கூறப்படுகிறது.

அதைப்போலவே—

முத்துக்குட்டி சுவாமிகள் திருச்சந்தூர் பதிக்கு சென்று ஞானம் என்னும் விஞ்ஞை பெற்று சுவாமித்தோப்புக்கு திரும்புகிறார்.

திரும்பும் வழியிலேயே அவர் தம் தெய்வீக சக்தியை புலப்படுத்தும் வண்ணம் சில அற்புதங்களை செய்கிறார். அதையே அவர் தன் திருவாயால் அருள் நூலில்,

'தாய்கிழவிக்குக் கொஞ்சம் அதிசயங்களைக் காட்டி
சத்தியமும் கொண்டேனையோ சிவனே அய்யா'

என்றார்.

அப்போதே மக்களை அதிசயத்தில் ஆழ்த்தும் அற்புதங்கள் செய்ய வல்லவராக இருந்தும் அவர் உடனடியாக உபதேசப் பணியிலோ ஆன்மீகத் தொண்டிலேயோ ஈடுபடவில்லை.

அவர் உடனடியாக பூவண்டன் தோப்பு என்ற பகுதியில் 6 வருட காலம் தவத்தில் ஈடுபடுகிறார்.

'அன்று சுவாமிகள் தவம் செய்த இடம் இது தான்' என்று சாமித் தோப்பிலுள்ள ஆலயத்தின் வடக்கு வாசல் பகுதியிலுள்ள சதுரப்பரப்பை நமக்கு சுட்டிக்காட்டுகிறார். வணக்கத்துக்குரிய பூஜித குருபால பிரஜாபதி அடிகளார்.

இன்றைய அந்த வடக்கு வாசலில், முதல் இரண்டாண்டு காலம் பூமிக்குள்ளும், அடுத்து இரண்டாண்டு காலம் பூமியின் மேலிருந்தும் தொடர்ந்து இரண்டு வருடகாலம் நாற்கட்டிலில் அமர்ந்தும் தவம் செய்ததாக அடிகளார் நமக்கு விளக்கம் தந்து உதவுகிறார்.

அந்தக் காலத்தில் சுவாமிகள் பயன்படுத்திய கட்டிலின் சாயலில் ஒரு புனிதக்கட்டில் இன்று ஆலயத்தில் பேணிக் காப்பாற்றப்படுகிறது.

சாதாரண கட்டில்களைவிட உருவத்திலும், அமைப்பிலும் வித்தியாசமாக இருக்கிறது இந்தக் கட்டில்.

இவ்வாறு மக்களைவிட்டு விலகி காட்டில் சென்றோ, கடுமையான முறைகளைக் கையாண்டோ தவம் செய்து ஒரு வித்தியாசத் தன்மையைக் காட்டாமல் மக்களோடு மக்களாக மக்கள் பயன்படுத்தும் பொருள்களை சம்பந்தப்

படுத்தியே தன் 6 ஆண்டு காலத் தவத்தை நிறைவேற்றியிருக்கிறார் வைகுண்டர். அந்த தவ வாழ்க்கையின்போது மக்களோடு மக்களாக அவர் அருளாய் இயங்கியபோது அவரை 'பேயன்' என்றும், 'பித்தன்' என்றும நிந்தித்தவர்கள் ஏராளம். கல் கொண்டு எறிந்தவர்களும் உண்டு.

ஆனால் அவர்களிடம் சுவாமிகளின் அணுகுமுறை மிகவும் வித்தியாசமாக தென்படுகிறது.

அவர் தன்னை பார்த்து சீறியவர்களையும், நிந்தித்தவர்களையும் பார்த்து நிந்திக்கவில்லை. தனக்காக பொருமுபவர்களைப்பார்த்து, 'தாழ்ந்திரு என் மகனே! சட்டைக்குள் பதிந்து சார்ந்திரு என் மகனே, கோபமாய் விழாதே' என்று கட்டுப் படுத்துவதோடு,

'நீசக்குலங்கள் நின்று அடிக்க வருவார்
சரித்துக் கொடு மகனே சற்று மலங்காதே'

என்று அறம் போதிக்கிறார்.

ஒரு கனிந்த மனிதநேய தவச்சீலரிடமிருந்து மட்டுமே இத்தகைய அருள்வாக்கு வெளிப்படும்.

மற்றவர்கள் அடிக்க வருவதற்கும் திட்டுவதற்கும் காரணம், ஒரு தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த ஒருவர் தெய்வீக அருள் பெற்று திகழ்வதை அப்போதிருந்த உயர் இனத்தவர்களால் ஒப்புக்

கொள்ள முடியவில்லை. இப்படி தவ வாழ்க்கை மேற்கொண்ட வைகுண்ட சுவாமி வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியும் ஏசுபிரான் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவமும் மிகவும் அதிசயமாக ஒத்திருக்க்ன்றன.

அதுதான் பேய்களைக் கட்டுப்படுத்தும் ஒரு சம்பவம்.

ஏசுபிரான் வாழ்க்கையில் நடந்த அந்த சம்பவத்தை மத்தேயு தன் சுவிஷேசத்தில் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறார்.

இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்தி லிருந்து கரையேறினவுடனே இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவைப் போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.

அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி; இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. (மத்தேயு 16 : 3, 16, 17)

மத்தேயு 4-வது அதிகாரம்;

அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப் படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்கு கொண்டு போகப்பட்டார்.

அவர் இரவும், பகலும் நாற்பது நாள் உபவாசமாயிருந்த பின்பு, அவருக்குப் பசி உண்டாயிற்று.

அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து, நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்.

அவர் பிரதியுத்திரமாக; மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.

அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டு போய் தேவாலயத்து உப்பரிக்கையின் மேல் அவரை நிறுத்தி,

நீர் தேவனுடைய குமாரனேயானால், தாழக் குதியும்; ஏனெனில், நம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார் உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக் கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான்.

அதற்கு இயேசு உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார்.

மறுபடியும் பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின் மேல் கொண்டுபோய் உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்கு காண்பித்து,

நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்.

அப்பொழுது இயேசு; அப்பாலே போ சாத்தானே. உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.

அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப் போனானான். உடனே தேவ தூதர்கள் வந்து, அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.

—பைபிள்

அய்யர் வைகுண்டரின் வாழ்க்கையிலும் அவர் தவ வாழ்க்கையிலும் இப்படி ஒரு பேய்ச் சம்பவம் வருகிறது.

அவர் தன் தவநிலை கடந்து அந்தத் தவத்திற்கு ஏற்பட்ட சோதனைகளையும் முறியடித்த நிலையில் அவரிடம் மக்கள் ஒரு முறையீட்டை செய்கிறார்கள்.

பேய்கள் மக்கள் மத்தியில் பெரிய துன்பங்கள் தருவதாகவும், அந்தத் துன்பத்திலிருந்து மக்களைச் காக்க வேண்டுமென்றும் அவரிடம் முறையிடு கிறார்கள்.

அய்யா வைகுண்டரும் ஆராய்ந்து பார்த்து, 'பேய் செய்கிறது அநியாயம்தான்' என்று அறிந்து, பேய்களுக்குள்ள ஆகமக்கணக்கை சோதித்து, பேயை எரிக்க வேண்டுமென்று மனதில் தீர்மானம் செய்கிறார். அதன்படி, அந்தப் பேய்களுச்கும் இரங்கி அவர்களுக்கு அவகாசம் கொடுக்கிறார். பின் அவற்றை எரிக்கிறார்.

இது அகிலத்திரட்டிலும், அருள் நூலிலும் வெளிப் படையாகக் கூறப்பட்டிருக்கும் செய்தி. ஆனால் பேய் என்ற பதத்திற்கு அய்யா வைகுண்டர் பல வித்தியாசமான அர்த்தங்களையும் அகிலத்திரட்டில் ஆங்காங்கே குறிப்பிடுகிறார் எனவே அவர் தம் வரலாற்றில் குறிப்பிடும் பேய்கள் என்பவை எல்லோரும் பொதுவாகக்குறிப்பிடும் பேய்களையா? அந்தப் பேய்களும் அல்லாமல் சமுதாயத்தில் பரவி இருக்கும் சில தீமையான பேய்களையா? தீமைகள் என்னும் பேய்களையும் அவர் குறிப்பிடுகிறாரா? அதைப் பற்றி இன்னும் கொஞ்சம் ஆராயலாம்.

7. அய்யா விரட்டிய பேய்கள்!

எளியோரைக் கண்டு ஈந்து இரங்கிடு நீ'
அழிவென்ற பேச்சு அனுப்போல் நினையாதே!

—அகிலத்திரட்டு (பக்கம். 214)

கடவுளைவிட பெரிய கம்யூனிஸ்ட் யாருமில்லை; எல்லா மதத்திலும் அதுதான் நிதர்சனம், எந்த இறை அவதாரமும் செல்வந்தர்களையும் மன்னர்களையும் சார்ந்து நிகழ்ந்ததல்ல.

மன்னர் குலத்தில் ராமராக அவதரித்த இறைவனும், தன் இனத்தோடு இணங்கியிருந்து அவதாரப் பணியை நிறைவேற்றவில்லை. 'ஏழ்மை வேடன்' குகனோடும், தாழ்ந்த குரங்கு இனத்து சுக்கிரீவனுடனும், அனுமனுடனும் கூட்டுறவு கொண்டுதான், தன் அவதாரப்பணியை நிறைவேற்றினார். அவர்களுள் ஒருவராகவே பழகினார். பாறையில் படுத்து உறங்கினார்... மனைவியை பிரிந்தபோது, அவர்கள் தோளில்தான் சாய்ந்து துக்கத்தைப் பகிர்ந்து கொண்டார். தென்னிலங்கை

வேந்தனின் தம்பி விபீஷணன் அவரோடு உறவு கொள்ள வந்தபோதும், ராஜமரியாதையுடன் அவருடன் இணையவில்லை. ராஜபோகங்களை விட்டு விலகி சரணடைந்த பின்தான் ராமரோடு கூட்டுறவு கொள்ள முடிந்தது.

கிருஷ்ண அவதாரமும் அப்படியே. சிறையில் மன்னர் இனத்தில் பிறந்தாலும், வளர்ந்தது. அருள் அவதார லீலைகள் காட்டியது எல்லாமே ஆயர் மக்களுடன்தான். பின்னர் அவதாரப்பணி முடிக்க குருக்ஷேத்திர தர்மப்போர் நடத்தும்போதும், அவர் வீடற்று, நலிந்திருந்த பஞ்ச பாண்டவர்களின் தோழனாகத்தான் திகழ்ந்தார்.

எளிமைக்கும் நசுக்கப்பட்டோருக்கும் பரிவாகவே பத்து அவதாரங்களையும் எடுத்தார். பெருமாள் எடுத்த தோற்றமும் மீன், வராகம், வாமனன், நரசிம்மம் என்ற எளிமைத் தோற்றங்கள்தான்.

நாராயணனுக்கு மங்களா சாசனம் செய்து மகிழ்ந்த ஆழ்வார்களும், வாழ்வின் அடிமட்டத்து பக்தர்கள்தான் திருமங்கை மன்னன் போன்றோரும் எல்லாம் இழந்துதான் அவருடைய பக்தி சாம்ராஜ்யத்துள் பிரவேசிக்க முடிந்தது.

அதேபோல்—

மாட்டுத்தொழுவத்தில் அவதரித்த இயேசு பிரான் தன் அருள் அவதாரத் திருப்பணியை

தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலேயே நிறைவேற்றி- அவர்களுக்காகவே சிலுவை ஏற்று புனித ரத்தம் சிந்தி, அவர்களுக்காகவே உயிர்த்தெழுந்து தேவனுடைய சாம்ராஜ்யத்தைத் திறந்து வைத்தார். அவருடைய சீடர்களும் மீனவர்கள் போன்ற சாமான்யர்களே....ஊராரின் நிந்தனையை ஏற்ற ஒரு பாவப்பட்ட பெண் உட்பட நலிந்தோருக்காகவே அவர் பிரசங்கித்தார். செல்வந்தர்களைத் தூக்கி பகிரங்கமாகவே 'ஊசியின் காதுக்குள் ஒட்டகம் நுழைந்தாலும் பணக்காரர்கள் தேவனுடைய சாம்ராஜ்யத்தில் நுழைய முடியாது,' என்று எச்சரித்தார். அவர் குறிப்பிட்ட பணக்காரர்கள், பணத்தால் செருக்கடைந்து அதர்மத்தை செய்பவர்கள்!

—இப்படி எந்த மதத்து இறை அவதாரமும் அதிகார வர்க்கத்திற்கும் செருக்கு மிகுந்த செல்வந்தர்களுக்கும் எதிராக, நசுக்கப்பட்ட மக்களின் சார்பில் நின்று அறக்கொடி ஏந்தியே இறையருளை உலகுக்கு உணர்த்தியிருக்கிறார்கள்

அய்யா வைகுண்டரும் அப்படியே!

தென் திருவிதாங்கூரில் அரச கோபத்துக்கும், ஆளடிமை கொண்டு வாழ்ந்த உயர் ஜாதி வர்க்கத்தின் எள்ளலுக்கும் இலக்காயிருந்த தாழ்த்தப் பட்ட இனம் ஒன்றில் பிறந்து—

அந்த இனத்தின் சேவைக்குள் மாத்திரமே தன்னை அடக்கிக் கொள்ளாமல், வியாபகமான கருணை உள்ளத்துடன், தான் பிறந்த இனத்தைப் போல், பாதிக்கப்பட்ட 'பதினெட்டு சாதி'களையும் முன்னேற்றுவதற்கு மூலதனமான, ஆன்மீகப் போராட்டத்தை மேற்கொண்டார், அய்யா வைகுண்டர்.

அந்தப் பின்னணியில், அவர் 'எரித்த' பேய் களைப் பற்றிப் பரிசீலித்தால், அய்யாவின் வித்தியாசமான சில சமூகக் கண்ணோட்டங்கள் நமக்குப் புலப்படுகின்றன.

வெறுமனே, பூதம், பிசாசு என்று கூறப்படுப வற்றை அழிக்க ஒரு அவதாரம் தேவையா? சாதாரண பில்லி சூன்ய மந்திரவாதியே அந்தக் காரியத்தைச் செய்வதுண்டே!

எனவே, நம் கண்ணோட்டப்படி—

அய்யா குறிப்பிட்ட பேய்கள் மனிதர்களுக்கு சிற்சில உபாதை, துன்பங்கள் தரும் பேய்கள் அல்ல.

அவர் குறிப்பிடும் பேய்கள் வேறு. தாழ்வுற்ற சமூகத்திற்கே கேடான அவநம்பிக்கைப் பேய்கள்; அச்சப் பேய்கள், வறுமை பேய்கள்; அஞ்ஞானப் பேய்கள், தீண்டாமைப் பேய்கள்.

இதை வலிபுறுத்துவது போன்றே, அய்யாவின் திருவாக்கே அமைந்திருக்கிறது.

அகிலத்திரட்டு (217-ம் பக்கம்) கூறுகிற வாசகம் இது!

'சாதி பதினெட்டுந் தலையாட்டிப் பேய்களையும் வாரி மலையதிலும் வன்னியிலும் தள்ளிவிடு; வரத்தை மிக வேண்டி வைத்துக் கொள் என் மகனே'

ஃ ஃ ஃ

இந்தச் சமூகப் பிணிகளான பேய்களுக்கு எதிராகத்தான் அய்யா தன் வாழ்வையே ஒரு யாகமாக்கினார்.

அதற்காகத்தான் இப்படி குரல் கொடுத்தார்.

தாழ்வுற்ற மக்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் வண்ணம்,

'கூலிக்காரர் மக்களில்லை!
கோடி வரிசை பெற்ற மக்கள்'!
-என்றார்.

அதுமட்டுமல்ல; மக்களைத் தட்டியெழுப்பும் வண்ணம்,

'குகையாளப் பிறந்தவனே,
என் குழந்தாய் எழுந்திரடா!
அதிகமுள்ள நீசனும் தான்
மற்பிடித்து அடிக்கிறானே'

படையெடுக்க வா மகனே
பாருவசம் கட்டழிக்க!
வரிசை பெற்ற நீ மகனே
மான மறுக்கம் பொறுக்கலையோ!'
-என்று குரல் கொடுக்கிறார்.
அதோடு,
'எவனெவனுக்கும் பதறி
இனி மலைய வேண்டாமே!'
-என்று தைரியமூட்டுகிறார்.

அதோடு 'கலியுகம்' 'கலிவந்து தலைகுனிவு ஏற்பட்டது' என்று தாழ்வு மனப்பான்மையுடன் புலம்பிக் கொண்டிருந்தவர்களுக்கு வீறுகொண்டு சூள் உரைத்துக் கூறுகிறார் இப்படி!

'நாரணர் வைகுண்டராகி நாட்டினில் வந்த வன்றே காரணம் எல்லாம் அச்சு! கலியுகம் அழிந்து போச்சு!

'மானமாக இருந்தால்
மாளுங்கலி தன்னாலே!'
-என்றும் முழங்கினார்!
அருள் நூலில் தெளிவாகவே,

'பொய்யொடு பசாசகூளி புரட்டொடு கலிகள் நீசம்
மையொடுபகடு கள்ளம் மனக்கருப்பு யுகங்கள் தீர்ப்பு
பொய்யொடு புரட்டு வஞ்சப்பிழை பொல்லாப்பென்ற
தெல்லாம்
வாயொ வாயால் கெட்டு மறுப்பில்லாப் போனார்!'
-என்கிறார்

இப்போது தாழ்ந்திருந்தவர்களின் தன்னம்பிக்கையற்ற பேய் நிலையை அகற்ற அய்யா தன்மான எழுச்சிப் போராட்டம் நடத்தியதால்தான், அப்போதைய திருவிதாங்கூர்மன்னரும், உயர் குடியினரும் அவரைச் சிறையில் அடைக்க ஏற்பாடு செய்தனர்.

அந்த அளவுக்கு அவர் அவர்களுக்கு எரிச்சலூட்டினார். அதற்குக் காரணம் அவர்களுக்குப் பிடிக்காத வண்ணம், அந்த மேல் தட்டினரால் ஆதரித்து வளர்க்கப்பட்ட பேய்களை அய்யா விரட்டியதுதான்!

தாழ்வகற்ற அய்யாவிடம் தெய்வத்தைக்கண்ட மக்கள் ஒரு புத்தெழுச்சி பெற்றனர்.

அவரைத் 'தெய்வம்' என்று மக்கள் போற்றுவதை மன்னர் ஆதிக்கத்தாராலும் உயர்குடியினராலும் ஏற்க முடியவில்லை.

'தாழ்த்தப்பட்ட இனத்தில் தெய்வம் பிறக்குமோ?' என்று கேள்வி கேட்டரர்களாம். அகிலத்திரட்டிலேயே இதை அய்யாவின் திருவுளக் குறிப்புப்படி எழுதிய சீடர் அரிகோபாலன் கூறுகிறார்.

எனவே தெய்வகுற்றம் செய்ததாக, வைகுண்டரைக் கைது செய்தான், திருவிதாங்கூர் மன்னன்.

(ஏரோதுராஜா, இயேசு பிரானை 'தெய்வகுற்றம்' செய்ததாக நீதிவிசாரணை செய்ததைப் போல)

அய்யாவைச் சோதிக்க விஷப்பரீட்சைகளும், சோதனைகளும் நடந்தன. சித்திரவதையும் செய்தார்கள். கடுவாய் என்னும் புலியால் சோதிப்பதும், சுண்ணாம்பு காளவாயில் வைத்துச் சோதிப்பதும் என்று பலவாறு துன்புறுத்தியும் பணிய வைக்கவோ, ஈனப்படுத்தவோ முடியாமல்-

முடிவில் ஒரு சகுனித்தனமான ராஜ தந்திர நிபந்தனை விதித்தது. அய்யாவை அதில் சிக்க வைக்க முயன்றார்கள் மன்னர்களும், மேலாதிக்கக் காரர்களும்.

8. துவையல் பந்தி

இனத்துக்கு இனங்கள் இருப்பேனான் சுவாமியென்று
மனதில் வேறெனவே வையாதே என் மகனே

—அகிலத்திரட்டு

மறுமலர்ச்சிப் போராட்டம் நடத்தும் மகான்களுக்கும் சரி, இறை தூதர்களுக்கும் சரி அவதாரங்களுக்கும் சரி, உலகெங்கிலும் ஒரு பொதுவான நிலை இருந்து வந்திருக்கிறது.

அதாவது அவர்கள் தாழ்வுற்ற மக்களுக்காகப் போராடும்போது அவர்களுக்கு எதிராக மன்னர்களோ, தவிர மேட்டுக் குடியினரோ நடவடிக்கை எடுத்தால், அப்படி எடுக்கப்படும் நடவடிக்கைகளைப்பற்றி மேல் மட்டத்தில் பிரச்சினைகளே இருப்பதில்லை.

தண்டிக்க வேண்டுமென்று நினைத்தால் என்னென்ன விதமான தண்டனைகள் கொடுக்கலாம் என்று ஆலோசிப்பார்களே தவிர,

'தண்டனை கொடுக்கலாமா, வேண்டாமா?' என்று சர்ச்சை ஏற்படுவதில்லை. ஏனென்றால் ஆதிக்க சக்திகளை மீறும் துணிவோ, அவர்களுடைய கருத்துக்களை மறுபரிசீலனை செய்வதற்கான ஆலோசனை கூறவோ யாருக்கும் தைரியம் இருப்பதில்லை. தாம் அண்டி நிற்கும் அந்த அதிகார வர்க்கத்தினர், 'ஏதாவது ஆலோசனை கூறினால் உடனடியாக அந்த உயர்நிலையிலிருந்து அப்புறப்படுத்தி விடுவார்கள்' என்ற அச்சம்.

ஆனால் அய்யா வைகுண்டரின் பிரச்சினை திருவிதாங்கூர் மன்னர் அவையில் சர்ச்சையாக எழுந்த போது முற்றிலும் மாறான ஒரு நிலையே தென்பட்டது.

ஆம், அவரைப் பற்றி முதல் சர்ச்சை எழுந்தே போதே மறுபரிசீலனை செய்யுமாறு அந்த அதிகார வர்க்கத்திலேயே ஒரு குரல் எழுகிறது.

உதாரணமாக வைகுண்டர் திருச்செந்தூரில் விஞ்சை பெற்று வந்த பின் தியான வாழ்க்கையில் ஈடுபட்டதைத் தொடர்ந்து அவர் தன் இனத்து மக்கள் மத்தியிலும் தாழ்த்தப்பட்ட இனத்தவர் மத்தியிலும் 'சுவாமி' என்று போற்றப்பட்டார். அந்த எளிய மக்கள் தங்களை உபவிக்க நாராயணரே வந்து உதித்தார் என்று போற்றி வணங்கினர்.

நாராயணர் வைகுண்ட மாகி நாட்டில் வந்த அன்றே
காரண மெல்லா மார்க்கக் கலியுக மறந்து போச்சு'

—என்று நலிவுற்ற மக்கள் சமுதாயம் விம்மிதமாகப் போற்றி மகிழ்கிறது. 'கலியாகத் தங்கள் வாழ்வில் சூழ்ந்திருந்த தாழ்வு, ஈனம், அடக்குமுறை, அனைத்துமே அழிந்து போய் விட்டதாக' அவர்கள் நம்பிக்கை கொண்டு ஜெய்கோஷம் செய்கிறார்கள்.

உலகில் பல இறை தூதருக்கும் கிடைக்காத அங்கீகாரம் அது. அவதார புருஷர்கள் கூறும் அருளுரைகளை உடனுக்குடன் மக்கள் ஏற்றுக் கொள்வது அரிது. அவராலும், அவருடைய பின்வரும் சீடர்களாலும் திரும்பக் கூறப்பட்டு மக்கள் செவிகளிலும், சிந்தனைகளிலும் ஊறிய பின்னரே, அந்த போதனைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அப்படிப்பட்ட பரிசோதனைக்கு உட்படாமலேயே, அய்யா வைகுண்டரின் எழுச்சி பெற்ற அறைகூவல்கள் மக்கள் மந்தியில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் காண்கிறோம். அப்படி ஒரு யுகப்புரட்சி நலிந்தோரிடையே ஏற்பட்டதும் மன்னரிடம் செய்தி செல்கிறது. ஒருவர் இன வெறியைத் தூண்டுவதுபோல்' 'நாராயணர் தாழ்ந்த குலத்தில் பிறந்து விட்டதாக'க் கூறுகிறார்.

இதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? மகா விஷ்ணு அப்படிப் பிறக்க வேண்டுமென்றால்

உயர்ந்த குலத்தில் பிறக்காமல் தாழ்ந்த குலத்தில் பிறக்க வருவாரா? இப்படித் தெய்வ குற்றம் பேசுகிற அந்த இழித்த குலத்தவரை அரசவைக்குக் கொண்டு வந்து விசாரணை செய்ய வேண்டும்!' என்று கோரிக்கை விடுக்கிறார். மன்னரும் அதை ஏற்றுக் கொள்கிறார்.

ஆனால் அந்த சமயம் அங்கிருந்த ஒருவர் மன்னனை எதிர்த்து குரல் கொடுக்கிறார். அந்த நியாயக் குரல் இப்படி ஒலிக்கிறது. 'எளிமையான குலம் என்றோ, வேடர் குலம் என்றோ, தோல் தொழில் செய்யும் குலமென்றொ இறைவனுக்கு பேதங்கள் கிடையாது. பெரிய பெரிய அவதாரங்களை எல்லாம் தாழ்த்தப்பட்ட குலத்தவர் மத்தியில் தான் தோன்றச் செய்திருக்கிறார்' என்று கடுமையாக மறுத்துக் கூறுகிறார்.

அது பிரச்சனைக்குள்ளாகிறது: ஆனாலும் உயிர்குடியினரின் செல்வாக்கு அரசனை இயக்குகிறது. உடனடியாக அய்யாவை சிறைப்பிடித்து, விசாரணை செய்து தண்டிக்க ஆணையிடுகிறான். அதன்படியே அவர் அரசவைக்குக் கொண்டு வரப்படுகிறார். நிறைய நிந்தனைகள் சோதனைகள்.

ஒரு கட்டத்தில் கடுவாயைப் (புலி) பிடித்து அதைக் கொண்டு அய்யாவைக் கடிக்கச் செய்யவிட வேண்டும் என்று திட்டமிட்டு ஏவலர்களை நோக்கிக் 'கடுவாயைப் பிடித்து வாருங்கள்' என்று கட்டளை யிடுகிறான் மன்னன்.

ஆனால் நடக்கும் வேடிக்கை தெரியுமா?

அந்த ஏவலர்கள் அய்யாவிடமே வந்து 'அய்யா உங்கள் மீது ஏவுவதற்குக் கடுவாயைப் பிடித்து வரும்படு மன்னர் சொல்கிறார். நாங்கள் காட்டில் சென்றதுமே எங்கள் கையில் சுலபமாகக் கடுவாய் கிடைத்துவிட நீங்கள்தான் அருள்புரிய வேண்டும்!' என்று வணங்கிக் கேட்டுக் கொள் கிறார்கள். அய்யா நாராயணரும் சிரித்துக் கொண்டே அவர்களுக்கு சுலபமாக கடுவாய் கிடைக்க அருள் புரிகிறார். இந்தச் சுவையான செய்தியை அகிலத்திரட்டு இப்படி குறிப்பிடுகிறது.

'அனுப்பினான் சேவகரை அந்த வேளைதனிலே
பனிப்பசினும் வெயிலைக் கண்டு பதறினாப் போல்
பதறியே சேவுகர்கள் பண்பாகச் சட்டையிட்டு
குதறியே வந்து கட்டுரைப்பார் மாயனோடு
நாராயணரே நாங்கள் போகுங்கருமம்
பேராய் நடக்கவேணும் பெரிய திருமாலே
உம்மைச் சோதிக்க ஒரு கடுவாய் கொண்டுவர
செம்மையுள்ள ராஜா செணமே அனுப்பினர்காண்
ஆனதினால் கடுவாய் அடியேன்கள் கையதிலே
போனவுடன் சிக்கிடவும் வரந்தாரும் புண்ணியரே
என்றுரைக்க சேவுகர்கள் எம்பெருமானுள்ள மதில்
நன்று நன்றென்று நாராயணர் சிரித்து
விடைகொடுத்தார்கடுவாய் வேகத்தில் சிக்கிடவும்'

அகிலத்திரட்டு [பக்கம்—234]

இந்த சம்பவத்தை மேலோட்டமாகப் பார்த்தால் ஒரு நகைச்சுவை நிகழ்ச்சியாகத் தோன்றக் கூடும். உங்களைக் கடிக்கச் செய்ய புலி கொண்டு வர நீங்களே உதவுங்கள் என்று கேட்பது அப்படி ஒரு வேடிக்கையான சம்பவம்தான்.

ஆனால், ஆன்மீக அனுபவங்களில் திளைத்த மகான்களின் அருள் வாக்குகளைப் பரிசீலித்தால் 'இது வேடிக்கையான சம்பவம் அல்ல' என்று புரியும்.

'அவன் அருளைப் பெறுவதற்கும் அவன் அருள் வேண்டும்' என்கிறது வைணவம்.

அதாவது இறைவனை வணங்கி அவன் அருளைப் பெறுவதைக் கூட நம் இஷ்டம்போல் செய்துவிட முடியாது. அதற்கும் இறையருள் கூட வேண்டும். இறைவன் அருள் இருந்தால்தான் அவனை வணங்கும் பாக்கியம் நமக்குக் கிடைக்கும்.

இந்தத் தத்துவத்தைத்தான் அய்யா நாரயணரிடம் காவலர்கள் அனுமதி கேட்ட சம்பவம் நமக்கு நினைவூட்டுகிறது.

ஆம், அய்யாவின் அருளும் அனுமதியுமின்றி அவர்மீது கடுவாயைப் பிரயோகிக்க முடியாது என்று வெளிப்படுத்துகிறது இந்த சம்பவம்.'

❀ ❀ ❀

இப்படிப்பட்ட சோதனைகள் பலவற்றை நிகழ்த்தச் செய்து சலித்துப் போகிறான் திருவிதாங்கூர் மன்னன். அவனுடைய அதீதக் காழ்ப்புணர்ச்சியின் செயல்பாடுகள் எதுவும் அய்யாவின் அமானுஷ்ய அருட் சக்தியிடம் ஈடு கொடுக்க முடியாமல் தோற்றுப் போகின்றன.

அய்யாவை அதற்கு மேலும் சோதிக்கவோ, துன்புறுத்தவோ துன்புறுத்திப் பணியவைக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டதும் மன்னன் ஒரு மலிவான ராஜதந்திரத்தை அய்யாவிடம் பிரயோகிக்கிறான்.

அதுதான் பிரித்தாளும் சூழ்ச்சி!

அய்யாவிடம் 'நீங்கள் உங்களுடைய ஜாதி மக்களுக்காக வாதாடுங்கள். ஆனால் உங்களோடு உள்ள மற்ற தாழ்த்தப்பட்ட சாதிகளுக்குவாதாடவும் வேண்டாம் அவர்களுக்காக போராடவும் வேண்டாம். மற்ற சக்திகளோடு நீங்கள் இணைந்து இருக்காமல் 'சர்ப்பம்போல்' (பாம்பு) பகைமை கொண்டு இருங்கள்.' என்று கோரி ஒரு ஒப்பந்தக் கைச்சீட்டையே எழுதிக் கொடுக்கிறார்கள் மன்னர் தரப்பினர்.

ஆனால் அய்யா வைகுண்டரோ ஏளனமாக நகைத்து, அந்த ஒப்பந்தச் சீட்டைப் புறக்கணித்து

விட்டு தன் பணியைச் தொடர்ந்து மேற்கொள்ள திரும்புகிறார்.

∴ ∴ ∴

அப்படி அய்யா மேற்கொண்ட அருள் பணிகளிலும், அறப்பணிகளிலும் ஒரு சிறப்பான அம்சம், அவர் அமைத்த துவையல் பந்தி.

'இந்தத் துவையல் பந்தியின் முக்கியத்துவம் என்ன?'

இது ஒரு எளிமையான சொற்பப் பிரயோகம். 'துவையல்' என்றால் அழுக்குப் போகும் வண்ணம் துவைப்பது என்று பொருள். இது உள்ளத்திலிருந்து அழுக்கான எண்ணங்களை நீக்குவதற்கும் உடம்பிலிருந்தும் ஆடையிலிருந்து நீக்குவதற்கும் பொருந்தும்.

ஆடையைத் தூய்மையாகக் கசக்கிக் கட்டி சுத்தமான ஆகாரத்தை மேற்கொண்டு அனைவரும் ஒன்று கூடி இறைவனுக்குகந்த காரியங்களைச் செய்ய வேண்டுமென்பது இந்தத் துவையல் பந்தியின் நோக்கம்.

பொதுவாக தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருமே புலால் உணவை ஏற்பவர்களாகத்தான் இருந்தார்கள். ஆனால் சுவாமிகள் அந்த உணவு முறையில் சில வித்தியாசங்களை உருவாக்கினார். தூய எளிமையான சைவ உணவுகளையே அன்பர்கள் உண்டு இறைவன் பணியில் ஈடுபட வேண்டும்

என்று அவர் அறிவுறுத்தினார். இந்தப் பாடல் வரிகளில் அது புரியும்.

'மூணு நேரந் துவைத்து உச்சியொரு நேரமதாய்
வேணும் பச்சரிசி வெற்றிச் சிறுமணியும்
வேகவைத்து நன்றாய் விரைவாய் மணலிலிட்டுத்
தாகமில்லாமல் தவசிருக்க வேணுமென்று'

—அகிலத்திரட்டு [பக்கம்—216]

[அதாவது எளிமையாக சுத்தமாக பச்சரிசியும், பருப்பும் பயன்படுத்தப்பட்ட விரத உணவையே குளித்து சுத்தபத்தமாக சாப்பிட வேண்டும் என்பதே அந்தக் கட்டளை.]

இப்படிப்பட்ட புற ஒழுக்கத்தோடு, உள்ளத் தூய்மையையும் சமரச உணர்வும் தன் பக்தர்களிடம் உருவாகி வளர வேண்டுமென்பதிலும் அய்யா அக்கறை கொண்டிருந்தார்.

தங்களை நசுக்கும் மேலோரை எதிர்த்துப் போராடுவது மட்டும் தன்மானமல்ல. தன்னைப் போல், தாழ்த்தப்பட்ட அனைத்து சமுதாயத்தினரையும் ஒத்த உணர்வுடன் நோக்குவதே தன்மானம் என்று அவர் மக்களுக்கு போதித்தார்.

தேசிய மத உணர்வுகளைப் போற்றும் ஏடான 'விஜயபாரதம்' தீபாவளி இதழில், அய்யா நாராயணர் பற்றி ஒரு அபூர்வ சம்பவம் குறிப்பிட்டிருக்கிறது. அவரது சமரச நெறியை உலகுக்கும் உணர்த்தும் அந்தச் சம்பவம், அடுத்த அத்தியாயத்தில் ...

9. அய்யா நாராயணர்க்கும் அம்மை உமையாளுக்கும்!

பொறுமை பெரிது, பெரிய திருமகனே;
தர்மம் பெரிது; தாங்கியிரு என்மகனே!

—அகிலத்திரட்டு பக்-212

நம்பிக்கைக்கும் — ஆன்மீக நம்பிக்கைக்கும் இடையேயும் ஆச்சரியத்துக்கும், நிதானத்துக்கும் மத்தியிலும் ஒரு கால இடைவெளி காரணமாக இருக்கும்.

இன்று—

அதாவது 1994-ல் 20-ம் நூற்றாண்டின் இறுதியில் நம்மைச் சுற்றி வளர்ந்து வந்திருக்கும் (முன்னேற்றங்கள்) ஜனநாயக வேகங்கள், சாதி ஒழிப்புத் தீவிரம் இவற்றைக் கொண்டு,

145 வருடங்களுக்கு முன் அய்யா நாராயணர் வாழ்ந்த காலத்தில் நடந்த சம்பவங்களைப் பார்த்தால்,

பல விஷயங்கள் நம்ப முடியாததாக இருக்கும்; சில விஷயங்கள் ஆச்சரியமாக இருக்கும்.

எதையும் அந்தந்த நிகழ்வு காலத்தையொட்டி சிந்திக்கும் போதுதான் அதன் உண்மையான பரிணாமம் தெரியும்.

சாதியுணர்வும் அப்படித்தான்.

இன்று சாதியைப்பற்றி யாரும் பேசினால், 'அதெல்லாம் தான் ஒழிந்து போயிற்றே! இப்போது யார் அதையெல்லாம் பார்க்கிறார்கள்?' என்று சர்வ சாதாரணமாக அலட்சியமாக்கிக் கொள்கிறார்கள்.

ஆனால் சாதி முற்றிலும் ஒழிந்து விட்டதா?

இன்றையிலிருந்து சுமார் 50 வருடங்களுக்கு முன்பு வரை ஒவ்வொருவரும் தங்கள் பெயருக்குப் பின் 'ஐயர்' என்றோ, 'பிள்ளை' என்றோ, 'செட்டியார்' என்றோ, 'நாயர்' என்றோ போட்டுக்கொண்டு தான் இருக்கிறார்கள். 'ஐயரும்', 'பிள்ளை'யும் மோதிக் கொள்ளாமல் வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் அவரவர் சாதியைச் சொல்லிக் கொள்வதில் எல்லாருக்குமே பெருமை உண்டு. 'நம்ம சாதிக்காரன்', 'நம்ம இனத்தான்' என்ற உணர்வு எல்லாரிடமும் உண்டு. எல்லாரிடமும் சுத்தமாக அழிந்து போய் விட்டது என்று கூறுவது மேடைப் பேச்சுத்தான். வேண்டுமானால் 'துவேஷம் குறைந்து போயிருக்கிறது. தீண்டாமை,

ஒருவரையொருவர் அலட்சியப்படுத்துவது நீங்கியிருக்கிறது' என்று வேண்டுமானால் சொல்லலாம்.

ஜாதி ஒழிப்புக்காக சுயமரியாதை இயக்கம் கண்ட ஈ. வெ. ரா பெரியாரையே 'ராமசாமி நாயக்கர்' என்றுதான் அழைத்தார்கள். பத்திரிகையிலும் எழுதியிருக்கிறார்கள். அரிஜன ஆலயப் பிரவேசம் நடத்தியவரும், தன் மகளுக்கு கலப்புத் திருமணம் செய்தவருமான ராஜாஜியையே 'ராஜகோபால ஆச்சாரியார்' என்று சாதி வால் ஒட்டித் தான் அழைத்தார்கள். ஏன் அன்று சாதி பேதங்களைக் கடந்த் தேசியத் தலைவர்களே 'ராவ்' என்றும் 'சர்மா' என்றும் 'மூப்பனார்' என்றும் தானே அழைக்கப்படுகிறார்கள்?

சாதி என்ற உணர்வின் விஷப்பற்கள் பிடுங்கப் பட்டிருக்கிறது அல்லது பிடுங்கப்பட்டு வருகின்றது என்று வேண்டுமானால் நாம் பெருமை பாராட்டலாமே தவிர, அது அறவே ஒழிந்து விடவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக சில கலப்புத் திருமணங்கள் நடைபெறுவது மட்டுமே சாதி உணர்வின் கல்லறைப் பூக்கள் அல்ல...

இது 20-ம் நூற்றாண்டின் இறுதிக்கட்ட நிலை.

19-ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் (அதாவது அய்யா நாராயணர் அவதரித்த காலத்தில்) அந்த சாதிக் கொடுமை எவ்வளவு தீட்சண்யமாக இருந்திருக்கும்?

அத்தனை மக்களும் சாதி சாதியாகத்தான் பிரிக்கப்பட்டிருந்தனர். ஒரு சாதியின் மூச்சு இன்னொன்றின் மீது பட்டுவிடாத இறுக்கம். எதற்காக மோதல் வந்தாலும் ஒன்றையொன்று 'சர்ப்பமாக' சாதியை முன்னிறுத்தியே சண்டையிட்டுக் கொள்ளுதல், சாதியையே தாழ்வாகப் பேசுதல், சாதியையே துகிலுறித்தல் என்றுதான் நடந்தன.

அந்தக் காலகட்டத்தில்,

எந்தத் தனிமனித வெற்றிகூட சாதியின் வெற்றியாகவும் இனத்தின் சாதனையாகவும்தான் மதிக்கப்பட்டன.

அந்த அனல் பறக்கும் 'சாதித்துவ' காலகட்டத்தில் 'ஒண்ணா இருங்கோ', 'தாழ்த்தப்பட்ட எல்லாரும் ஒன்றே' என்று குரல் கொடுத்தார் அய்யா வைகுண்டர்.

அவர் 'சான்றோர்' என்ற இனத்தைச் சேர்ந்தவர் என்றாலும் அந்த இனத்துக்குள் அவர் தன்னை இறுக்கிக் கொள்ளவில்லை. பிற்படுத்தப்பட்டவர்கள் எல்லாரையும் சமமாக்கி எல்லாருக்காகவும் போராட்டத்தை நடத்தினார்.

இன்றும் நமக்குப் புரிகிற பாஷையில் சொல்லப் போவதென்றால் 'பிற்படுத்தப்பட்டவர்களுக்காக' குரல் கொடுத்த முதல் மண்டல் பகவான் வைகுண்டர்தான்!

அதைத்தான் விஜயபாரதம் இதழில் (இந்து முன்னணியினர் சார்பு ஏடு) நான் கதை ரூபமாக வாசித்து வியந்தேன். அந்தக் கதைச் சுருக்கம் :-

அய்யா நாராயணர் தன் சீடர்கள் மூலமும் (அந்தச் சீடர்களைப் பற்றி பின்னர் பார்ப்போம். அந்தச் சீடர்கள் கிட்டத்தட்ட இயேசுபிரானின் சீடர்களைப் போல் பணி செய்திருப்பவர்கள்) பக்தர்கள் மூலமும் ஒரு சமரச இயக்கம் நடத்தியிருக்கிறார். அந்தச் சீடர்கள் எங்கெங்கு சென்றாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் அளிக்கும் உணவையே ஏற்க வேண்டும் என்பது முக்கிய யோசனை.

அதன்படி ஒரு முறை அய்யா நாராயணரின் பிரச்சாரப் பணியினர் ஒரு சேரியில் போய் 'அய்யாவின் உபதேசங்களை' எடுத்துக் கூறியிருக்கின்றனர். ஆனால், அவர்கள் உணவு அளித்தபோது சாப்பிட மனமில்லாமல் திரும்பிவிட்டார்கள்.

அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் வீட்டில் உணவு அருந்தவில்லை என்ற தகவல் அய்யாவுக்கு கிடைக்கிறது. உடனே அவர் தன் பக்தர்களை மீண்டும் அந்த இடத்துக்கு திருப்பி அனுப்பி, அந்த தாழ்த்தப்பட்ட மக்கள் அளித்த உணவை உண்டு வரும்படி செய்தார்கள். சீடர்கள் அந்த உணவை உண்டு வந்த பின்தான் அவர்களிடம் முகம் கொடுத்துப் பேசி இருக்கிறார்!

இதுதான் அக்கதையின் சுருக்கம்.

இன்றுகூட கோவில்களில் தேர்ந்த சமையற்காரர்கள் அறுசுவையுடன் தயாரித்த உணவைப் பரிமாறி 'சமபந்தி' சாப்பாடு நடந்துவிட்டால், ஏதோ உலக மகா அதிசயம் நடந்துவிட்டது போல் பத்திரிகைகளில் புகைப்படங்களுடன் செய்தி போட்டு மகிழ்கிற நிலையில் இருக்கிறோம்.

ஆனால் அய்யாவோ சுமார் 150 ஆண்டுக்கு முன்பு அந்த அரிஜன சகோதரர்கள் தங்கள் கையால் தயாரித்த உணவை உண்டுவரச் செய்து ஒரு சமரசப் புரட்சியே நடத்தியிருக்கிறார்.

அய்யாவின் சமரசப் புரட்சி பூமியில் மட்டுமல்லாது, தெய்வங்கள் மத்தியில்கூட நடந்திருப்பது ஒரு வியப்பான தகவல்.

சாதிப்பகைத் தீவிரமாக இருந்ததைப்போல், சாமிகளுக்குள்ளும் பிரிவினை இருந்தது! ஆம்; கடவுளை 'சிவன்' என்றும் 'விஷ்ணு' என்றும் பிரித்து வைத்து துவேஷம் பாராட்டினார்கள். பெருமாளை வணங்குபவர்கள், சிவனை ஏற்றுக் கொள்வதில்லை. சிவ பக்தர்கள் 'சிவன்தான் மும்மூர்த்திகளுள் முதல்வர்; பெருமாள் அவருக்கு அடங்கியவர்தான்' என்றனர். சக்தியை வணங்குபவர்களோ, 'ஆதிபராசக்திதான் முதல்வி. சிவன், பிரம்மா, விஷ்ணு எல்லாருமே அவள் ஆணைப்படி செயல்படுபவர்கள் தான் என்றார்கள்.

இப்படி தெய்வங்களையே அணி பிரித்து மோதிக் கொண்ட துவேஷ உணர்வு 'அய்யா'வின் வாழ்க்கைக் காலத்திலும் தீவிரமாக இருந்தது.

தெய்வங்களை இப்படிப் பிரித்து வைத்து சண்டையிட்ட பெருமை மேல் சாதியினருக்கே அதிகம் உண்டு. அவர்கள்தான் புராணங்களையும், வேதங்களையும் கையில் வைத்துக் கொண்டு ஆளுக்கொருவிதமாக வியாக்கியானம் செய்து சண்டை போட்டுக் கொண்டிருந்தனர்.

இவர்கள் போட்ட சண்டையின் காரணமாக, சான்றோர் இனம் போன்ற தாழ்வுக்குள்ளாக்கப் பட்ட மக்களுக்கு கும்பிட சாமியே கிடைக்காமல் போயிற்று!

ஆம்; அது ஒரு விசித்திரக் குழப்பம்.

அந்தக் காலத்தில் இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சிவன், விஷ்ணு எல்லாருமே எட்டாத தெய்வங்கள். ஆத்ம முறைப்படி இந்தப் 'பெரிய' தெய்வங்களுக்குக் கட்டப்பட்ட கோயில்களுக்குள் இவர்கள் நுழைய முடியாது!

'தமிழ்' என்றால் முருகன். 'தமிழர் தெய்வம் முருகப் பெருமான்தான்' என்று சொல்லிக் கொண்டே தமிழர்களான இந்த மக்களை முருகன் கோயிலுக்குள்ளே நுழையவிடவில்லை.

திருச்செந்தூரில் உள்ள முருகப் பெருமாளைத் தரிசிக்க இந்தத் தமிழர்கள் அனுமதிக்கப்பட வில்லை. பிரகாரத்துக்கு வெளியே உள்ள ஒரு துவாரத்தின் மூலம்தான் உற்றுப் பார்க்கலாம். அதுவும் பிரகாரத்தைத் தொடாமல்!

(காந்திஜியின் ஆலயப் பிரவேசம் நடந்த பின்னர்தான். இந்த மக்கள் சிவனையும், கிருஷ்ணனையும் முருகனையும் கண்ணால் பார்க்க முடிந்தது!)

இப்படி பூலோகத்தில் குடியிருந்தும்கூட இந்தப் 'பெரிய' தெய்வங்கள், தாழ்த்தப்பட்டவர் களின் பார்வையின் படாமல் ரகசியமாக 'குடி கொண்டிருந்தனர்!' இதன் காரணமாக, இந்த எளிய மக்கள் ஊருக்கு ஊர் கிராமதேவதைகளை தங்கள் தெய்வங்களாக்கி வழிபட்டனர். அந்தத் தெய்வங்களை 'பேய் கோயில்கள்' என்று வேற்று மதத்தினர் கேலி செய்யும்படி ஆயிற்று.

இந்தக் காலக் கட்டத்தில்தான், நாராயணர்! சிவனையும் இந்த ஏழை மக்களின் குரலுக்குக் கொண்டு வந்தார்!

அதுவும் எப்படி?

நாராயணனுக்கும், சிவனுக்கும் உள்ள பேதத்தை நீக்கி-அவர்களுக்குள் ஓர் ஒற்றுமை

உண்டாக்கி, ஓர் அரிய தோற்றத்துடன் அந்தத் தெய்வங்களை மக்ககளுக்கு தரிசனம் செய்து வைத்தார்!

அதனால்தான் 'சிவபெருமானின் மனைவி உமையவள் சிவனும் நாராயணரும் வேறு வேறு' என்றெல்லாம் கூறப்பட்டதை உடைத்து,

'நாராயணரும், சிவனும் ஒன்றே' என்ற தத்துவத்தை உருவாக்கி, தன் மக்களுக்கு 'அய்யா நாராயணரும் அம்மை உமையவளும்' உங்கள் பெற்றோர்' என்று உணர்த்தினார்.

இந்த சமரசப் புரட்சிபற்றி பின் அற்புத பலன் என்ன தெரியுமா?

10. பூவண்டனார்

வரம்பு தப்பாதே வழிதவறி நில்லாதே
பரம்பூமிக்கண்டு பாவித்திருமகனே

—அகிலத்திரட்டு

(அய்யா நாராயணரைப் பற்றிய இந்தக் கட்டுரைத் தொடரை முதல் முதலாக எழுதும் நபர் நானல்ல, எனக்கு முந்தியே பல ஆய்வாளர்கள் பல்வேறு கோணங்களில் அவரைப்பற்றி ஆய்ந்து பல நூல்கள் வெளியிட்டிருக்கிறார்கள். நாராயணரின் சமூகப் புரட்சி, சாதி எதிர்ப்புப் போராட்டம், நலியுற்றோரை மேம்படுத்துதல் போன்ற பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புரட்சிக்குக் காரணமாயிருந்த அய்யா நாராயணர் அந்த ஆய்வாளர்களுக்கெல்லாம் ஓர் அகழ்வாரய்ச்சிச் சுரங்கமாகவே இருக்கிறார். அவர்களுள் முக்கியமானவர்கள் இரா. பொன்னு என்ற ஆராய்ச்சி பேராசிரியர் புலவர் கு. பச்சைமால் எம். ஏ. என்ற பேராசிரியர் இவர்களோடு பிரபல எழுத்தாளர்களான பொன்னீலன் போன்றோரும் இந்த முயற்சியில் ஈடுபட்டவர்கள். இந்தத் தொடரை நான் எழுதத் தொடங்கியபின்,

என்னோடு கருத்துப்பரிமாற்றம் செய்யும் சில சிந்தனையாளர்களின் அறிவுபூர்வமான எண்ண வெளிப்பாடு எனக்கு நிறைய செய்திகளைத் தெரிவிக்கின்றன.

சமீபத்தில் கூட தஞ்சை பெரியார் மணியம்மை பொறியியற் கல்லூரியில் (மகளிர்) முதலாண்டு மாணவி புலவர் ஆ. கிருத்திகா, முத்துக்குட்டி சுவாமிகள் பிறந்த ஊரைப்பற்றிய நிறைய குறிப்புகள் தெரிவிந்திருக்கிறார். இப்படி உதவும் அன்பர்களுக்கு நன்றி. கூடவே அவர்களுக்கு ஒரு சின்ன தகவல்.

நான் ஏற்கனவே தெரிவித்தது போல் நான் எழுதுவது அய்யா நாராயணரின் வாழ்க்கைத் தொடரல்ல. நாராயணரின் சமூக, ஆன்மீகப் பணியைப் பற்றிய என்னுடைய கண்ணோட்டம் தான் இதில் சில தகவல்கள் விடுபட்டிருக்கலாம். சிலவற்றை நான் வேண்டுமென்றே கடந்து செல்லவும் நேரிடும். எனவே அன்பர்கள் என் கண்ணோட்டத்தைப் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இனி கட்டுரை-)

கடந்த சில அத்தியாயங்களில் ஒரு செய்தியை வலியுறுத்திக் கூறியிருந்தேன். அய்யா வைகுண்டர் ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறந்தாலும் தன் பணியை அந்த சாதிக்காக மட்டும் என்று வரையறுத்துக் கொள்ளவில்லை. தம் இனத்தைப்

போன்ற தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்காகவும் அவர் பணி செய்தார் என்பதே அச்செய்தி.

அப்படியானால் இவருடைய பணியை மற்ற இனத்தவர்கள் ஏற்றுக் கொண்டார்களா? அங்கீகரித் தார்களா? நமக்காகவெல்லாம் தான் அய்யா போராடுகிறார் என்ற உணர்வு தாழ்த்தப்பட்ட மக் களிடம் எல்லாம் இருந்ததா என்ற கேள்வி முக்கிய மாக ஆராயப்பட வேண்டிய ஒன்று.

இந்தக் கேள்விக்கு தற்சமயம் நிறைய சான்றுகள் காணக்கிடைக்கின்றன. சுவாமித்தோப்பு பதியை நிர்வகித்து வரும் வணக்கத்துக்குரிய பூஜிதகுரு பாலபிரஜாபதி அடிகளார் அவர்கள் தந்த புள்ளி விவரப்படி தமிழகத்திலும் கேரளாவிலும் அய்யா வழியை போற்றி வழிபாடு செய்யும் இணத்தாங்கல் கள் (ஆலயங்கள்) சுமார் எட்டாயிரம் உண்டு. அவற்றுள், சான்றோர் இனத்தவர்களால்நிர்வகிக்கப் படும் ஆலயங்கள் சுமார், 60, 70 சதவிகிதம் இருந் தாலும் பல்வேறு இனத்தவர்களால் (யாதவர் ஆச்சாரியர் போன்றோர்) நிர்வகிக்கும் நாராயண சாமி கோயில்கள் பெருமளவில் உண்டு. அதுமட்டு மல்ல அந்த சான்றோர் நிர்வகிக்கும் ஆலயத்தில் கூட் பக்தர்களாக திரள்பவர்கள் பல இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கக் காண்கிறோம்.

சென்னையிலேயே ஆலயங்கள் மிகப்பெரிய அளவில் மணலிபுதுநகர் என்ற இடத்திலும் ஓர் ஆல யம் உண்டு. அன்புள்ள பக்தர்கள் பல இனத்தவர் களாக இருக்கிறார்கள்.

(சென்னை எம்.ஜி.ஆர். நகரில் நந்தகுமார்சாமி என்ற பக்தர் முயற்சியால் பொதுமக்கள் துணிவுடன் நாராயணசாமி கோயில் கட்டப்பட்டு சிறப்பாக கும்பாபிஷேகம் நடந்து, ஒருசிறப்பான வழிபாட்டுத் தலமாக திகழ்கிறது என்று அறிகிறேன்.)

இப்படியே நாடெங்கும் உண்டு.

ஆனால் இந்தக் காலகட்டத்தில் வளர்ச்சியை வைத்துக் கொண்டு அய்யா வாழ்ந்த காலத்தில் நிலையை கணிக்க முடியுமா?

அதை ஆராயப் போகும்போது, ஒரு சுவையான தகவல் காணக்கிடைக்கிறது. அதை விளக்கும் முன் அய்யா நாராயணரின் பூர்வதலத்தைப்பற்றி சில குறிப்புகளை நாம் நோக்க வேண்டியிருக்கிறது.

சாமித்தோப்பு என்றும் தாமரையூர் என்றும் பெயர் வழங்கப்பெறும் அய்யாவின் ஜென்மபூமிக்கு சாஸ்தாங் கோவில்விளை' என்ற பெயரும் உண்டு.

அகிலத்திரட்டில் அய்யா பிறந்த ஊரைப்பற்றி சில சிறப்புகளும் கூறப்பட்டிருக்கிறது.

ராமஜென்மபூமியான அயோத்தியைப்பற்றியோ கண்ணன் வளர்ந்த பிருந்தாவனத்தைப் பற்றியோ புராணங்களிலும் இதிகாசங்களிலும் சிறப்புக் குறிப்புகள் எல்லாமே சுவாமித்தோப்பைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது.

பஞ்ச பாண்டவர்களுள் அர்ஜுனன் சிவபெருமானிடம் பாசுவதாஸ்திரம் வேண்டி தவம் இருந்ததும் இந்த சாமித்தோப்பில்தான்.

பர்வதராஜன் தவமிருந்து அன்னைப் பார்வதியைப் பெற்றெடுத்ததும் இந்த பதியில்தான்.

தேவேந்திரன் கூட இந்தத் தளத்திலிருந்து தவம் இயற்றியிருக்கிறான். இன்னும் பாராச முனிவர், வியாக்ரர் போன்ற பல முனிவர்களும் பிரம்மாதி தேவர்களும் இத்தளத்தில் எழுந்தருளி, இறையருளை பெற்றதாக அகிலத்திரட்டு தகவல் தருகிறது. (சுவாமித் தோப்புக்கருகிலுள்ள சுசீந்திரம், கன்னியாகுமரி போன்ற அருள் தலங்களிலுள்ள மகிமைகள் அனைத்தும் சாமி தோப்பிலும் இருந்ததாக அகிலத்திரட்டில் அறிகிறோம்.)

இப்படி ஆன்மீக செழுமை பெற்ற சுவாமித் தோப்பில் மட்டுமே அய்யா நாராயணர் வாழ்ந்திருந்ததாக கூறமுடியவில்லை. சுவாமித் தோப்பு அல்லாமல் வேறு ஒரு இடத்திலும் அவர் வாழ்ந்திருக்கிறார்.

அதுதான் பூவண்டன் தோப்பு.

இந்தப் பூவண்டன் தோப்பு சுவாமிகளுக்குரிய சொந்த இடமாகத் தெரியவில்லை. சில தகவல்களின்படி நோக்கினால் இது வேறொரு பெரிய பிரமுகருக்குரியதாகத் தெரிகிறது.

அந்தப் பிரமுகர் ஒரு சதாரண கிராமவாசி அல்ல. அப்போது தென் திருவிதாங்கூரை ஆண்டு வந்த மன்னரின் சபையில் ஒரு பெரும் பதவி வகித்த பூவண்டனார் என்னும் யாதவப் பெருமகனார்.

சான்றோர் இனத்தில் பிறந்த முத்துக்குட்டி சுவாமிகளுக்கும் யாதவர் (கோனார்) என்று கூறப் படும் இனத்தைச் சேர்ந்த பூவண்டனாருக்கும் ஒரு அபூர்வ ஆன்மீக சம்பந்தம் இருப்பதாகத் தெரிய வருகிறது.

பூவண்டனார் அய்யாவின் இயக்கத்தில் தனி ஈடுபாடு கொண்டிருக்கிறார்.

ஒரு முறை சுசீந்திரத்திற்கு திருவிதாங்கூர் மன்னர் வருகை புரிந்திருக்கிறார். அப்போது சில உயர் குடியினர் நாராயணர் இயக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டு புகார் சொன்னார்கள்.

நாராயணர் மீது உடனடியாக 'தெய்வ குற்றத் திற்காக' நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் ஆவேசமாக போர்க்குரல் எழுப்பினார்கள்.

அச்சமயம் இந்தப் பூவண்டனார் என்னும் யாதவப் பெருமகனார்தான் 'சான்றோர் இனத்தில் முடிசூடும் வாக்குக் கொடுத்திருக்கிறான்' என்று மன்னரிடம் வாதாடுகிறார்.

அதற்கு மன்னன் கோபித்துக் கொண்டு, இப்படியே பெருமாள் வந்து பிறக்க வேண்டுமென்றால் போத்தி நம்பூதிரி குலத்தில் பிறக்காமல் இந்தத் தீண்டத்தகாத தாழ்ந்த இனத்தில் நாராயணர் பிறப்பாரோ’ என்று கேட்கிறார்.

அதற்கு யாதவர்கோமான், ‘எளிமைக் குலங்கள் என்று எண்ணவேண்டாம் இறைவனுக்கு சாதி பேதங்கள் கிடையாது. எச்சாதிக்காரர்களுக்கும் பொதுவானவன் என்று வாதாடுகிறார்.

அதோடு, வைகுண்டர் பேரில் நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு திருவனந்தபுரம் நோக்கி திரும்புவோம்’ என்று ஆலோசனை கூறுகிறார்.

பூவண்டனாரின் இந்த மொழிகேட்டு வெகுண்டெழுந்த மன்னர், ‘அந்த சான்றோர் இனத்தவரிடம் கைக்கூலி வாங்கிக் கொண்டு மழுப்புகிறீரா’ என்று அடாத மொழி பேசி மிரட்டுகிறார்.

அப்போது, எந்த சாமானியனும் கூற முடியாத அளவு வேகத்துடன் பூவண்டனார் மறுப்பு கூறுகிறார்.

‘நான் மாண்டுபோனாலும் பயமில்லை; அய்யா முத்துக்குட்டி சுவாமிகளிடம் இருக்கும் சக்தியைத் தெரிந்து கொள்ளமல் நீ அவரை எதிர்க்கிறாய், மன்னா உமது படை, அரண்மனை, அத்தனை

சிறப்புகளும் அவர்முன் தோற்று எரிந்து போகும், நீ கரிந்து சாவாய்' என்று ஆவேசமாய் கூறுகிறார்.

அவருடைய வார்த்தைகள் இவை—

மழுப்பில்லை கேளு மாண்டு நான் போனாலென்ன
வழுப்பில்லை உமக்குது தூண்டல் வளருது
அவரிடமே கண்டாய்
கழுத்திலே உமது கையால் கத்தியை வாங்கி வைப்பாய்
ஆனையும் படையும் உந்தன் அரண்மனைக்
கோவில் காலும்
சேனையும் குடையும் வியாழச் செல்வமும்
சிறப்புமெல்லாம்
ஏனமுமிகவே தோற்று எரிந்து நீ கரிந்து சாவாய்
நான் இதை சொல்லவில்லை நாரணர் உரைத்தார்.

—இப்படி ஒரு ஆவேசமான சொல் தாக்கு தலுக்குப் பிறகும், மன்னன் விடுவானா? பூவண்டனாரை சிறையிலடைக்கிறார்.

இது அகில திரட்டு நூலில் கிடைக்கும் வரலாற்றுத் தகவல்.

இரண்டு விசயங்களை இதில் நாம் காண் கிறோம். ஒன்று-சான்றோர் இனத்தைத் தவிர மற்ற இனத்தவரும், அதிலும் குறிப்பாக கற்றறிந்து மன்னர் சபையில் பதவி வகிப்போரும், ஒரு தாழ்த்தப்பட்ட இனத்தில் சுவாமி அவதரித் திருந்ததை ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஏற்றுக்

கொண்டதோடு மட்டுமல்லால் சாதி வெறி கோரத் தாண்டவமாடிய அந்தக் காலத்திலேயே சுவாமி யைப் பற்றி மன்னரிடம் துணிச்சலாக வாதாடி யிருக்கிறார்கள். அது என்ன சாதாரண வாதாடு தலா? எச்சரிக்கையும்,சவாலும் நிறைந்த முழக்கம்.

அந்த முழக்கத்தின் முடிவில், 'இது நாராயணர் கூற்று' என்று அழுத்தம் திருத்தமாக சொல்கிறார்.

இந்த சம்பவத்திற்கு ஓரே ஒரு முன்னுதாரணம் தான் கூறமுடியும். அவர்தான் பிரகலாதன்.

தன் தந்தை இரணியன் முன்னாலேயே எதிர்த்து நாராயணருக்காக சாட்சி சொன்னவன் அவன்.

கொஞ்சம்கூட சந்தேகம் இல்லாமல் உறுதித் தின்மையோடு, 'இந்தத் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் நாராயணன்' என்று அடித்துக் கூறுகிறான்.

இந்த உறுதி புராணங்களிலுள்ள எந்த பக்த னுக்கும் இருந்ததாகத் தகவல் இல்லை.

தெய்வத்தைப் பற்றிய அத்துணை உறுதிப் பாட்டோடும் பிரகலாதனுக்கு அடுத்ததாகத் திகழ்பவர் இந்த பூவண்டனார்தான்.

அவர் நாராயணர் தான், அந்த நாராயணர் வாக்கினால் கூறுகிறேன். அவரை மதிக்காததால்

நீயும், உன் கொற்றமும் அழிந்துவிடுவீர்கள்' என்று கூறுவதற்கு எவ்வளவு மனோதிடம் வேண்டும்.

(அன்றுஅவர் மனோதிடத்துடன் நாராயணன் பெயரால் இட்ட சாபப் படியே மன்னர் ஆட்சி கவிழ்ந்தது என்று பிற்கால வரலாற்றில் நாம் காண்கிறோம்)

பூவண்டனாரைப் பற்றி இன்னொரு சிறப்பும் உண்டு.

ஏசுபிரானுக்கு அவருடைய சீடர்களும், தொண்டர்களும் தராத பலத்தை-அய்யா வைகுண்ட பூவண்டனார் தந்திருக்கிறார்.

ஏசுபிரானின் சீடர்களில் ஒருவர் அவரையே நம்பாதவராக இருந்திருக்கிறார். இன்னொருவர் அவரையே காட்டிக் கொடுத்தவராகவும் இருந்திருக்கிறார். மற்றவர்களும் கூட அவர் உயிர்த்தெழுந்து காட்சி அருளிய பின்னரே கிறிஸ்துவ மதக் கருத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

பூவண்டனாரோ வைகுண்டரின் அவதார காலத்திலேயே, அவருடைய பக்கபலமாக திகழ்ந்த தோழராக இருந்திருக்கிறார்.

பூவண்டனார் மட்டுமல்லாது வைகுண்டரின் மற்ற சீடர்களும் ஒரு அபூர்வ சிறப்பம்சத்துடன் திகழ்ந்திருக்கிறார்கள்.

11. நிழல் தாங்கல்கள்

ஆணும் பெண்ணுங்கூடி ஆசாரம் செய்திருங்கே தான தர்மம் செய்து கொண்டு தழைப்பீர்கள் நீங்க மக்காள்.

அருள் நூல் பத்திரம் [பக்கம்-29

இந்து மதத்திற்கு சமீபத்தில்தான் 'இந்து மதம்' என்று பெயர் வந்தது. அதற்கு முன்பெல்லாம், 'சனாதன மதம்' என்றே வழங்கப்பட்டது. அதிலிருந்துதான் 'சனாதனிகள்' என்று இந்து மதத்தின் தீவிர உணர்வுள்ளவர்களைக் குறிப்பிட்டார்கள்.

'இந்து மதம்' காலத்தால் அனைத்து மதங்களுக்கும் முற்பட்டதென்றும், இதுதான் உலகமெல்லாம் பரவியிருந்த 'ஆதி மதம்' என்றும், பெரியவர்கள் சொல்வார்கள்.

இந்த மதம் உலகெங்கும் பரவியிருந்ததற்கு ஆதாரமாக, வெவ்வேறு கண்டங்களில் காணப்பட்ட இந்து தெய்வங்களின் உருவச் சிலைகளை ஆதாரமாகக் குறிப்பிடுவார்கள்.

'மற்ற மதங்கள் தோன்றியது. இந்தக் காலத்தில்தான்' என்று வரையறுத்துக் கூற முடியும். 'கிறிஸ்து மதம் தோன்றி இத்தனை வருடங்கள் தான் ஆயிற்று என்பதுபோல் சீக்கிய மதம், பௌத்த மதம் இஸ்லாமிய மதம் இவற்றுக்கெல்லாம் கால நிர்ணயம் உண்டு. ஆனால், சனாதன மதமாகிய இந்து மதம் எப்பொழுது தோன்றியது என்று கணக்கிடவே முடியாது; அது காலத்தை வென்ற ஆதி மதம்' என்ற கருத்தை சமீபத்தில் முக்தி அடைய காஞ்சிப் பெரியவர்கள் கூறியதுண்டு.

'பரம 'பிதா'வானவர் கிறிஸ்தவமதத்தில் கடவுளாகக் குறிப்பிட்டுள்ளார். அதேபோல், 'அல்லா' இஸ்லாமிய மதத்தின் கடவுளாகப் போற்றப்படுகிறார். அப்படி இந்து மதத்தில் கடவுளாக யார் குறிப்பிடப்பட்டிருக்கிறார்' என்று பலர் கேட்பதுண்டு.

ஆனால், உபநிஷத்திலும் சரி, வேதத்திலும் சரி 'பரம்பொருள்' என்று, ஒரே ஒருவரை தான் இந்து மதக் கடவுளாக யார் குறிப்பிடப்பட்டிருக்கிறது.'

'பிரம்ஹன்' (பிரம்மா) என்பதே அந்தக் கடவுளின் திருநாமம்.

வேதம், உபநிடதம் இவற்றில் கூறப்பட்ட செய்திகளைப் பாமர ரஞ்சகமாகவும் கதை ரூப

மாகவும் வெளிப்படுத்தவே, வேத வியாசர் புராணங்களை உருவாக்கினார். அதனால்தான் பரம்பொருளின் அம்சங்களாக—சிவன், பிரம்மா விஷ்ணு, சக்தி, பிள்ளையார், முருகன், கிருஷ்ணன், ராமர் இப்படி பல தெய்வங்கள் புராணங்களிலும், இதிகாசங்களிலும் இடம் பெற வேண்டியதாயிற்று.

'பரம்பொருளின் அம்சமாகவே பூமியில் அவர்கள் அவதரித்துக் காட்சி தந்தார்கள்' என்பது புராணக் கூற்று.

மக்களைப் பொறுத்த அளவில், அவர்கள் இந்தக் 'கடவுட் தன்மை'யின் ஆழமான ஆராய்ச்சிக்குச் சென்றதில்லை. பலர் சொல்ல விரும்பியதும் இல்லை.

அவர்கள் எல்லா நாமங்களையும் கடவுளாக ஏற்றுக் கொண்டார்கள். சிவனையும் வணங்கினார்கள். விஷ்ணுவையும் வணங்கினார்கள். முருகனையும் வணங்கினார்கள். பிள்ளையாரையும் வணங்கினார்கள். அதே போல் அம்பாளையும் அதே பக்தி நிலையில் வைத்து வணங்கினார்கள்.

'ஏன், ஒரு கல்லை கட்டி வைத்து, அதிலேயே தம் இஷ்டபடி தெய்வத்தை உபாசனை செய்து வணங்கும் மனப்பக்குவம் நம் மக்களிடம் உண்டு!

இதுதான், இந்து மக்களின் சமரச உணர்வான கடவுள் கொள்கை. ஆனால் மக்கள் கடவுள்களை சமரசமாக ஏற்றுக் கொண்டாலும், கடவுள்களை வழிபடுவதில் பல வித்தியாசமான நிலைகளை உருவாக்கி, மக்கள் வழிபாட்டையே பல தட்டு களாகச் சில மதவாதிகள் பிரித்தனர்.

அப்படிப் பிரிப்பதற்கு இடையில் புகுத்தப்பட்ட சாஸ்திரங்களும், ஆகம விதிகளும் பெரிதும் உதவின. இந்த ஆகம விதிகளும், சாஸ்திரங் களும் தெய்வத்தால் உருவானவை அல்ல. தெய்வ வழிபாட்டு முறையை தம் இஷ்டம் போல விநியோகிப்பதற்கும், பகுத்துக் கொள்வதற்கும் அவற்றில் தம் மேலாதிக்கத்தை நிலை நாட்டுவ தற்கும் சில சனாதனிகளும், பூசாரிகளுமே உருவாக்கினர்.

எல்லையற்ற சக்திமிக்கக் கடவுளை, இவர்கள் சில விதிகளுக்குள் அடக்க முயன்றனர். இந்த ஆகம விதிப்படி ஆலயம் கட்டினால்தான் கடவுள் அங்கே இருப்பார். அந்தவிதிப்படி மந்திரம் சொன் னால்தான், கடவுளின் அருளைப் பெற முடியும்' என்று பல விதிகளையும் சாத்திரங்களையும் உரு வாக்கி, கடவுள் தன்மையை ஒரு வரையறுக்கப் பட்ட நிலைக்குள் அடக்கினர்.

இவற்றின் அடையாளமாகத்தான், இந்து மதத்தில் பல்வேறு முறைப்படி வழிபாட்டு நியதிகள் உருவாயின.

பல மாநிலங்களில் ஆகம விதிப்படி ஆலயங்களும் வழிபாடுகளும் அமைக்கப்பட்டு அவற்றில் பூசாரிகளாக ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினரையே நியமித்தனர்.

அதேபோல், கேரளா, கர்நாடகம் போன்ற பகுதிகளில் தாந்திரீக முறை.

இந்த முறைகளுக்குள்ளேகூட ஓரிடத்துக்கும், இன்னொரு இடத்துக்கும் வித்தியாசம் உண்டு. தமிழ்நாட்டு ஆலயங்களில் சுவாமி இருக்கும் கருவறையில் குருக்களைத் தவிர யாரும் உள்ளே நுழைய முடியாது. ஆனால், மகாராஷ்டிரம் போன்ற பகுதிகளில் பக்தர்கள் மூல விக்கிரகத்தைத் தொட்டே வழிபாடு செய்யலாம். (பண்டரிபுரம் பாண்டுரங்கன் ஆலயத்தில் அப்படித்தான்.)

இந்த முரண்பட்ட நிலைகளையுமே இந்து மதம் ஏற்றுக் கொண்டது. அதே சமயம் இந்த நிலைகளில் எதன்படியும் வழிபாடு செய்ய முடியாதபடி சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை மக்கள் தொகையில் சுமார் எண்பது சதவீதத்திற்கு மேல் 'தீண்டத் தகாதவர்களாக, கடவுளை தரிசித்து வணங்கக்கூட தகுதியற்றவர்களாக ஒதுக்கப்பட்டனர்! இப்படி ஒரு சனாதன ஆதிக்க மரபுகளுக்கும் விதிகளுக்கும் மத்தியில் ஒரு புதிய வழிபாட்டு முறையை உருவாக்கியவர், அய்யா நாராயணர்.

அவர் ஏற்படுத்திய புதிய வழிபாட்டு முறைக்கு ஒரே மந்திரம் 'அன்பு' தான் மிகமிக எளிமையான தாகவும், அதே சமயம், அனைத்திலும் வலுவானது மான அந்த 'அன்பை'யே ஒரு 'கொடி'யாக்கி, தம் வழிபாட்டு முறையை ஏற்பவர்களை 'அன்புக்கொடி மக்கள்' என்று அழைக்கச் செய்தார் அவர்.

இதற்காக, அவரும், அவருடைய சீடர்களும் வழி வழியாக வந்த அய்யாவழி ஆன்மீகப் பெரியவர் களும் ஏற்படுத்திய வழிபாட்டுத் தலங்களுக்குப் பெயர்தான் 'நிழல் தாங்கல்கள்.'

இந்த 'நிழல்தாங்கலு'க்கு மூலமாக சில 'பதிகள்' இருந்திருக்கின்றன.

இஸ்லாமியருக்கு 'மெக்கா' மாதிரி, கிறிஸ்துவர் களுக்கு 'பெத்லஹேம்' மாதிரி, இராம' பக்தர் களுக்கு 'அயோத்தி' மாதிரி, கிருஷ்ண பக்தர் களுக்கு 'பிருந்தாவனம்' மாதிரி, ராகவேந்திரர் பக்தர்களுக்கு 'மந்திராலயம்' மாதிரி.

அய்யா வழி சான்றோர்களுக்கு முக்கிய வழி பாட்டுத் தலங்களாகவும், புனித யாத்திரைக்குரிய தலங்களாகவும் திகழ்பவை சில பதிகள். அவற்றுள் முக்கியமானது, சுவாமிகள் அவதரித்த 'சுவாமித் தோப்பு பதி' அத்துடன், 'தாமரைக் குளம் பதி' 'பூப்பதி', 'அம்பலப் பதி', 'முட்டப் பதி' ஆகிய பதிகளும் சேர்த்து ஐம்பெரும் பதிகளாகப் போற்றப் படுகின்றன,

இப்பதிகள் தவிர இன்னொரு முக்கியமான பதியைப் பற்றி அய்யா குறிப்பிட்டிருக்கிறார். அது தான், கடலுக்குள் இருப்பதாகவும், இன்னும் துலங் காமல் இருப்பதாகவும் கூறப்படும் 'துவரயம்பதி.'

அய்யா, தம் சீடருக்குச் சொன்ன பத்திரத்தில்-

'கடைசியில் ஒருபதிதான் கடலுக்குள்ளிருக்கு தப்பா.

அது துவரயம்பதிதான் துலங்கும்பதியதுதான்' என்று கூறுகிறார்.

இந்த ஆதி ஐம்பெரும் பதிகளின் ஆன்மீக அம்சங்களாகத்தான் பல்வேறு இடங்களில் 'நிழல் தாங்கல்கள்' உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இன்று சுமார் எட்டாயிரம் என்ற அளவில் தோன்றியிருக்கும் இந்த 'நிழல் தாங்கல்களுக்கு 'இணைத்தாங்கல்கள்' என்றும் பெயர் உண்டு. அதாவது. ஐம்பெரும் பதிகளை ஒட்டியுள்ள 'சார்புக் கோயில்கள்' என்று அர்த்தம்.

ஒரு தெய்வ அவதாரம், அவர் காட்சி ரூபமாக இருந்த காலத்திலேயே அவருடைய கொள்கைகள் வழிபாட்டிற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது உலக மதங்களின் வரலாற்றிலேயே தனிச்சிறப்பு அது அய்யா வைகுண்டருக்குப் பொருந்தியிருக் கிறது.

அய்யா வைகுண்டர், தாமே நேரில் சென்று, 'செட்டிக் குடியிருப்பு' அகஸ்தீஸ்வரம், பாலூர், கண்டவிளை, வடலிவிளை, பாம்பன் குளம், கடம்பன் குளம் ஆகிய ஊர்களில், இணத்தாங்கல் களை நிறுவியிருக்கிறார். அவருடைய சீடர்கள், தமிழகத்தின் தென் மாவட்டங்களிலுள்ள பல பகுதி களுக்குச் சென்று இத்தகைய இணத்தாங்கல்களை நிறுவியிருக்கிறார்கள்.

இந்த நிழல் தாங்கல்களின் வழிபாட்டு முறை யைப்பற்றி சில புதுமையான விளக்கங்கள் அய்யா வாலேயே கூறப்பட்டிருக்கின்றன அவர் வெறுமனே சாமி கும்பிடுவதை மட்டும் வழிபாடாகக் குறிப்பிட வில்லை. அவர் கூறிய சில நெறிகள் இவை...

❋ 'தான தர்மம் செய்துகொண்டு தழைப்பீர்கள் நீங்கமக்காள்'

❋ 'நமக்கொரு ஒழுங்கு வேணும்'

சராசரத்தையும் போற்றித் தானதர்மம்
செய்திடுங்கோ
நல்லவர் இட்ட தர்மம் நாள்தோறும் பொங்குமடா
தர்மம் தந்தவனும் நல்லவன்தான்;
தராதவனும் நல்லவன்தான்
நல்லவனும் பொல்லாதவனும்
யெல்லாரும் நல்லவனென்று சொல்லிவிடு'

❋ 'நீயுமுன்கூடச் சேர்ந்த ஜனங்களும் இட்ட தர்மம் பெருகுயடா'

❋ நல்ல புத்தியாயிருக்காவிட்டால் பிழைகள் வரும் உங்களுக்கு பற்பல ஊர்களிலேயிருக்கும் நிழல்தாங்கல்களில் என் மகனே.

❋ பள்ளியிலே தானும் வைத்து பணிவிடைகள் செய்திடுங்கோ

❋ பள்ளிக்கூடங்கள்தோறும் பதிவாக நீங்கள் போய் இதை, சொல்லுங்கடா என் மகனே மாமுனியும் சொன்னேன்.

❋ பத்திரத்தைப் பள்ளியில் வைத்துப் பகர்ந்து கொண்டு நீ மகனே இப்படி, உத்தரவு தந் தேன் உகந்து வா, மகனே.

❋ சத்தியமாயிருக்க வேணும் சண்டை போடாதே மகனே சத்திரத்தைப் பிரிவெழுதி வாங்குங்கடா மகனே.

❋ அவரவர் கூடு மட்டும் உள்ள தர்மம் தந்ததை வாங்குங்கடா மகனே.

❋ இந்த பத்திரத்தைப் பள்ளியிலே தானும் வைத்துப் பணிவிடைகள் செய்திடுங்கோ.

❋ புத்திர பலன்களுண்டாம் பூமிவிளைந்து வரும்.

❋ சத்தியமாயிருக்க வேணும் தர்மபதி கிடைக்கும் என் மகனே.

❋ **தர்ம சங்கத்தார் தர்மம் வளரும்.**

இவையெல்லாம் அய்யாவின் திருவுளப்படி, அருள் நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் வழிபாட்டு முறைகள்.

அதாவது சமுதாயக்கட்டுப்பாட்டை நிலை நிறுத்தவும், ஒழுக்கத்தை வலியுறுத்தவும், கல்வி அறிவை புகட்டவும், ஒற்றுமையை வளர்க்கவும், இந்த இறையுணர்வுத் திருத்தலங்களை அய்யா அமைத்திருப்பது ஒரு வித்தியாசமான வழிபாட்டு அம்சம். கிட்டத்தட்ட சமுதாய நன்னெறிக் கூடங்களாகவே நிழல் தாங்கல்களை அமைத்தார்.

'காணிக்கைக் கைக்கூலி, வேண்டாமெ'ன்றும், 'ஆடு, கோழி இவற்றை பலியிட வேண்டாமென்றும் ஒரு அன்பு நெறியை அய்யா போதிந்திருக்கிறார்.

இத்தாங்கல்களில் திண்ணைப் பள்ளிக்கூடங்களை அமைத்து அக்காலத்தில் தேவைப்பட்ட மேற்கத்திய கல்வி முறைகளைக்கூட போதித்திருப்பதாக ஒரு ஆய்வாளர் குறிப்பிடுகிறார்.

இந்த இணைத்தாங்கல்களின் எவ்வித உருவ வழிபாடும் கிடையாது.

'உண்பான்' என்ற அன்னதானம், அத்தாங்கல்களின் விழாக்களில் முக்கியமான அம்சம். ஆண்டுக்கு இருமுறை (அல்லது ஒரு முறை) 'பால் வைப்புவிழா' என்னும் விழா எளிமையாகவும், பொதுநலநோக்குடனும் நடைபெறுகின்றன.

'கார்த்திகை மாதம் இரண்டாம் வெள்ளியன்று தொடங்கி, சுவாமித்தோப்புப் பதியில் 'அகிலத் திரட்டு அம்மானை' யினைத் தினந்தோறும் 'ஏடு வாசிப்பு' என்ற பெயரில் பதினேழு நாட்கள் வாசித்து விளக்கம் சொல்வது வழக்கமாகும் தலைமைப் பதியில் 'ஏடு வாசிப்பு' முடிந்த பின்னர் தாங்கல்களிலும், பிற பதிகளிலும் 'ஏடு வாசிப்பு' நடைபெறுகிறது' என்கிறார் பேராசிரியர் இரா. பொன்னு.

இந்த விழாக்கள், பூஜைகள் இவற்றை நடத்து வதற்கு, அய்யா ஒரு அருள்வாக்கு கூறியிருப்பதாக சுவாமித்தோப்புப் பதியிலிருக்கும் பாலபிரஜாபதி அடிகளார் தெரிவித்தார். அதாவது.... 'பிச்சை எடுத்து மிச்சமில்லாமல் செலவிட வேண்டும். என்பதே அது. 'தேவையான அளவுக்காக மட்டுமே நிதி திரட்ட வேண்டும். பொருள் சேமிப்பு என்பது தாங்கல்களைப் பொறுத்த அளவில் தேவையற்றது. அதனால் பொருளை மையமாகக் கொண்டு பக்தர் கள் மத்தியில் கலவரங்களும், பேராசைகளும் உருவாகலாம்.'

'இதுவே அய்யாவின் திருவுளம்

'இணைத்தாங்கல் ஆலயங்கள்கூட மிகவும் எளிமையாகவே அமைக்கப்படுவதையே அய்யா விரும்பியிருக்கிறார். மூலப்பதியான சுவாமித் தோப்புப்பதியே அடக்கமாகவும், சிறிய அமைப்

யிலும்தான் திகழ்கிறது. உருவங்களோ சுவாமிப் படங்களோ உள்ளே கிடையாது. ஒரு நாற்காலியில் அய்யா அமர்ந்திருப்பதன் பாவனையாக நாற்காலி யும், உத்திராட்ச மாலையும் மட்டுமே காணப்படு கின்றன.

தாழ்த்தப்பட்ட மக்களின் தன்மானத்தை விளக்குவதுபோல், கோயிலுக்குள்ளேயே துண்டைத் தலையில் கட்டி வழிபாடு செய்ய வேண்டும் என்ற புது நெறி கண்டவர் அய்யா.

அத்தப் புது நெறிக்கு பக்கத் துணையாக அவர் காலத்திலேயே பஞ்ச பாண்டவர் என்று கூறப்படும் ஐந்து சீடர்கள் அவருக்கு அணுக்கமாக இருந்து பணியாற்றியிருக்கிறார்கள். அவர்களைப் பற்றிய விவரங்கள் தொடரும்.

12. 'ஸ்ரீ நாராயண குரு'வுக்கு முன் அவதரித்த ஞானக் கடல்!

அறிந்தோர் அறிந்திடுங்கோ அறிவுள்ளோர் கேட்டிடுங்கோ
தெரிந்தோர் தெரிந்திடுங்கோ உங்கள்
சித்தம் பல தாண்டவரை

-அருள் நூல்

அய்யா சீசருக்கு சொன்ன சிவ காண்ட
அதிகாரப் பத்திரம் (பக்கம்-41)

சமீபத்தில் சென்னை அருகே, விருகம்பாக்கத்தில், ஓர் ஆன்மீக நிகழ்ச்சி நடைபெற்றது. முன்னாள் மாநில ஆளுநர் (சி. சுப்பிரமணியம்), முன்னாள் முதல்வர் (கலைஞர்) போன்ற போற்றுதற்குரிய பெரிய தலைவர்கள் கலந்து கொண்ட அந்த விழாவில், 'குருதேவ தர்மம்' என்ற மாத நூல் வெளியிடப்பட்டது.

'ஸ்ரீ நாராயண குரு மந்திரம் சமதர்மம் அறக்கட்டளை' சார்பில் கேரளத்தில் தோன்றிய ஸ்ரீ நாராயண குருவின் ஞானபோதனைகளையும் சமூக நெறிகளையும் மக்களிடையே பரப்பும் அரிய

பணியாக அந்த நூல் வெளியீடு நடந்திருக்கிறது.

ஸ்ரீ நாராயண குருவின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட சில செய்திகளும், அந்த விழாவில் தெரிவிக்கப்பட்டன. கேரளாவிலுள்ள ஈழவர் சமுதாய மக்கள் ஒடுக்கப்பட்டிருந்தபோது, அந்த இனத்தில் தோன்றி, அந்த இனத்து மக்களுக்காக தனித்தன்மை மிக்க ஆன்மீக வழியையும், சமூகப் புரட்சியையும் மேற்கொண்டார் அவர்.

ஒருமுறை நாராயணகுரு, கோயில் கட்டிய போது, கேரளத்து நம்பூதிரிகள், 'நீங்கள் கோயில் கட்டுவதற்கு அருகதையுள்ளவர்கள் அல்ல' என்று தடுத்தனர், அதற்கு நாராயணகுரு, 'நான் உங்கள் 'நம்பூதிரிகளின் கடவுளை' என் ஆலயத்தில் அமைக்கவில்லை. எங்கள் மக்களுக்குரிய தெய்வத்தைத்தான் அமைத்திருக்கிறேன்' என்று வீறு கொண்டு எழுந்து விடையளித்தவர் ஸ்ரீ நாராயண குரு.

அதோடு, 'மக்கள் மத்தியில் கல்விப்பணி, ஒழுக்கம் இவற்றைப் பரப்புவதே சிறந்த ஆன்மீகம்' என்ற உணர்வில், அதற்கான பணிகளில் ஈடுபட்டார்.

அவரிடம் ஒரு 'கண்ணாடித் தத்துவம்' பெருமை மிக்கதாக அமைந்திருந்ததை, அந்த

விழாவில் குறிப்பிட்டார்கள். அவர், கண்ணாடி முன் நின்று இறைவனை வணங்கச் செய்தாராம். அதற்கு கலைஞர் கூறியவிளக்கம்; 'கண்ணாடியைப் பார்த்தால் நம் உருவம் தானே தெரியும்' எனவே, 'நீதான் ஆண்டவன், உன் மனச்சாட்சிதான் ஆண்டவன்' என்று உணர்த்திய பெருமை நாராயணகுருவுக்கு உண்டு' என்றார் அவர்.

இத்தகைய பெருமைக்குரிய நாராயணகுரு வாழ்ந்த காலம் கி. பி. 1854 முதல் 1928 வரை.

ஆனால், நாராயண குருவின் போதனைகள், நெறிகள் அனைத்துமே அவருக்கு முற்பட்ட அய்யா நாராயணரிடமிருந்து உணர்வுபூர்வமாக கிரகிக்கப் பட்டவை.

அய்யா நாராயணர் இப்பூமியில் தோன்றிய காலம் 1809-1851.

ஆம்; நாரயண குரு பிறக்கும் முன்னரேயே பூமியில், 'அய்யா வழி ஞான சாம்ராஜ்யத்தை'த் தோற்றுவித்துவிட்டு, தெய்வ நிலை பெற்றவர், அய்யா வைகுண்டர்.

பகவான் வைகுண்டரிடமிருந்து ஆன்மீக செய்தி களையும், சமூகப் புரட்சிகளையும் நாராயணகுரு ஏற்றுக்கொண்டு, அவற்றைத் தம் வழியில் உலகறி யச் செய்து இன்றும் சகலதரப்பாராலும் 'பேசப்படு கிறார். அவரோடு, ஓரளவு கிட்டத்தட்ட சமகாலத்

தில் வாழ்ந்த வள்ளலாரையும், பெரியாரையும் மேற் சொன்ன விழாவில் குறிப்பிட்டார்கள்.

ஆனால், இவர்களுக்கு முற்பட்டு கிட்டத்திட்ட இதே சமூகச் சூழ்நிலையில் முதன் முதலாக நலிந் தோருக்காக குரல் கொடுத்து 'தாழக்கிடந்தோரை தற்காப்பதே தர்மம்' என்று முழங்கி, சாதனை படைத்த அய்யா வைகுண்டரைப் பற்றி அந்த விழாவிலும் யாரும் பேசவில்லை. அவருக்காக நாடு தழுவிய ஆன்மீக இயக்கங்கள் ஏதாவது உலக அரங்கில் பேசப்படும் அளவுக்கு இயங்குகிறதா? என்றால், நமக்கு விவரம் தெரியவில்லை.

இதற்குக் காரணம் என்ன?

'இந்திய முதல் சுதந்திரப்போருக்கு முன்னேயே உழைக்கும் மக்களைத் திரட்டி அவர்களின் வாழ்வு மேம்பாட்டிற்காக போராட்டத்தில் இயக்க வைத்த பெருமை வைகுண்டசாமியைத்தான் சாருகிறது' என்று பிரபல பொதுவுடமைச் சிந்தனையுள்ள எழுத்தாளர் பொன்னீலன் குறிப்பிடுகிறார். அதே சமயம், அவரே, 'ஸ்ரீ நாராயண குருவால் சாதிக்க முடிந்ததைப்போல், வைகுண்டசாமியின் கனவுகள் முழுமையாக நிறைவேறவில்லை. ஒருசிறு பகுதியே இன்றுவரை நிறைவேறியுள்ளது!' என்று வருத்தப் படுகிறார்.

இதே நிலையைப் பற்றி சுவாமிகளைப் பற்றி சில ஆராய்ச்சி நூல்களை வெளியிட்ட பேராசிரியர்

டாக்டர் இரா. பொன்னு சில கருத்துக்களைக் கூறு கிறார். அவை :

'ஒரு தலைவரின் வெற்றி அவன் தேர்ந்தெடுக் கின்ற தளபதியின் திறமையைப் பொறுத்தே அமை யும் என்பது வரலாறு உணர்த்தும் உண்மையாகும். சுவாமிகள் அத்தகைய தளபதி ஒருவரை தேர்ந் தெடுத்தாரா? அல்லது கிடைத்திடப் பெற்றாரா? என்ற கேள்வியே இயக்கத்தின் வளர்ச்சி பற்றி அறிய விரும்புவோர்க்கு ஏற்படும் அவாவாக இருக்க முடியும்.

ஐந்து சீடர்களைச் சுவாமிகள் கொண்டிருந்த போதிலும் அவரது காலத்திற்கு பின்னர் அவரிட்ட பாதையில் மக்களை நன்னெறிப்படுத்தி அவர் களால் அழைத்துச் செல்ல முடிந்ததா? இராம கிருஷ்ண பரமஹம்சருக்கு ஒரு விவேகானந்தர் கிடைத்தது போன்று நாராயண குருவுக்கு ஒரு குமரன் ஆசான் கிடைத்தது போன்று சுவாமி களுக்கு கிடைத்தார்களா? உறுதியாக இல்லை என்றே சொல்லலாம். சுவாமிகள் காட்டிய பாதை யில் நிலையான அமைப்பு ஒன்று ஏற்படுத்தி சீர் திருத்த பணியினை ஒழுங்குபடுத்திட சீடர்களால் இயலவில்லை. பரமஹம்சருக்கு அவரது சீடர்கள் 'மிஷன்' ஒன்றினை ஏற்படுத்தி தமது குருவின் கொள்கைகளுக்குச் செயல்வடிவம் கொடுத்து, உலகம் முழுமையும் பணியாற்றியது போன்று நாராயண குருவுக்கு அவர் தம் சீடர்கள் ஸ்ரீநாரா

யண தர்ம பரிபாலன யோகம்' என்ற பெயரில் அமைப்பு ஒன்றினை நிறுவி சமுதாயப் பணிகளை ஆற்றி வாய்ப்பேற்படுத்திக் கொண்டது போன்று, சுவாமிகளின் சீடர்களால் ஏன் இயலவில்லை? அதன் விளைவாக மாறிவரும் காலச் சூழலுக்கேற்ப மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு பணியாற்றிட வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

'தர்மத்தில் பரமனைக் காணவும், சமய ஆசாரங்களில் செலவு செய்வதெல்லாம் வீண்' எனவும் எடுத்துக் கூறியும் பண்பட்ட சமய வாழ்க்கைக்கு இட்டுச் செல்ல, சுவாமிகள் விடுத்த அறை கூவல் மக்களிடம் சரிவரச் சென்றடையவில்லை' என்கிறார் இரா. பொன்னு.

இதைப் பற்றி நம்மிடம் கலந்துரையாடிய போது எழுத்தாளர் பொன்னீலன், 'அய்யா வைகுண்டசுவாமி ஆன்மீகத்தில் எந்த அளவு ஈடுபாடு காட்டினாரோ, அதே அளவு சமூக மேம்பாட்டிலும் நலிந்தோருக்கான வாழ்வியல் புரட்சியிலும் ஆர்வம் கொண்டிருந்தார். ஆனால் பிற் காலத்தில் அய்யா வழியினர் அதை மத இயக்கமாக மட்டுமே மாற்றிவிட்டார்கள். அதனால்தான் அவர்களுடைய சமூகக் கொள்கைகள் உலக ரீதியில் உணரப்படாமலும், அங்கீகரிக்கப்படாமலும் போய் விட்டது. அப்படி அதை சரியான நோக்கில் கொண்டு செல்லக் கூடிய சீடர்கள் அவருக்குக் கிடைக்கவில்லை' என்று குறிப்பிட்டார்.

இதைப் பற்றி மென்மேலும் துருவித் துருவி ஆய்வு செய்வது, நம் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயம். 'அய்யா வழியில் ஈடுபாடு கொண்ட பேரோளர்களும், அருளாளர்களுமே சிந்தித்து தன் இயக்கத்தில் குறைகள் இருந்தால் அதை விருப்பு வெறுப்பின்றி சரிசெய்து அய்யாவின் புகழ் உலகெங் கிலும் தழைக்க அறப்பணி மேற்கொள்ள வேண்டிய வர்கள்.

ஆனால் அவர்களுடைய அவதாரப் பணி களை — வாழ்க்கைப் பணிகளையும் ஒரு 'மூன்றாம் பார்வையாக' ஆய்வு செய்து நமக்குத் தோன்றிய கருத்துக்களை யாருடைய நிர்ப்பந்தத்துக்கும் தாட்சண்யத்துக்கும் உட்படாமல் வெளிப்படுத்தும் போது அய்யாவின் காலத்தில் வாழ்ந்த சீடர்களைப் பற்றி சில தகவல்களையும் குறிப்பிட்டாக வேண்டி யிருக்கிறது.

('மூன்றாம் பார்வை' என்று நாம்குறிப்பிடுவது, நம் அய்யா வழி இயக்கத்தில் சார்ந்திராமலும் அந்த இயக்கத்திற்கு பொறுப்புணர்ச்சி இல்லாமலும் ஒரு கோபுரத்தை எட்ட இருந்து பார்த்துத் தரிசிப்பது போல் அய்யாவினுடைய இயக்கத்தை மூன்றாம் மனிதனாக தூரத்தில் நின்று பார்ப்பதுதான். இந்தப் பார்வையில் விருப்பு வெறுப்பு கிடையாது மனதில் பட்டதையும் நம் ஆய்வின்படி கிடைக்கும் தகவல்களையும் வாசகர்களின் பரிசீலனைக்கு வைப்பது ஒன்றே இந்தப் பரிசீலனையின் நோக்கம்.)

சீடர்களைப் பொறுத்த அளவில் அய்யா நாராயணர் இயக்கத்திற்குக் கிடைத்த வாய்ப்பு உண்மையில் உலகளாவிய வேறு எந்த மதத்திற்கும் கிடைத்திருக்கவில்லை என்பதே உண்மை. கிறிஸ்துவின் சீடர்கள் ஏசுபெருமானின் 'உயிர்த்தெழுதல்' நிகழாத பின்னரே அவருடைய போதனைகளை உலகத்தின் எட்டுத் திக்குகளுக்கும் எடுத்துச் சென்றனர். புத்தர் சமாதிநிலை அடைந்த பின்னரே அவருடைய கொள்கையை ஏற்றவர்கள் இலங்கை, சீனா, ஜப்பான் போன்ற பல்வேறு நாடுகளுக்கு அவருடைய செய்தியை எடுத்துச் சென்றனர்.

ஆனால் அய்யா வைகுண்டரின் சீடர்களோ, அவரோடே இருந்து- அவருக்கு பணிவிடை செய்வதோடு இயக்கப் பணிகளையும் அவர் காலத்லேயே மேற்கொண்டிருக்கிறார்கள். சில 'நிழல் தாங்கல்களை' அய்யாவின் அவதார காலத்தின் போது ஆங்காங்கு சென்று நிறுவும் பணியையும் சீடர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

அந்த சீடர்களை 'சீசர்கள்' என்று அருள்நூல் குறிப்பிடுகிறது.

சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றை ஆய்ந்து சிலநூல்களை வெளியிட்டிருக்கும் புலவர் கு. பச்சைமால் இந்த சீடர்களைப் பற்றி நாம் சேகரித்திருந்த சில தகவல்களை நம்மோடு பகிர்ந்து கொண்டார். அந்தச் செய்திகள்...

சுவாமிக்கு நெருங்கியவர்களாக ஐந்து சீசர்கள் இருந்திருக்கிறார்கள். இவர்களில் இரண்டு பேர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். மூன்று பேர் குமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். இவர்களுள் சகாதேவா என்ற சீடனின் பெயர். ஊர் போன்ற விவரங்கள் மட்டும் அகிலத் திரட்டில் ஒரு விருத்தத்தில் இடம் பெற்றுள்ளது. அவர் இயற் பெயர் அரிகோபாலன். சுவாமி அவரை 'சகா தேவன்' என்று அழைத்திருக்கிறார்.

அவர் பேரோடு மற்ற நால்வர் பெயர்களும் தர்ம-பீம-அர்ச்சுன-நகுல என்றே குறிப்பிட்டிருக் கின்றனர். இவர்களில் அர்ச்சுன சீடரின் உண்மைப் பெயரை மாத்திரம் அறிய முடியவில்லை. மற்ற சீடர்களின் பெயர்களை சில பெரியவர்கள் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. அவர்கள் விவரம் :

தர்மசீடர்—சிவனாண்டி கேளயபுரம் (நான்குநேரி)

வீமசீடர்—பண்டாரம் கைலாசபுரம் (பாஞ்சாலங் குறிச்சி)

அர்ச்சுனன்—பிள்ளையா குடியிருப்பு (இயற் பெயர் தெரியவில்லை)

நகுலன்—சுப்பையா குளச்சல்

சகாதேவன் — அரிகோபாலன் தென்தாமரை

(இவர்களோடு அய்யாவின் வாழ்க்கையில் நெருங்கிய உறவு கொண்டவர்களாகவும் அய்யாவை தூக்கி வளர்த்தவர்களாகவும் கலைமுனி ஞானமுனி என்ற இருவர் இருந்ததாகவும் சென்னை அ. கிருஷ்ணிகா குறிப்பிடுகிறார்.)

மற்ற வைதீக இந்துக்கள் புரோகிதரை வைத்துத் திருமணம் செய்வார்கள். ஆனால் சுவாமி வைகுண்டரோ, தம் மக்களுக்காக புதிய திருமண முறையில் எந்தவித பழைய சாஸ்திரங்களையும் சம்பந்தப்படுத்தாமல் இறை வழிபாடும், வாழ்த்தும் மட்டுமே உள்ளடக்கியதாக அமைத்திருந்தார். பகவான் மீது பக்தி கொண்டவர்கள் அந்த முறைப் படியே திங்கள் திருமண விழாக்களை நடத்தினர். அவற்றை நடத்தி வைக்க இந்த சீசர்களையே அனுப்பி வைப்பார்.

அய்யாவின் பஞ்ச பாண்டவ சீசர்களில் முதல் நான்கு சீடர்களும், மற்ற ஆத்மார்த்தப் பணி களைச் செய்வார்களாம். ஐந்தாவது சீடரான 'சகாதேவன்' என்ற ஹரிகோபாலன் சீடர்தான், சுவாமியின் திருவுளப்படி, அவருடைய 'கருத்துக் களின் தொகுப்பாக அகிலத் திரட்டு' என்ற அம் மானை நூலை ஏட்டில் எழுதியவராம். (இதைப் பற்றி தெளிவான குறிப்பு அகிலத்திரட்டு நூலி லேயே இடம் பெற்றிருக்கிறது என்பதை புலவர் பச்சைமால் சுட்டிக் காட்டுகிறார்.)

பகவான் வைகுண்ட திருமாலின் அவதாரமாக வழிபட்டதற்கிணங்க இந்த சீடர்களும் பஞ்சபாண்டவர்கள்' என்று ஓர் உறவுக் காரணப் பெயர் அமைந்ததாகத் தெரிகிறது.

இந்த சீடர்களின் வாய் வழியில் வந்தவர்களும் சந்ததியினரும் கூட சுவாமியின் பணியில் ஈடுபட்டு பெருமை பெற்றிருக்கிறார்கள்..

இந்தச் செய்திகள் புலவர் பச்சைமால் மூலம் நமக்குக் கிடைத்த தகவல்கள்.

இந்தத் தகவல்களின் குறை நிறைகளைப் பற்றி இன்னும் ஆழமாக ஆய்வு செய்ய முன்வரக் கூடும். அப்போது இன்னும் மற்ற சீடர்களைப் பற்றிய தெளிவான தகவல் கிடைக்கலாம்.

சீடர்ாள் பற்றிய சொந்த வாழ்க்கை விவரங்கள் அருள் நூலிலும், அகிலத்திரட்டிலும் போதிய அளவு இல்லாத போதிலும், அய்யா நாராயணர் தம் சீசர்கள் மூலம் உலக மக்களுக்குப் பிறப்பித்த நெறிகளும், தீர்க்க தரிசனங்களும் கல்லில் செதுக்கிய ஓவியங்களாகக் காணக் கிடக்கின்றன.

13. 106 ஆண்டுகளுக்கு முன்பே சுதந்திரத்திற்கு தேதி குறித்தவர்!

முடுக்கன் தலையறுத்து மேகவர்ணப் பட்டும்சூடி
வைகுண்டப் பதிதனிலே வைகுண்டராசராக
அரசாள்வது எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா

(அருள் நூல்-உகப்படிப்பு-பக்கம்-5)

மனிதனுக்குப் பலம் அவனுடைய உள்ளம் தான்.

அந்த உள்ளத்தைச் சீரான வலுவோடும் வைத்து இருப்பதற்கு உரிதான ஒரு சக்திமிக்க அமைப்புத்தான் மதம்.

ஆம், உலகமெங்கும் உள்ள மக்கள் பேரில் மகத்தான ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருப்பது, மதம்தான்.

'மனிதன் மதத்தைப் படைத்தானா?' அல்லது 'மதம் இயல்பாகவே மனிதனைக் கவனித்துக் கொண்டதா?'

இது காலம் காலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் ஒரு புதிர்.

இந்தியாவிலேயேயே எண்ணற்ற மதங்கள்! உலக அளவில் அதன் எண்ணிக்கையோ பல மடங்கு அதிகம்! ஒவ்வொரு மதத்திற்கும் மத இயக்கத்திற்கும் வழிபடு தெய்வம் வெவ்வேறு பெயர்களில் கூறப்படுகின்றார்கள். வழிபாடு முறைகளும் மதத்துக்கு மதம், இனத்துக்கு இனம் வேறுபடுகிறது. இந்த வேறுபாடுகளுக்கு மத்தியில் உண்மையைத் தேடுவதுதான் ஆன்மீக சமரசம்.

இதைத்தான், ஒரு மகான் இரண்டே வரிகளில் விளக்குகிறார்.

'கடவுள் எங்கே?' ஒருவன் கேட்டான். 'நம்பிக்கையில்தான் கடவுள் இருக்கிறார்' என்று பதிலளித்தார் அந்த மகான்.

ஆம்; ஒரு தெய்வத்தையோ, மத இயக்கத்தையோ நாம் நம்பி ஏற்றுக்கொண்டால்தான் அது நமக்கு தெய்வமாகிறது.

'சிவனை தெய்வம்' என்று ஏற்றுகொண்டால் அவர்கள் சைவர்கள்.

'விஷ்ணுதான் தெய்வம்' என்று ஏற்றுக் கொண்டால், அவர்கள் வைணவர்கள்.

'முருகரே முழுமுதல் கடவுள்' என்று நம்பி ஏற்றுக்கொண்டால், அவர்கள் முருக பக்தர்கள்.

ஆதிபராசக்திதான் அனைத்தையும் படைத்தவள் என்று நம்பினால், அவர்கள் சக்திதாசர்கள்.

ஏசுபிரானையும், பிதாவையும் தெய்வம் என்று நம்பி ஏற்றுக்கொண்டவர்கள் கிறிஸ்தவர்கள்.

அல்லாவை நம்பி ஏற்பவர்கள் இஸ்லாமியர்கள் இப்படி..... இப்படி...

இந்தத் தெய்வங்கள் எல்லாவற்றையுமே நம்பி ஏற்பவர்கள் சமரசவாதிகள். இதில் எதையுமே நம்பாதவர்கள் நாத்திகர்கள். ஆக, தெய்வ பக்திக்கும் நாத்திகத்துக்கும் நடுவில் பொதுவாக இருப்பது நம்பிக்கை ஒன்றுதான். நம்பினால் கடவுள். நம்பாவிட்டால் கடவுள் இல்லை.

இப்படி மக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் உருவாகி எழுந்து நிற்கும் மதங்களுக்கு அவை வலிமையாகத் திகழ இரண்டு பலங்கள் உண்டு.

அவை, பக்தி பலம், ஆன்மீக பலம்.

பக்தியை மக்கள் மத்தியில் பரப்பாவிட்டால் அந்த மதமோ, அந்த மத இனமோ பரவலாக அறியப்படாமல் போய்விடும்.

அதே சமயம் அந்த பக்திக்கு, அடிப்படை சக்தியாக ஆன்மீக சிந்தனைகளும் அருள் கருத்துகளும் அமையாவிட்டால் அந்த மதத்திற்கு மேன்மையான நீடித்த அங்கீகாரம் கிடைக்காமல் போய்விடும்.

அதற்கு நம் இந்து மதமே ஒரு உதாரணம்.

ஆதியில் வேதரூபமாக, ரிஷிகளால் பரப்பப்பட்டு மக்கள் மத்தியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்து மதம் சில வர்ணாசிரமக் கோட்பாடுகளால் மக்களை ஜாதி ஜாதியாகப் பிரித்ததால் அந்த மதம் சிதைவை சந்தித்தது. அந்த மதத்தினால் பலன் அடைபவர்கள் மேல்தட்டு வர்க்கமாகவும், அந்த மதத்துக்குப் பயன்படுபவர்கள் கீழ்த்தட்டு மக்களாகவும் மாறும் நிலை ஏற்பட்டபோது ஒதுக்கப்பட்டவர்கள் இந்து மதத்தைப் புறக்கணிக்க ஆரம்பித்தார்கள். சிவனையும், விஷ்ணுவையும் நெருங்க முடியாதவர்கள் சிறு சிறு கிராம தேவதைகளிடம் சரண் அடைந்தார்கள்.

அதே சமயத்தில் புத்தர், மகாவீரர் போன்றவர்கள் ஒதுக்கப்பட்ட மக்களுக்கு லட்சிய தீபங்களாக சமரச ஆன்மீக கருத்துக்களை பரப்பினர். அதனால் மக்கள், இந்து மதத்தைப் புறக்கணித்துவிட்டு இந்த புதிய மத இயக்கங்களைத் தேடி ஓடினார்கள்.

இந்த நேரத்தில் மக்களின் பக்தி நெறியை ஒரு கட்டுக்குள் அமைப்பதற்காகவும், மக்களுக்கு புதிய வழிபாட்டுத் தெளிவு ஏற்படுத்துவதற்காகவும் ஆதி சங்கரர் இந்து மதத்தை ஆறு பிரிவாக பிரித்தார். அவை, காணா பத்யம் (பிள்ளையார் வழிபாடு) சைவம் (சிவ வழிபாடு), வைணவம் (விஷ்ணு வழிபாடு,) சௌரம் (சூரிய வழிபாடு), கௌமாரம் (முருக வழிபாடு) சாக்தம் (அம்பாள் வழிபாடு).

இந்த ஒழுங்குபடுத்தப்பட்ட ஆறு வழிபாட்டு முறைகளால் ஒரு கட்டுத் திட்டத்தோடு வாழ முடியும் என்ற நம்பிக்கை, ஆதிசங்கரரைத் தொடர்ந்து பல மகான்களுக்கும் ஆரம்பத்தில் இருந்தது.

ஆனால் காலப்போக்கில் அது பொய்த்து விட்டது.

பிரிக்கப்பட்ட இந்த வழிபாட்டு முறைகளைச் சார்ந்தவர்களுக்குள் இந்தத் தெய்வங்களின் பெயராலேயே சண்டை ஏற்பட்டது.

சிவன் தான் பெரியவர் 'விஷ்ணுதான் பெரியவர்' 'சக்திதான் பெரியவர்' என்று ஆளாளுக்குசண்டை போட்டதன் பலனாக இந்த மதங்களுககு ஒரு தார் மீக அங்கீகாரம் இல்லாமல் போயிற்று. மக்களுக்கே தங்கள் மதங்கள் மீது இளக்காரம் ஏற்பட்டது.

அதனால்தான், வெளி நாடுகளிலிருந்து வந்த மதங்களை பெருமையோடு போற்றி அவற்றைத் தழுவினர்.

இந்தக் காலகட்டத்தில் உலக அரங்கில் இந்து மதத்திற்கு ஒரு கௌரமான அங்கீகாரம் தேவைப் பட்டது. அந்த அங்கீகாரத்தை இந்து மதத்திற்கு தேடித் தருவதற்காக ஒரு மாபெரும் ஆன்மீக வீரர் இந்தியாவில் எழுந்தார். அவர்தான் 'சுவாமி விவேகானந்தர்.'

'இந்து மதம்' என்றாலே 'நான்கு சாதிகள்,' 'எண்ணற்ற தெய்வங்கள்' 'மூட நம்பிக்கைகள்' என்றெல்லாம் பேசப்பட்ட காலத்தில்' 'தெய் வத்தின் பூரணத்துவம் என்ன?' என்று விளக்கிய தோடு சாதீயப் பிணிகளையும் ஒதுக்கித் தள்ளும் வேகத்தை இந்து மதத்திற்கு ஊட்டினார், விவே கானந்தர்.

இவர், உலக அரங்கில் இந்துமதத்திற்கு தேடித் தந்த கௌரவத்தால் அதன் பெருமையை உலகமே ஏற்று மகிழ்ந்தது. அதன் 'உண்மை'யைத் தேடி பலர் இந்தியாவுக்கு வந்தனர். அதோடு கடந்த நூறு ஆண்டுகளுக்கு பல ஆன்மீக சிந்தனையாளர் களும், ஞானிகளும் இந்தியாவிலிருந்து சென்று, அமெரிக்கா போன்ற உலக நாடுகளின் மத்தியில் இந்து மதத்தின் பெருமையை நிலைநாட்டவும் விவேகானந்தர் அமைத்த பாதை உதவியது.

சுவாமி பக்தி வேதாந்த பிரபுபாதா, சுவாமி சிவானந்தா, பகவான் ரஜனீஷ், சின்மயானந்தா போன்ற பலரும் இந்து மதத்தை ஒட்டி உலகளாவிய சிந்தனையை ஏற்படுத்தியதற்கு விவேகானந்தர் தான் காரணமாக இருந்தார்.

ஆனால், இப்படிச் சாதனை புரிந்த விவேகானந்தர் காலம் என்னதெரியுமா? பத்தொன் பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி. அவர் முதன் முதலாக சிக்காக்கோவில் உரையாற்றிய நாள் 11-9-1893.

இவருக்கு குருவாக இருந்து ஆன்மீக வழி காட்டிய பகவான் இராமகிருஷ்ண பரஹம்சரின் பிறந்த தேதியே கி. பி. 1836 பிப்ரவரி 18ம் தேதி தான் பரஹம்சர், விவேகானந்தருக்கு ஞானத்தை ஊட்டியது கிட்டத்தட்ட அதிலிருந்து இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர்தான்.

ஆக, ஒரு ஞான எழுச்சி இந்தியாவில் அங்கீ காரமாக வெளிப்பட்டதே பத்தொன்பதாம் நூற் றாண்டின் பிற்பகுதியில்தான்.

இன்னொரு சுவையான அம்சம். சுவாமி விவேகானந்தர் அமெரிக்கா சென்று பிரசங்கம் நிகழ்த்தியதற்கு மூலக்கருபீடமாக இருந்தது கன்யா குமரி பகுதிதான். அங்குள்ள பாறை ஒன்றில் அமர்ந்து தியானம் செய்தபோதுதான்

விவேகானந்தர் ஞானம் பெற்றதாகக் கூறப் படுகிறது.

இப்படி பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் அற்புதங்கள் நிகழ்வதற்கு சுமார் பத்து இருபது ஆண்டுகளுக்கு முன்பே ஞான வேள்விளை அந்தப் பகுதியில் உருவாக்கி, பிரகாசிக்கச் செய் திருக்கிறார். அய்யா வைகுண்டர்.

ஆம்; அவருடைய காலம் கி. பி. 1809 முதல் 1851 வரை.

அவருடைய தீர்க்கதரிசனங்களும், ஞான அறவுரைகளும் ஏடு வடிவம் பெற்றது 1841.

இதிலிருந்து ஓர் உண்மை தெளிவாகப் புரி கிறது. இந்து மதத்தின் புதிய ஞான எழுச்சிக்கு, களத்தைப் பக்குவப் படுத்திக் கொடுத்ததோடு, உரமான சிந்தனைகளையும் அளித்தவர் அய்யா நாராயணர்தான்.

அய்யா வழி இயக்கத்தால் பரவியிருந்த சீர் திருத்தக் கருத்துக்களும், ஆன்மீகச் சிந்தனைகளும் தான் விவேகானந்தருக்கு 'ஞானக்கதிரை ஊட்டி யிருக்கக் கூடும்' என்று ஊகிக்க முடிகிறது.

'இது மிகையான கூற்றோ? என்று யாருக் காவது சந்தேகம் எழக் கூடும். ஆனால், சுவாமி விவேகானந்தரோ ,சுவாமி ராமகிருஷ்ண பரமஹம்

சரோ தெரிவித்த சிந்தனைகளுக்கு ஒத்த கருத்துக் களை, அவர்களுடைய காலத்துக்கு முன்னதாகவே தெரிவிக்கிறார். வைகுண்டசாமிகள்.

அகிலத் திரட்டிலும், அருள் நூலிலும் அத்த கைய ஆன்மீகக் கருத்துக்கள் வெளிப்பட்டிருக் கின்றன. இந்து மதத்திற்கே, ஒரு புதிய சமரச சிந்தனையை ஊட்டும் 'எழுச்சிக் குரல்' அய்யா வைகுண்டரிடமிருந்துதான் முதன் முதலாக ஏற்பட் டிருக்கிறது.

அது மட்டுமல்ல, சில தெளிவான தீர்க்க தரிசனங்களையும், சுவாமி தன் உரைகளில் தெரிவித்திருக்கிறார்.

தெய்வங்களுக்குள் சமரசநிலை — சாதி பேதங் களை உடைத்தெறியும் சமூக எழுச்சி, குடும்பத்தில் இல்லற வாழ்வை எப்படி தர்ம உணர்வோடு, நடத்த வேண்டும் என்ற போதனை, சக மனிதர் களிடம் கருணையோடு காட்ட வேண்டிய நெறி கள், போன்ற வாழ்வியல் ஆன்மீக தத்துவங் களோடு—

நாட்டின் அதிகார ஆட்சியில் கவிழும் காலத் தைப் பற்றிய தீர்க்க தரிசனங்களும், புதிய புதிய ஆட்சிகள் தோன்றக்கூடிய விசித்திர நிலைகளை யும் அய்யா வைகுண்டர் தன்னுடைய ஏட்டு உரை களில் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

அந்த நாட்டு அரசியல் மாற்றத்தைப் பற்றி அவர் கூறிய ஒரு செய்தி உதாரணத்திற்கு.

> ''முடுக்கன் தலையறுத்து மேகவர்ணப் பட்டும்சூடி
> வைகுண்டப் பதிதனிலே வைகுண்ட ராசராக
> அரசாள்வதும் எங்கள் அய்யா''

என்று, அவர் கூறியது திருவிதாங்கூர் மன்னர் ஆட்சியைப் பற்றிதான். முடுக்கன் என்றால் கொடுமை செய்யும் அரசன். அப்போது தாழ்த்தப் பட்ட சான்றோர் மக்களுக்குக் கொடுமை செய்து கொண்டிருந்தவர் திருவிதாங்கூர் மன்னர்தான். 'அந்த முடுக்கன் தலையை அறுப்பேன்' என்று அய்யா நாராயணர் கூறிய அந்தக் காலக்கட்டத்தில் 'திருவி தாங்கூர் ஆட்சிக்கு பங்கம் வரும்' என்று அந்த மக்கள் நம்பியிருக்கவில்லை. அப்படிப்பட்ட நேரத்தில் 'நடக்க முடியாத ஒரு காரியத்தை' அய்யா நாராயணர் சொன்னார். அதன்படியே வெகு குறுகிய காலத்தில் அந்த மன்னனின் ஆட்சி மாறியது. காலப்போக்கில் திருவிதாங்கூர் அரச பரம்பரையே ஆட்சியில் இல்லாமல் அகன்றது.

அதே போல், அப்போது அடிமைப்பட்டிருந்த இந்தியாவுக்கு 'சுதந்திரம்' வரும் என்று யாருமே எதிர்பார்த்ததில்லை. 'வெள்ளைக்காரர்கள் தான் என்றென்றும் ஆள்வார்கள்' என்று மக்கள் நினைத் திருந்தனர். அதுமட்டுமல்ல இந்தியா விடுதலை பெற வேண்டுமென்ற ஆர்வம் அப்போது இந்து

மக்களிடையே கிடையாது. அப்படிப்பட்ட நேரத்தில் சரியாக 'கி. பி. 1947ம் ஆண்டுதான் சுதந்திரம் இந்தியாவுக்குக் கிடைக்கும்' என்று 1841லேயே தெளிவாக தீர்க்க தரிசனம் சொன்னவர் அய்யா நாராயணர்.

அவர் வாக்கு இது.

'நூற்றுப் பன்னிரண்டில் நொடிப்பேன் ஓர் ஆண்டதிலே
தோற்றுவிப்பேன் யார்க்கும் தூது மிக நடந்து
பத்தாண்டுக்குள்ளே பலசோதனை பார்த்து
வித்தாரம் மேலே விசாரிப்பேன்.''

—அகிலத்திரட்டு பக்-202.

இப்பாடலில் வருகின்ற 112 என்பது கொல்லம் 1112 ஆகும். அதாவது கி. பி. 1937 மேல் பத்து ஆண்டு என்பது 1937+10=1947. அதாவது பாரத நாட்டின் சுதந்திர ஆண்டு.

இது மட்டுமல்ல பாட்டில் 'பெண்கள் ஆட்சிக்கு வருவது' பற்றியும், எல்லாவற்றுக்கும் மேலாக அரசாங்கங்களில் ஊழல் நடக்கும் என்றும், அய்யா நாராயணர் கூறியிருக்கிறார்.

ஆட்சி செய்பவனே லஞ்சம் வாங்குவான் என்று நூற்றி ஐம்பது வருடங்களுக்கு முன்பாகவே கூறியிருக்கிறார் பகவான் வைகுண்டர்.

14. ஆன்மீகம் அரசியலுக்குப் போகலாமா?

கல்லைப் பிளந்த கணபதி நாராயணம்
செப்பைத்திறந்து திருமுடிசூடி வருகிறார் எங்கள்
அய்யாசிவ சிவ சிவ அரகர அரகரா

-அருள்நூல் உகப்படிப்பு பக்-7)

அன்றிலிருந்து இன்றுவரை மிகவும் பரபரப்பாக விவாதிக்கப்படுகிற ஒரு விஷயம் உண்டென்றால், அது இந்தக் கேள்விதான்.

'ஆன்மீகம் அரசியலுக்குப் போகலாமா?'

இதை ஆதரிப்பவர்களும் உண்டு. எதிர்ப்பவர்களும் உண்டு. ஆனால், உண்மையோ இந்த இரண்டுக்கும் பொதுவாக, ஒரு தனித்தன்மையுடன் திகழ்கிறது.

ஆன்மீகம் அரசியலில் கலந்துவிடக்கூடாது என்ற கருத்தைச் சொல்பவர்கள் முக்கியமாகக் குறிப்பிடுகிற ஒரு அம்சம். அது பவித்திரமானது. மக்

களை இறைவன் பாதத்தில் சேர்க்க கை கொடுக்கக் கூடியது! அவை அன்றாட அரசியலில் கலந்துவிடச் செய்தால் அதன் புனிதமும், பவித்திரமும் கெட்டுப் போகும் என்பதே.

ஒரு கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, இந்த வாதம் மிகவும் நியாயமானதாகவே தோன்றுகிறது.

ஆனால், இது முழுக்க ஏற்றுக் கொள்ளக் கூடியதா?

கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால் வித்தியாசமாக விடை கிடைக்கிறது.

அரசியல் என்பது, மக்களோடு சம்பந்தப் பட்டது. மக்களின் அன்றாட பிரச்சினைகளோடு ஊடாட்டம் கொண்டது.

மக்களின் இந்தப் பொருளாதாரப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட அரசியலில் நியாய தர்மங்களே சம்பந்தப்படாமலிருப்பதனால் அது எப்படி ஒழுங்காக இயங்கும்? அந்த அரசியலில் ஆன்மீகம் சம்பந்தமே படாமல் போனால், அங்கே தர்மம் இருக்காது, நியாயம் இருக்காது, நேர்மை உணர்வுகள் இருக்காது.

ஆன்மீகம் என்பது காட்டில் வாழும் ரிஷிகளுக்கு மட்டும் தான் தேவை என்றால், அதனால் [illegible] என்ன பயன்?

இறந்து போனதற்குப் பின் சந்திக்கப் போகும் மோட்சத்தையோ, நரகத்தையோ பற்றி மட்டும் கவலைப் படுவதற்கு ஆன்மீகம் தேவையென்றால், அந்த ஆன்மீகத்துக்கு, மக்களிடையே முக்கியத் துவம் தேவையில்லை.

ஆன்மீகம் என்பது தர்ம நெறிகளுக்கு வழி காட்டுவது. அந்த வழிகாட்டல், அன்றாட மக்க ளுக்கும் அவர்களை ஆட்சி செய்யும் அரசுகளுக்கும் தான் அதிகம் தேவை.

இதை உணர்த்துவதாகத்தான், நமது புராணக் கதைகள் அமைந்திருக்கின்றன.

ஆட்சியிலுள்ளவர்களுக்கு, ஆன்மீகத்தை உணர்த்துவதற்காக, அவர்கள் அருகே அணுக்க, ஆலோசகர்களாக, இருந்து வந்தவர்கள்தான் ராஜ குருக்கள்.

அயோத்தியில் தசரதன் சபையில் இருந்து அரசரை நெறியான பாதையில் நடக்க செய்தவர் வசிஷ்டர்.

விசுவாமித்திரர் காட்டில் இருந்தாலும், மக்கள் நலனுக்காக யாகம் செய்தார். அந்த யாகத்திற்கு துணை நிற்க அரச குமாரர்களாகிய ராமரையும், இலக்குவனையும் வரவழைத்தார்.

அரசும், ஆன்மீகமும் இணைந்திராவிட்டால் இந்த பரஸ்பர செயல்கள் நடைபெறுமா? அதே

போல், மகாபாரதத்தில், மன்னான துரியோதனன் பக்கத்தில்தான் துரோணாச்சாரியும், கிருபாச்சாரியும் இருந்தார்கள். இத்தனைக்கும் துரியோதனனின் மீது விரோதம் கொண்ட பஞ்சபாண்டவர்கள் மீது அதிக பாசம் உள்ளவர்கள் அவர்கள். அப்படியிருந்தும், பஞ்சபாண்டவர்கள் துறவு வாழ்க்கையை மேற்கொண்டு காட்டில் இருந்தபோது, இந்த ராஜ ரிஷிகள் அங்கே போகவில்லை. காட்டிலுள்ள ரிஷிகள்தான் பஞ்சபாண்டவர்களுக்கு நண்பர்களாக இருந்தார்கள்.

இப்படியே எல்லா புராணக் கதைகளிலும், வரலாற்றுச் செய்திகளிலும் அரசன் அருகே ஆன்மீகத்தைப் போதிக்கும் குரு மகான்களும், ரிஷிகளும் இருந்து வந்திருப்பதாகவே அறிகிறோம்.

போர்த்தளபதியைவிட, அமைச்சர்களைவிட இந்த ராஜகுருக்கள் அதிக சக்தி வாய்ந்தவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள்.

அப்படியிருந்தும் ஏன் ‘அரசியலில் ஆன்மீகம் ஊடாடலாமா’ என்ற கேள்வி பிறந்திருக்கிறது என்றால், சில ஆன்மீகவாதிகளின் நெறி பிறழ்ந்த ஆதிக்க உணர்வுகள்தான்.

வேதத்தையும், சனாதன சீலங்களையும் மட்டுமே மன்னருக்கும் மக்களுக்கும் உணர்த்தியவர்களாக ரிஷிகள் இருந்தபோது, அவர்களுடைய ஆன்மீகச் சேவை உன்னத நிலையிலிருந்தது.

நாலு வேதங்களைச் சொன்னவர்கள். நாலு ஜாதியைப் புகுத்தி மக்களிடையே பேதங்களை உண்டாக்கியபோது, அவர்கள் தங்கள் நியாய நெறிகளிலிருந்து விலகிப் போனவர்கள் ஆனார்கள்.

மன்னர்களுக்கு துர்போதனைகள் செய்வதும், தங்கள் சாதுரிய விளக்கங்களால் ஆட்சியின்மேல் மட்டங்களை ஆட்டிப்படைப்பதுவும் ஆகிய பகடைக்காய் விளையாட்டில் ஆன்மீகவாதிகள் ஈடுபட ஆரம்பித்ததால், ஆன்மீகவாதிகள், தங்களின் புனித அந்தஸ்தை இழந்தார்கள்.

மக்களைப் பற்றிக் கவலைப்படாமல் அரசர்களுக்கு விருப்பமான விஷயங்களை மட்டுமே சொல்வதும், அவர்களை போற்றி தங்கள் ஆதிக்கத்துக்குள் சிக்க வைத்துக் கொள்வதுமான விளையாட்டுக்களில் ராஜகுருக்கள் செயல்பட்டதில் அவர்களுக்கு நிறைய சொந்தலாபங்கள் இருந்தன. மன்னனுக்கு ஆலோசகர் என்ற ரீதியில் மன்னரைவிட அதிக ஆதிக்கம் செலுத்த முடிந்தது.

மன்னர்களைப் போல் போர் புரிந்து தம் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் இந்த ராஜரிஷிகளுக்கு இருந்ததில்லை. ஒரு மன்னன் போனால், இன்னொரு மன்னனுக்கு ராஜரிஷியாகிவிடுவார்கள். புது மன்னனைக் பாராட்டுவதும், அவர்களுக்கு இச்சகமான செய்திகளைச்

சொல்வதுமாக தங்கள் ஆதிக்கத்தைத் தொடரச் செய்துவிடுவார்கள் இந்த சுயநல சிந்தனைகளால் தான், ஆன்மீகம் அதற்குரிய அந்தஸ்தை மக்கள் மத்தியில் இழந்தது.

அதனால்தான் இவர்கள் அரசியலில் ஈடுபட தேவைதானா? என்ற கேள்விபிறந்தது. விழித்துக் கொண்ட மக்கள் இந்த சுயநல ஆன்மீகவாதிகளை அடையாளம் கண்டுகொண்டு ஒதுக்கத் தலைப் பட்டார்கள்.

இந்த விழிப்புணர்ச்சிக்கு வித்திட்டஞானிகளில் அய்யா வைகுண்டரும் ஒருவர்.

மன்னரைப் போற்றுவது ஒன்றே மரபாகக் கொண்ட ஆன்மீகவாதிகள் மத்தியில், மக்கள் பிரச்சினைகளில் தெய்வ அவதாரங்களுக்குப் பங்கு உண்டு என்று கூறுவதற்காக தன்னை வெளிப் படுத்திக்கொண்டவர் அய்யா நாராயணர். அதனால் தான் அவ்ரால் 'முடுக்கன் தலையறுப்பேன்' என்று அரசனுக்கெதிராக குரல் கொடுக்க முடிந்தது.

கூடவே மன்னன் செய்த அக்கிரமங்களுக்கு எதிராக, குரல் எழுப்பி நியாயம் சொல்லிப் போராடு வதையும் ஒரு ஆன்மீகக் கடமையாகவே கொண்டார்.

அய்யா விதித்த கணக்குப்படி மூன்று வேளை பூஜை செய்வதும், விரதம் மேற்கொள்வதும் மட்டும்

ஆன்மீகம் அல்ல. அவரே மிகத் தெளிவாக சொல்கிறார்:

தேவர்கள் எல்லோரும் கயிலாசத்திலிருந்த
தேர்கொண்டு அழைக்கிறாரே சிவனே அய்யா
இதெல்லாம் வேண்டாமென்று எந்தன் மக்களுக்காக
இருந்தேன் சிறையதிலே சிவனே அய்யா

(அருள் நூல்-சாட்டு நீட்டோலை-பக்கம்-17)

அதாவது, 'தேவலோகத்திலிருந்து அங்கு வருமாறு எனக்கு அழைப்பு வந்தும் எதுவும் வேண்டாம். என் மக்களுக்காக சிறையில் இருக்கிறேன் என்றார் அய்யா. இதுதான் அய்யா அய்யா வைகுண்டர் சூட்சுமமாக உணர்த்திய ஆன்மீக நெறி.

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண அன்றே கோடிட்டவர் அவர். அதனால்தான் ஆன்மீக நெறி மணக்கும் தன் அருள்நூலில் முக்கியமாக சான்றோர் குல மக்களுக்கு எதிராக நடந்த போராட்டங்களைக் குறிப்பிட்டு கூறுகிறார்.

பூமக்கள் நீதமுடன் போட்ட தோள்சிலை தன்னை
போடாதே என்றடித்தானே சிவனே அய்யா
என் மக்கள் சான்றோர்கள் இடுப்பிலெடுத்த குடம்
ஏண்டி இறக்கென்றானே சிவனே அய்யா
குலபாதகன் செய்த நியாயத்துக்கு கோபங்கள்
செய்ததுண்டோ சிவனே அய்யா

(அருள்நூல்-சாட்டு நீட்டோலை-பக்கம்-17)

அதாவது,

அன்று திருவிதாங்கூர் மன்னர் சான்றோர் பெண் மக்கள் தோளில் சீலை போட்டதற்கு எதிர்ப்பாக 'போடாதே' என்று அடித்து சித்திர வதை செய்ததையும் இடுப்பில் எடுத்த குடத்தை 'இறக்கு' என்று குலபாதகமாய் சித்திரவதை செய்ததையும் குறிப்பிட்டுக் குமுறுகிறார்.

இந்தக் குமுறல் ஒரு எல்லை வரைக்கும்தான்.

அதாவது, தான் சிறையில் இருந்தால்தான் மக்களுக்கு நிம்மதி கிடைக்கும் என்று மன்னனுக்கு ஒரு வாய்தா கொடுப்பது போல், கோபங்கள் செய்யாமல் இருக்கிறார்.

ஆனால், அவன் நியாயம் வழங்கத் தவறியதும், அந்த நியாயத்தைத் தன் கையில் எடுத்துக் கொள்கிறார் நாராயணர்.

அதனால்தான், அவர், கம்பீரமாக—

''நாட்டை நொடித்த கலிநீசன் முடியை
இறக்கி நாராயணர் பதியாள்வார்'' அருள் நூல் பக்:32

என்றும்;

ஆயிரத்து எட்டுக் கொடுமுடியையும் உடைத்துத்
துவாயம் பதிஉதித்து
அரசாள்வதும் எங்கள் அய்யா'' அருள் நூல் பக்:46

என்றும் பூகப்படிப்புப் பதிகத்திலும்

''நாட்டு முடியிறக்கி வைகுண்டராசர் ஆளவருகிறார்''

அருள் நூல் பக்-45

என்று 'சிவகாண்ட அதிகாரப் பத்திரம்' பாடலிலும் அய்யா தெளிவுபடுத்தியுள்ளார்,

ஆன்மீக வாதியாக தாம் தெய்வலோகத்தி லிருந்து வந்த வைகுண்டவாசனின் அவதாரம் என்று தன் அருள் மொழிகளில் கூறிய அய்யா நாராயணரோ மேற்கண்ட வாசகம் மூலம், தான் அருள்ராஜ்யம் நிறுவி ஆளப்போவதை சுட்டிக் காட்டுகிறார்.

ஆம்; ஆன்மீகம் அய்யா வழியிலே இங்கே அரசாள வருகிறது.

சமூக நீதியைக் கொண்டு வருவதற்காகவும், சாஸ்திர சம்பிரதாயங்களை விலக்குவதற்காகவும் சமூக மக்களிடம் ஒற்றுமை உணர்வை உண்டாக்கு வதற்காகவும் பின் தங்கியவர்களுக்கு தான் ஒரு முதுகெலும்பாகத் திகழ்வதற்காகவும் அய்யாவே, நான் அரசாள வருகிறேன்' என்கிறார்.

சந்தேகம் யாருக்கும் தோன்றக் கூடாது என்பதற்காகவே, அவர் அழுத்தம் திருத்தமாக,

''சிங்கமுகம் தெரிந்தெடுத்துச் சேர்த்துப்
படையறுக்க வருகிறார் எங்கள் அய்யா'

(அருள் நூல்-உகப்படி-பக்-6)

இப்படி நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பே தன் மக்களிடையே எழுச்சியை உண்டாக்கிய அய்யா நாராயணருக்கு, தம்மை பின் பற்றி செயல் படுபவர் மீது பூரண நம்பிக்கை இருந்ததா?-என்று தெரியவில்லை.

தம்முடைய அருள் ராஜ்யம் என்றென்றும் தொடரும், என்ற அழுத்தமான நம்பிக்கை அவருக்கு இருந்திருந்தால், பிற்காலத்தில் ஆட்சி யிலும், மக்களிடத்திலும் பல சீரழிவுகளும் சிதைவு களும் ஏற்படும் என்று, அவர் குறிப்பால் உணர்த்தி யிருக்கமாட்டார்.

அதனால்தான், பிற்காலத்தில் 'ஆட்சித் தலைமையில் இருப்பவர்களே லஞ்சம் வாங்கு வார்கள்'' என்று கூறியிருக்கிறார்.

'லஞ்சம்' என்பதற்கு 'கைக்கூலி' என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார் அய்யா.

'காணிக்கை வேண்டல் கைக்கூலிதான் மீறும்'

பக். 164 என்று அகிலத்திரட்டும்:

'வையகத்திலே ராஜனவன் கைக்கூலி
நடத்தியே வாங்கிடுவான்! பேசிடுவான்
ஞாயப்பிழையாக...'

— அருள் நூல் பக்.75

என்று 'நடுத்தீர்வை உலா' என்று அய்யா வழிப் பிரபந்தமும் சுட்டிக் காட்டுகின்றன.

பெண்கள் வீட்டை விட்டு வெளியேற முடியாத ஒரு காலத்தில் - அதுவும் ஆட்சியாளர்களின் கொடுமைகளால், ஈனத்தனமான அவமானங் களுக்கு உட்பட்டிருந்த நிலையில்-

பெண்களின் அரசாட்சி பற்றி, அய்யா தீர்க்க தரிசனம் கூறியிருக்கிறார்.

15. பெண்கள் ஆட்சிக்கு வந்தால்...

பார்த்துவிட்டேன் இரண்டு கண்ணுங்கொண்டு
நம்முடைய
பத்தினி மக்கள் நன்றாய் தழைத்துவாழ

(அருள் நூல்- வாழப்படிப்பு-பக்கம்-9)

இந்துமத வரலாற்றில் ஓர் இடைக்காலத்தில் அதாவது சில நூற்றாண்டுகளுக்கு முன் சில சமூக விரோதக் கண்ணோட்டங்கள், சில சுயநலமிகளால் ஊடுருவியிருந்ததுண்டு. மனிதர்களை நான்கு ஜாதிகளாகப் பிரித்து, சிலரைத் தாழ்ந்தவர்கள் என்றும், சிலரை மேலோர் என்றும் பாகுபடுத்தியதோடு, பெண்களுக்கு போதிய சமூக அங்கீகாரம் தந்திருக்கப்படவுமில்லை.

'இறைவனின் சரிபாதி பெண்தான்' என்று சொல்லப்பட்டாலும், நடைமுறையில் பெண்களுக்கு சமத்துவ அங்கீகாரத்தை சனாதனிகள் அனுமதிக்கவில்லை.

வேதத்தில் இருந்ததோ, இல்லையோ ஆனால் சில சனாதனிகள் 'பெண்கள் சாஸ்திர சம்பிரதாயப் படி பூஜை முறை செய்வதற்கு அனுமதிக்கப்படாத வர்கள்.'

பெண்கள் ஆணுக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டியவர்கள்' என்றெல்லாம் கூறப் பட்டன.

'ஆண் எவ்வளவு தவறு செய்தாலும், அங்கீ காரம் உண்டு. (சுவாமியே பதினோராயிரம் பெண் களுடன் உறவு கொண்டிருந்ததாக பாமர பெருமிதங் கலை ஊட்டியதும் உண்டு). ஆனால் பெண்கள் அறியாமல் தவறு செய்தாலும் அவர்கள் சமூக அவமதிப்புக்குரியவர்கள், (மன்னர் மகளான குந்தி தேவியே, தவறாகப் பிறந்த குழந்தையை ஆற்றில் போடும்படியாயிற்று)

இப்படி எண்ணற்ற பெண்மை விரோதப் போக்கு மக்கள் மனதில் தெய்வத்தின் பெயராலும் புராணங்கள் பெயராலும் பதித்துவிடச் செய்திருந் தனர். இந்தக் காலக்கட்டத்தில் பெண்மையின் எழுச்சிக்கு ஒரு சமூக அங்கீகாரம் தேவைப்பட்டது.

அவர்களுக்காக குரல் கொடுக்கவோ, அவர் களின் பிரச்சினைகளைப் பற்றி பேசுவதற்கோ எந்த ஆணும் முன்வரவில்லை. எந்தப் பெண்ணும் விழிப்புற்று புரட்சிக்கொடியை ஏந்தவில்லை.

இந்த நிலையில்தான் அய்யா நாராயணர் தன் அய்யா வழி இயக்கத்தில் பெண்மைக்கு பரிபூரண முக்கியத்துவம் தந்து குரல் கொடுக்கிறார்.

பெண்களின் கற்பைப்பற்றி ஒருபுறம் வலியுறுத்திக் கொண்டே கற்புள்ள மாதரை தெய்வங்களே கெடுத்ததாக புராணக்கதைகளையும் எழுதிவைத்து (துளசி கதையும் அதுதான்) ஒரு குழப்ப நிலையை மக்கள் மத்தியில் தோற்றுவித்தக் காலக்கட்டத்தில்-

அய்யா நாராயணர் பெண்மையின் தூய்மைக்குக் கம்பீரமாக உத்தரவாதும் தருகிறார்.

'கனிவான பெண்கள் கற்புநிலை மாறாமல் வாழ்ந்தனர்' என்கிறார்.

பெண்களுக்கு ஒரு அவமதிப்புப்போல், அவர்களை தோள்ச்சீலை போடவிடாமல் செய்த மன்னனை நோக்கி, 'நல்ல பெண்ணின் கற்பே உன் நாட்டை அழித்துவிடும் என்றார் சுவாமி.

இன்னொரு முக்கியமான சமூக குடும்பக்கடமையாக பெண்களுக்குக் காலகாலத்தில் திருமணம் செய்து வைத்துவிட வேண்டும்' என்ற நெறியை தன் ஆன்மீக இயக்கத்தின் ஓர் அம்சமாகவே வலியுறுத்தினார்.

அகிலத்திரட்டு அம்மானையில் மிகக் கடுமையாக அவர் இப்படி எச்சரிக்கிறார்.

வாழ மங்கையரை வைத்திருந்தால் ராச்சியத்தில்.

தலைகெடுங்காண்; சாத்திரத்துக் கேறாது.

வானம் வந்து சிக்கும்: மாரியது பெய்யாது
கோத்திரத்துக்கேறாது; குடும்பம் தழையாது
மானம் வரம்புகெட்டு மனுநீதி தானழிந்து
கோட்டை யழியும்; குளக்கரைகள் தானழிந்து
நாட்டை அழிக்குமடா நல்ல கன்னி காவல் வைத்தால்!
(அகிலத்திரட்டு)

இந்த வரிகளை வாசிக்கும்போது நெஞ்சம் சிலிர்க்கவில்லையா? பெண்ணடிமை பேணி, பெண்களை வெறும் போகப் பொருள்களாக மட்டுமே கருதி ஆணாதிக்கம் செய்து வந்த அந்த மிலேச்சத்தனமான காலக்கட்டத்தில் பெண்மைக்காக எத்துணை வீரியத்துடன் குரல் கொடுத்திருக்கிறார் அய்யா நாராயணர்!

ஒரு பெண்ணை உரிய பருவத்தில் திருமணம் செய்து கொடுக்காமல், சகோதரனோ, பெற்றவர்களோ வைத்திருந்தால், இன்னின்ன நடக்கும் என்று அவர் எச்சரிப்பதைப் பாருங்கள்.

அரசனின் தலைக்கே ஆபத்து; சாத்திர சம்பிரதாயங்களுக்கு சீரழிவு; வானம் பொய்த்து மழை பெய்யாது; கோத்திரம், குடும்பம் எல்லாம் அழிந்து போகும்; கோட்டை அழியும்; குளம்கரைகள் அழியும்....

ஒரு பெண்ணின் கண்ணீருக்குள்ள சக்தியை அவ்வளவு வலிமையாக சித்தரிக்கிறார்.

சாஸ்திர முறைப்படி செய்யும் பூஜைகளை பெண்கள் செய்யக் கூடாது என்றும் அவர்கள் பின்னணியிலிருந்து கையுதவிதான் செய்யவேண்டு மென்றும் சம்பிரதாயங்கள் நிலைபெற்றிருந்தக் காலக்கட்டத்தில்.

'ஆணும் பெண்ணுமாய்க்கூடி
ஆசாரம் செய்திடுங்கோ

(அருள் நூல்)

என்கிறார் அய்யர்.

ஆம், ஆணும், பெண்ணும் சமமாக இணைந்து பூஜை செய்யாவிட்டால் அதைத் தெய்வமே ஏற் காது என்று வலியுறுத்துகிறார் அவர். இப்படிக் சமூகத்திலும் குடும்பத்திலும் பெண்களின் நிலை மேம்பட வேண்டுமென்று நெறிப்படுத்திய அய்யா நாராயணர் மிக ஆபூர்வமாக பெண்கள் ஆட்சி யையே கைப்பற்றுவதைப்பற்றி தீர்க்க தரிசனம் கூறுகிறார்.

பாரதிதாசன் 1950-ல் ஒரு கனவு கண்டார். அந்தக் கனவில்,

'மாதர் எல்லாம் அரசியலைக் கைப்பற்றி ஆண்டால்
மாநிலத்தில் போரில்லை; சாக்காடும் இல்லை'

என்று கூறுகிறார்.

நாம் சுதந்திரம் பெற்ற பின் பாடிய பாடலிலேயே 'பெண்கள் ஆட்சி செய்வது' ஒரு கனவாகவும், எதிர்பார்ப்பாகவுமே இருந்தது. அதனால்தான் சந்தேகத்தோடேயே 'மாதர் எல்லாம் அரசியலைக் கைப்பற்றி ஆண்டால்' என்று ஒரு கேள்விக் குறியோடு பாடுகிறார் பாரதிதாசன்.

ஆனால் நூற்றியம்பது வருடங்களுக்கு முன்னால், அய்யா நாராயணர் தன் அகிலத்திரட்டு ஏட்டில், அழுத்தம் திருத்தமாக பெண்களைப் பற்றி ஒரு தீர்க்க தரிசனம் கூறுகிறார். அதுதான்;

'நாரியர்கள் கூடி நாடெங்கும் வாசமிட்டு
ஒரு குடைக்கீழ் ஆள்வார்'

(அகிலத் திரட்டு)

ஆம்; பெண்கள் ஆட்சிக்கு வருவதைப் பற்றி 1950-ல் பாரதிதாசனுக்கு ஏற்பட்ட சந்தேகம் 1840-ல் அய்யா நாராயணருக்கு ஏற்படவில்லை. அவர் அன்றே தன் அருள்வாக்காக அழுத்தம் திருத்தமாக பெண்கள் ஆட்சிக்கு வருவார்கள்' என்றார்.

உலகளவில் தேசத் தலைவிகளாக தாட்சர், அகினோ, கலிதாஜியா, ஸ்ரீமாவோ பண்டார நாயகா, பெனசீர் பூட்டோ போன்றவர்களும், இந்திய அளவில் இந்திரா காந்தியும், தேசத்தின் அனைத்துப் பொறுப்புக்களையும் தன் கையில்

வைத்து ஆட்சி செலுத்திய—செலுத்தி வருகின்ற பெண் மலர்ச்சி காலத்தை அன்றே தன் அருள் நோக்கால் கண்டு உணர்த்தினார்.

மாநில அளவில் சுசேதா கிருபாளனி, நந்தினி சத்பதி, ஜானகி—எம். ஜி. ஆர்., ஜெயலலிதா போன்ற பெண்மணிகள் அரசுப் பொறுப்பை ஏற்றதையும் அய்யாவின் அருள்பார்வை அன்றே கணித்து உணர்த்தியது.

இந்த உதாரணங்கள் எல்லாம்கூட அய்யாவின் அருள்வாக்கின் முழுமையை இன்னும் எட்டிப் பிடிக்கவில்லை.

அய்யாவின் எதிர்பார்ப்போ, உலகமே பெண்களின் ஆட்சிக்குள் அடங்க வேண்டும் என்பது தான். அதனால்தான், 'நாரியர்கள் கூடி ஒரு குடைக்கீழ் ஆள்வார்' என்கிறார்.

ஒரு பெண்ணுக்கு மானத்தை மறைக்க தோள்ச் சீலைகூட போட அனுமதி இல்லாத ஒரு காலக் கட்டத்தில், 'அந்த' நலிந்த நிலையிலிருக்கும் பெண்ணே 'ஒரு குடைக்கீழ் உலகத்தையே கட்டி ஆள்வார்' என்று சொல்ல எந்த சாமானிய மனிதனாலும் முடியுமா? தெய்வ அவதாரம் ஒன்றுதான் அப்படி திருவாக்கு அளிக்க முடியும். அய்யா நாராயணர் அப்படி அருள்வாக்கு வழங்கினார்.

இன்னொரு ஆச்சரியமான தீர்க்க தரிசனத்தையும் அய்யா நாராயணர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

உலக வரலாற்றில் சர்வாதிகாரிகளும் மன்னர்களும் நமக்கென்று தனித்தனி சின்னங்களுடனும், கொடிகளுடனும் ஆட்சி செலுத்தி வந்தனர்.

அய்யா நாராயணருடைய அவதார காலத்திலும் அந்த நிலையே பரவியிருந்திருந்தது. அந்த சமயத்தில் இந்தியருக்கெல்லாம் பொதுவாக ஒரு சின்னத்தை முன்கூட்டியே கண்டுபிடித்து நிலை பெறச் செய்தவர் அய்யா நாராயணர். தமிழ்நாட்டில் சோழர், சேரர், பாண்டியர் மூவரும் தமது சின்னங்களாக புலி, வில், மீன் போன்றவற்றை தம் ஆட்சிச் சின்னங்களாகக் கொண்டிருந்தார்கள்.

புராணப்படி வடநாட்டு மன்னர்கள் பாம்பு, மாருதி போன்ற சின்னங்களைத்தான் கொண்டிருந்தார்கள்.

ஆனால் தமிழ்நாட்டில் அவதரித்த நாராயணர், நாம் சுதந்திரம் பெறுவதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னரே, பாரதநாட்டின் ஆட்சி சின்னம் எது என்பதை தன் தீர்க்க தரிசனத்தால் சுட்டிக்காட்டினார். அதையே சுதந்திரம் அடைந்த பாரத நாடு தெரிந்தோ தெரியாமலோ ஏற்றுக்கொண்டது. இன்றும் அந்த சின்னத்திற்குத்தான் தேசிய மரியாதை தந்து போற்றுகிறோம்.

அந்த சின்னம் எது தெரியுமா?

அய்யாவே பாடுகிறார்:

சிங்கமுகம் தெரிந்தெடுத்துச் சேர்த்துப்
படையறுக்க வருகிறார் எங்கள் அய்யா!'

(அருள் நூல். யுகப்படி)

அசோகரின் சின்னமான சிங்க முகத்தை நம் தேசிய முத்திரையில் நாம் ஏற்கனவே தேர்வு செய்து வைத்திருக்கிறார் அய்யா நாராயணர்.

ஆட்சி அரசியல் பற்றி இப்படி துல்லியமான தீர்க்க தரிசனங்களை தம் அருள்வாக்கில் வழங்கிய அய்யா நாராயணர் மதத்தில் சமூக வாழ்விலும் ஏற்படக்கூடிய - பிற்காலத்தில் உண்மையாகவே நிகழ்ந்துவிட்ட பல ஒழுக்க சிதைவுகளையும் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கிறார்.

சமீபத்தில்கூட அப்படி சில சம்பவங்கள் நடந்து மக்கள் மனதில் பசுமையாக இருக்கின்றன.

மண்ணாசையும், பொன்னாசையும், பெண் ணாசையும் துறந்தவர்களைத்தான் ரிஷிகள் என்றும், சாமியார்கள் என்றும் வேதங்களும், இந்து மதமும் ஏற்றுக் கொண்டன.

ஆனால் சாமியார்கள் என்ற பெயர். சமீபகால மாக பத்திரிகைகளில் இடம் பெறும்போது, அந்த

வார்த்தைக்குரிய கௌவரத்தை நாம் காண முடிய வில்லை.

ஒரு சாமியார் இரண்டு கோடி ரூபாயை சிலரிடம் கொடுத்து ஏமாந்திருக்கிறார். எதிரே இருப்பவன் நல்லவனா? கெட்டவனா என்றுகூட அறிய முடியாத இந்த சாமியார், எப்படி கண்ணுக்குத் தெரியாத மோட்சத்துக்கு வழி காட்டுவார் என்று புரியாமல் எப்படித்தான் பக்தர்கள் கோடி கோடியாக இவர்களிடம் கொடுத்தார்களோ!

இன்னொரு சாமியார், பல குடும்பப் பெண்களை நெறி தவற வைத்து, அவர்களுடைய பணங்களையெல்லாம் கைப்பற்றிவிட்டு, மயக்க மருந்து கொடுத்து கொலையே செய்திருக்கிறார்.

இப்படி பல சாமியார்கள் துறவி என்ற பெயரால் கொள்ளைக்காரர்களாகவும், பண மோசடிக்காரர்களாகவும் காமுகர்களாகவும் திரிகிற கோலத்தை இன்று கண்டு, ஆழ்ந்த மதப்பற்று உள்ளவர்கள் எல்லாம் உள்ளம் குமுறி வெந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்படி ஒரு சீரழிவு, துறவிகள் வாழ்வில் ஏற்படப் போவதையும், துறவிக் கோலத்தில் முறைகேடுகள் நடக்கப்போவதையும் மிகச் சரியாகவும், தெளிவாகவும் தன் அருள்வாக்கில் தெரிவித்திருக்கிறார் அய்யா நாராயணர்.

இதோ அந்த வரிகள்:

'சன்னாசி நிஷ்டை தவறி அலைவார்கள்
தானருட வேதம் தலையழிய விட்டிடுவார்'

—அகிலத்திரட்டு பக்.165

மதவாதிகள், பொதுவாக மதங்களில் நடக்கும் சீர்க்கேடுகளை வெளியே சொன்னால், மதத்தின் வளர்ச்சிக்கே பாதகம் ஏற்படக்கூடும் என்ற குறுகிய நோக்கத்துடன் தவறுகளை மூடி மறைப்பார்கள்.

ஆனால், அய்யா நாராயணரே தெய்வாம்ச நிலையிலிருந்து மதச் சீர்கேடுகளைச் சுட்டிக் காட்டுகிறார். ஆணித்தரமாகக் கண்டிருக்கிறார்.

சமூக வாழ்விலும் மதப்புரவலர்கள் என்று தம்மை சொல்லிக்கொள்வோரின் வாழ்க்கையிலும் உள்ள குண பேதங்களையும், சில எதிர்கால விளைவுகளையும் வியக்கும் வண்ணம் தெரிவித்திருக்கிறார் அய்யா வைகுண்டர்.

16. பிராமணர்கள் பற்றி நாராயணர் என்ன சொல்கிறார்?

சிவனும்நீ நாதனும்நீ திருமாலும்நீ மகனே
தவமும்நீ வேதனும்நீ சங்கமுதலெங்கும் நீயே

(அகிலத்திரட்டு-பக். 209)

அய்யா நாராயணர் பூமியில் அவதரித்து, வாழ்ந்த காலத்தில் நாட்டில் மன்னராட்சியும், மேலாதிக்கமாக வெள்ளைக்காரர்கள் துரைத்தனமும்தான் நடந்து கொண்டிருந்தன.

அப்போதைய சூழ்நிலையில், ஜனநாயகம் என்ற பேச்சுக்கே இடமில்லை. மக்கள் அரசுக்குப் போட்டியிடுவார்கள் என்று ஊகிக்கவும் சாத்தியமில்லாமல் இருந்தது.

அந்தக் காலகட்டத்தில், அய்யா நாராயணர் நாட்டில் மக்களாட்சியும், அதையொட்டி வன்முறைகளும் நடைபெறும் என்பதை ஊகித்து தீர்க்க தரிசனமாக தெளிவுரை கூறியிருக்கிறார்.

மன்னர்களோ, ஜமீன்தார்களோ, பாளையக் காரர்களோ அயல்நாட்டினரோ ஒரு நாட்டைப் பிடிப்பதற்கு சண்டையிடுவதை 'போர்' என்றும், 'யுத்தம்' என்றும் வர்ணிப்பார்கள்.

'ஒருவரையொருவர் அடித்துக்கொள்வார்கள்' என்று யாரும் சொல்வதில்லை.

'அடித்துக்கொண்டோ, வெட்டிக்கொண்டோ சாவதை' சாதாரண மக்கள் செய்யும் செயலாகவே யாரும் குறிப்பிடுவார்கள்.

அரசுக்காக மக்கள் அப்படி அடித்துக்கொண்டு சாவார்கள் என்பதை, ஜனநாயகம் அரும்பாத,— ஏன், ஓர் உணர்வாகக்கூட மக்கள் மத்தியில் பூக்காமல் இருந்த அந்த மன்னராட்சி காலத்தில் அறுதியிட்டுக்கூறுகிறார் அய்யா நாராயணர். அந்த வரிகள்:

> சிலபேர் அரசு உனக்குஎனக்கெனவே
> விதியையறியாமல் வெட்டிக்கொண்டே மாள்வார்
>
> —அகிலத்திரட்டு-பக். 213

அரசியலுக்காக கொலைகளும், வன்முறை களும் துவேஷத்துடனும், ஆட்சியைப் பிடிக்கும் ஆவலுடனும் நடைபெறுவதை மிகவேதனையோடு 'வெட்டிக்கொண்டு மாள்வார்' என்று அய்யா குறிப் பிடுகிறார். இன்னொரு அரசியல் தீர்க்கதரிசனம்.

சட்டமழியுஞ் சத்தியம் பலமிடியும்
கூட்டங் குலையுங் குடும்பப் பகையாகும்
நாட்டையரசாங்கம் நாலிரண்டு மூன்றாகும்
கோட்டை அழியுங் குச்சுக்கட்டை மதிலாம்

—அகிலத்திரட்டு-பக். 172

உண்மைக்கு சேதாரமாகவும், சட்டம் ஒழுங்குக்கு சீரழிவாகவும் நாடு பூராவும் இன்று அவலங்கள் நடைபெற்று வருவதை அய்யா அன்றே குறிப்பிட்டிருக்கிறார்.

அதேபோல், அரசியலில் ஒரே குடும்பத்தில் உள்ளவர்கள் மத்தியில் பகை ஏற்படுவதையும்கூட சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இன்னும் மன்னர்களின் கோட்டைகள் அழிந்து சாமான்யர்கள் உயர்ந்த பதவிகளை பெற்று அரசு பீடத்தில் அமர்வதையும் மேற்கண்ட நான்காவது வரி குறிப்பிடுகிறது.

மூன்றாவது வரியில்தான் ஒரு சூட்சுமம் புலப் படுகிறது. அதாவது: 'நாட்டையரசாங்கம் நாலி ரண்டு மூன்றாகும்' இதைப்பற்றி ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் மத்தியில் பல்வேறு கருத்துப் பரிமாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. புலவர் பச்சைமால், 'நாட்டையரசாங்கம் நாலி ரண்டு மூன்று ஆளும்' என்று எடுத்துக்கொண்டு அதற்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் சொல்கிறார்.

'பாரதம் இன்று இந்தியா, பாகிஸ்தான்,
பங்களாதேசம், பர்மா என்று நான்காகப்
பிரிந்து நான்கு
நான்கு அரசாங்கங்களால் ஆளப்படுகிறது.
இனி இது, 'மூன்று ஆகும்'

—என்கிறார் அய்யா எப்போது? எப்படி? என்பதைக் காலம்தான் விளக்க வேண்டும்.'

இன்னொரு அய்யா வழிப் பிரமுகர் (திரு. இ. அருணாசலம் பி. இ. டி.) இதே வரியை, 'நாட்டை அரசாங்கம் நாலிரண்டு மூன்றாக்கும்' என்று எடுத்துக்கொண்டு அதற்கு இன்னொரு சிந்தனையைத் தருகிறார்.

அதாவது: 4x2x3-24 என்று 24 என்ற எண்ணை குறிப்பிட்டு அய்யா ஏதோ சூட்சுமமாகச் சொல்லியிருப்பதாக உணர்த்துகிறார்.

இந்த எண் 24-க்கு, அய்யா சொன்ன தீர்க்க தரிசனம் என்ன என்பதை நம்மால் ஊகிக்க முடியவில்லை.

ஆனால், அதை அரசியல் தீர்க்கதரிசனம் என்று நாம் எடுத்துக்கொண்டால் பாரத நாட்டின் தனிச்சலுகை பெற்ற காஷ்மீர் தவிர மற்ற மாநிலங்கள் எண்ணிக்கை 24 ஆகும்.

வெள்ளைக்காரர்கள் ஏக இந்தியாவாக ஆண்ட பாரத நாடு இப்படி 24 மாநிலங்களாகப் பிரிக்கப் படும் என்பதை அவர் சூசகமாகச் சொன்னார் என்று கொள்ளலாமா?....ஆராய்ச்சியாளர் முடிவுக்கு வரட்டும்.

ஆனால், என்னைப் பொறுத்தவரை இன்னொரு கருத்தும் தோன்றுகிறது. அதாவது: 4, 2, 3 என்று அவர் குறிப்பிட்டிருப்பது, ஒற்றுமையாக இருந்த மக்களை அரசியல் பேரால் பல அணிகளாகப்பிரித்து தலைவர்களை மோத வைப்பதைத் தான் அப்படி குறிப்பிட்டிருக்கிறார் என்று தோன்றுகிறது.

சில மாநிலங்களில் நாலு அரசியல் கட்சி அணிகள் மோதுவதும்,

சில மாநிலங்களில் இரண்டு அணிகள் மோதுவதும் சில இடங்களில் மும்முனைப் போட்டியும் ஏற்பட்டு முன்பு ஒத்த உணர்வுடன் இருந்த நாட்டு மக்களை பல கட்சிகளாகவும் கூட்டணிகளாகவும் பிரிப்பதைத்தான் அய்யா நாராயணர் அப்படிக் குறிப்பிட்டாரோ?

அய்யா நாராயணருக்கு சாதிப் பிரச்சினை மிகவும் நெருடலாக இருந்த ஒரு விசயம்.

தாம் அவதரித்த 'சான்றோர்' குலத்தை மன்னனும், ஆட்சி ஆதிக்கம் புரிந்த மேல் ஜாதி

யினரும் ஏளனப் படுத்தியும், சிறுமைப் படுத்தியும், அவமதித்த போது அந்த இனத்தின் பெருமைகளை அருள் நூலிலும், அகிலத் திரட்டிலும் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிடுகிறார். இறைவனே, சான்றோர் குலத்தில் அவதரிப்பதை முன்கூட்டியே தெரிவிப்பதாகக் கூறுகிறார்.

> 'வல்லவனே உன்னாத விந்தில் வந்து தோன்றினதால்
> தோணாப் பொருளைத் துடர்ந்து கண்ட மன்னர்க்கு
> சாணாரென நாமஞ் சாற்றினார் ஈசுரரும்'
>
> —அகிலத்திரட்டு பக். 67.

என்கிறார். பின், அவரே தொடர்ந்து,

> 'நாடாள்வாரென்று நாமமிட்டார் பாலருக்கு'

என்றும் குறிப்பிடுகிறார்.

அதேபோல், தன் இனத்துப் பெண்களுக்குத் தீவினை நடப்பதையறிந்து அவர்களைத் துன்பப் படுத்தும் கொடியோருக்காக கீழ்க்கண்டவாறு சாபம் இடுகிறார்.

> 'கற்புள்ள சாணாத்தி கதறியுன்னைச் சாபமிட்டால்,
> அப்படியே முன்கோட்டை அழிந்து பொடியோடு மடா'

என்றும் எச்சரித்துக் கூறுகிறார்.

சான்றோர் குலப் பெண்களுக்குத் தோள்ச்சீலை போடும் உரிமையை மறுத்தும், இடுப்பில் குடம் வைத்து தண்ணீர் எடுக்கும் வாய்ப்பைத் தடுத்தும்

கொடிய அரசு, விதிகளை இயற்றியதால், இப்படிக் கோபித்து எச்சரிக்கிறார். ஆனால், உண்மையில் அவர் ஒரு குறிப்பிட்ட சாதிக்காக மட்டுமே போரடிய வரும் அல்ல. அதற்காக மட்டுமே தன் அய்யா வழி இயக்கத்தை உருவாக்கியவரும் அல்ல. சமூக சிந்தனை என்று வரும்போது, பிற்படுத்தப்பட்ட பதினெட்டு சாதிக்கும் அவர் பரிந்து பேசியிருக் கிறார்.

அதே சமயத்தில், அன்று ஆட்சியாளர் அருகே இருந்து ஆதிக்கம் செலுத்திய நம்பூதிரி போன்ற பிராமண இனத்தவர் மீது அவருக்கு இருந்த அணுகுமுறை என்னவென்று ஆய்ந்தால் ஒரு சுவையான உண்மைப் புலப்படுகிறது.

பிற்பட்ட சாதியினரை ஒடுக்கவும், கீழ்மைப் படுத்தவும், மன்னருக்கு அப்போது தூபமிட்டுக் கொண்டிருந்த அந்த பிராமண குலத்தவரைப் பற்றி இவர் தன் கருத்துக்களை மூன்று விதமாகத் தெரிவிக்கிறார்.

ஒன்று.

'வேதப் பிராமணரைப்
பயம்காட்ட நாம் வருவோம்' — அருள்நூல்.

இரண்டு.

'ஒண்ணாவது சாதி
உலைமெழுகது போல் அலைவார்கள்'

அகிலத்திரட்டு-பக். 165

மூன்றாவது.

'பிராமணர்கள் நன்றாகச்
சுகத்துடன் வாழ்வார்கள்!' —அகிலத்திரட்டு-பக். 180

இந்த மூன்று கருத்துக்களும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருப்பது போல் தோன்றுகிற தல்லவா?

ஒரு இடத்தில் 'பயங்காட்ட வருவோம்' என் கிறார்.

அடுத்ததில் தண்டிப்பதுபோல் 'உலையில் இட்ட மெழுகைப் போல் அலைவார்கள்' என்கிறார். இன்னொரு வரியிலோ 'பிராமணர்களோ சுகத் தோடு வாழ்வார்கள்' என்கிறார்.

இது எப்படி? முரண்பாடாக இல்லையா? இல்லை.

ஒவ்வொரு வரியிலேயும் தன் கருத்துக்கான விளக்கத்தையும், கூடவே குறிப்பிட்டு சுட்டிக் காட்டியிருக்கிறார் அய்யா.

அய்யா வாழ்ந்த கால கட்டத்தில் இருந்த பிரா மணர்கள் எல்லாருமே உண்மையாக பிராமணருக் கான தொழிலையோ, நடை முறைகளையோ பின் பற்றியவராக இருந்ததில்லை.

பிராமணர் என்றால், 'அந்தணர் என்பர் அற வோர்' என்ற கூற்றுக் கிணங்க அறநெறியில் திற்

பதுவும், இறைவனுக்கு உகந்த காரியங்களைச் செய்வதுவும், சீலமான ஒழுக்கத்தைப் பின்பற்றி மற்றவர்களுக்கு உதாரண புருஷராகத் திகழ்வதுவும் ஆகிய பெருமைக்குரிய பண்புகளைக் கொண்டவர் களாகத் திகழ வேண்டுமென்பதுதான் எதிர்பார்ப்பு. அப்படி, ஒரு சில பிராமணர்கள் வாழ்க்கை நெறியை அமைத்துக்கொண்டதும் உண்டு. பணம், பதவிக்கு பேராசைப் படாமல், ஒழுக்கமே உயர் வாகக் கருதி, 'சத்' விசயங்களை மக்களுக்குப் போதித்து வாழ்ந்த சீரிய பிராமணர்கள் அவர்கள்.

அப்படிப்பட்ட உன்னத நெறி காத்த பிராமணர் களைத் தான் 'சுகமுடன் வாழ்வார்கள்' என்று வாழ்த்து கூறினார் அய்யா.

அதே காலக் கட்டத்தில், பிராமண நெறிக்கு முரண்பாடாக வாழ்ந்தவர்களும் உண்டு. அவர்களில் ஒரு வகையினர் வேதத்தைக் காட்டி மக்களை மிரட்டும் சனாதனிகள் 'வேதங்களை, தங்களைத் தவிர வேறு யாரும் வாசிக்க அருகதை உள்ளவர்கள் அல்லர்' என்று கூறியவாறு மக்களையும் மன்னரை யும் மயக்க பிரமையில் ஆழ்த்தி அவர்களுடைய அஞ்ஞானத்தில் தங்கள் மெய்ஞ்ஞான உயர்வை நிலை நாட்டிக் கொண்டிருந்தார்கள்.

தாங்கள் கூறுவதுதான் சாஸ்திரம் என்றும், தாங்கள் மட்டுமே பாதுகாக்கப்பட்ட இனம் என்றும்,

வேதத்தையும் தர்மத்தையும் திரித்து, வாழ்ந்தவர்கள் அவர்கள்.

அப்படிப்பட்ட பொய்யான வேத பிராமணர்களைத்தான். 'பயம்காட்ட நாம் வருவோம்' என்று எச்சரித்தார்.

'பயங்காட்ட' என்று அவர் குறிப்பிட்டதில், ஒரு கருணை மிக்க அறிவுரை தொக்கி நிற்கிறது.

அதாவது, நீங்கள் சொல்லுகிற மாதிரி வேதத்தில் இல்லை. வேதத்தில் மனிதர்களை உயர்வு தாழ்வாகப் பிரிக்கவில்லை. 'வீணாக பொய் பேசும் உங்கள் முகத்திரையைக் கிழித்து அச்சமூட்ட நான் வருவேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார் அய்யா.

பிராமணர்களில் இன்னொரு வகையினர் அந்தக் காலத்தில் இருந்தார்கள். அவர்கள், தாங்கள் மட்டுமே முதல் ஜாதி என்றும், அரசனுக்கு அறிவுரை கூறும் தகுதியும், உயர்வு நிலையும் தமக்குத்தான் உண்டு என்றும், கூறி 'ராஜகுருக்கள்' என்ற போர்வையில் மன்னர்களிடையே உயர்ந்த ஆசனத்தைப் பெற்று, வாழ்ந்தவர்கள்,

அப்படி மற்றவர்களைத் தாழ்த்தி, தம்மை மட்டும் முதல்வர்களாக்கிக் கொண்டிருந்த சில பிராமணர்களைப் பார்த்துத்தான் எச்சரிக்கையாக, 'ஒண்ணாவது சாதி 1 'உலைமெழுகது போல் அலைவார்கள்' (நெருப்பு உலையில் போடப்பட்ட

மெழுகைப் போல் அலைவார்கள்) என்று உறுதியுடன் கண்டித்தார்.

ஆக, அய்யாவுக்கு, பிராமணர்கள் என்ற இனத்தவர்கள் மேல் ஒட்டு மொத்தமாகக் கோபம் இல்லை. அதில் தவறான கண்ணோட்டங்களையும், தவறான உயர்வு நிலைகளையும் கற்பித்த முறைகேடானவர்கள் பேரில்தான் கோபம்.

மற்றபடி, உண்மையில் அய்யாவோ, சாதிகளுக்கு அப்பாற் பட்டவர். அவர் மிகத் தெளிவாகவே.

'சாதியான கொடிப்பாம்பு
சதிசெய்யும் பாம்பு' —அருள்நூல் (பத்திரப் பதிகம்).

என்று கூறுகிறார்.

இந்த சாதி உணர்வோடு செயல்படுபவர்களையும், பாம்பு என்றே அவர் குறிப்பிடுகிறார். ஆனால் இந்த சாதி ஒரு காலத்தில் அழிந்து போகும் என்பது பற்றியும் அவர் மிகத் தெளிவாக தீர்க்கதரிசனமாகக் கூறியிருக்கிறார்.

ஜாதி வெறி மண்டிய அந்தக்காலத்தில், 'ஜாதி தன் நிலையை இழக்கும்' என்று கூறிய அய்யாவின் தீர்க்க தரிசனம் வித்தியாசமானது.

17. மண்டல் கமிஷன் பற்றி

பணிந்தவர் பணிந்திடுங்கோ
　　பாலன் பதியேறுமுன்னே
தூணை மலையென்று
　　நம்பினபேர்க்கு
தொட்டு நாம்சாற்றி வருகிறார்
　　எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா

(அருள் நூல்-உலகப்படிப்பு பக்-7)

எதிர்காலத்தைப்பற்றி மக்களுக்குச்சொல்லுவது மூன்று வகைப்படும்.

ஒன்று குறி சொல்வது. அடுத்தது அருள் வாக்கு, மூன்றாவது தீர்க்கதரிசனம்.

குறி சொல்வது என்பது பாமரத்தனமான மக்கள் உணர்வுகளுக்கு தற்காலிக தீனி போடுவதாகும். 'இத்தனை மாசத்தில் உன் கஷ்டம் நீங்கிவிடும்.' இவ்வளவு காலத்தில உனக்குப் பொருள் வரும். 'சாமிக்கு நீ இவ்வளவு காணிக்கை கட்டினால், உனக்கு நன்மை வரும்' என்று மக்களுக்கு

அவ்வப்போது நம்பிக்கை ஊட்டுவதற்கும், அப்படி நம்பிக்கை ஊட்டுவதன் மூலம் தங்களுக்கு ஒரு வருவாய் தேடிக் கொள்வதற்கும் மூலைக்கு மூலை தோன்றியிருக்கும் தொழில்தான் குறி சொல்வது. இதற்கும் தெய்வத்திற்கும் பெரிய தொடர்பு ஒன்றும் கிடையாது. தெய்வத்தின் பேரால் நடக்கும் ஒரு ஜனரஞ்சக வியாபாரம்.

அருள்வாக்கு இந்தக் குறி சொல்வதிலிருந்து சற்று வித்தியாசப் பட்டது. அருள்வாக்கு சொல்ப வர்களும் கிட்டத்தட்ட குறி சொல்வது போல, 'உனக்கு நல்லது நடக்கும்' 'இறைவன் அருளால் உன் கஷ்டம் போய்விடும்' என்றெல்லாம் கூறினா லும், அதில் குறி சொல்லும் வியாபாரம் இருப்ப தில்லை. இறைவனை வேண்டி உனக்கு நல்லது நடக்கட்டுமே என்று ஆசியோடு கூறப்படுபவை அவை. அதில் கெட்டதை சொல்லி பயமுறுத்து வதோ, பரிகாரம் என்ற பெயரில் பணவிவகாரங்கள் பேசுவதோ இருக்காது. அந்த வார்த்தைக்கே ஒரு விளக்கம் போல், அருள் நிறைந்த உள்ளத்துடன் வாழ்த்துத் தெரிவிப்பதாக அது அமையும்.

ஆனால், தீர்க்கதரிசனம் என்பது முதல் இரண்டையும், விட மாறுதலானது. பல நூற் றாண்டுகளுக்குப் பின்னால், தோன்றக் கூடிய பிரச்சினைகளைப் பற்றியுமே முன்னதாகச் சொல் லும், வித்தியாசமான சக்தி மிகுந்த அறிவிப்புகளாக அவை அமையும். அவற்றைத் தெரிவிக்க

சாமானிய மனிதர்களால் முடிவதில்லை. தீர்க்க மான பார்வையுடன் சிந்தனைக்கே அப்பாற்பட்ட விஷயங்களைக் கண்ணோட்டமிட்டு ஆணித்தர மாக அவை பற்றிய கருத்துக்களை வெளியிடுவது அது. அதன் உட்பொருள் சொல்லப்படும் காலங் களில் பலரால் நம்பப்படுவதில்லை; ஏன் சமயத்தில் புரிந்து கொள்ளக்கூட முடிவதில்லை. ஏனென் றால், தீர்க்கதரிசியின் பார்வையில் படும் பல விஷ யங்கள் அந்தக் காலகட்டத்தில் தென்படாத தாகவும், உணரப்படாததாகவும் இருக்கும். எப் போதோ வருகிற விசயங்களை இப்போது அவர்கள் மனக்கண்ணால் தரிசித்துச் சொல்வதைத்தான் தீர்க்க தரிசனங்களாக உலகம் ஏற்றுக்கொள்ளும். அப்படிச் சொல்லும் வல்லமையுள்ளவர்கள் மனிதர் களுக்கு அப்பாற்றபட்ட தெய்வீக சக்தியுள்ளவர் களாக இருப்பார்கள். அவர்கள் தெய்வங்களா, தெய்வ அவதாரங்களா, தெய்வீக அருள் பெற்ற ஞானிகளா என்பதை காலம்தான் தீர்மானிக்கும்.

காலத்தின் இந்த சோதனையைத் தாண்டி தனிப்பெரும் ஞான ஒளியாக இன்றைய தலை முறையில் வணக்கத்துக்குரிய தெய்வ அவதாரமாக அய்யா நாராயணர் பூஜிக்கப்படுகிறார் என்றால், அதற்குக் காரணம் சர்வ துறையிலும் அவரிட மிருந்து வெளிப்பட்ட தீர்க்கதரிசனங்கள்தான்.

சாதி, சமூகம், இறைத்தன்மை இப்படி பல் வேறு அம்சங்களில் அவருடைய தெளிவான தீர்க்க

தரிசனம் இன்று நம்மை வியக்க வைக்கிறது. ஆனால், அவர் வாழ்ந்த அவதார காலத்தில் அதை எத்தனை பேர் நம்பியிருப்பார்கள் என்று நிச்சயித்துக் கூற முடியாது.

சாதியைப் பற்றிய அவருடைய இறுதியான கண்ணோட்டம் இன்றைய காலகட்டத்தில் அறிந்து வியக்கத்தக்க ஒன்று. சாதியை கொடிய பாம்பு என்று கண்டித்துக் கூறிய அவர் பிற்காலத்தில் சாதி எப்படி எப்படியெல்லாம் மாறுபட்டு இயங்கும் என்பதையும் மிகத் துல்லியமாக கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

எளிமையான வார்த்தைகளில் அய்யா கூறிய அழுத்தமான உண்மைகள் சில;

'சாதி வரம்பு தப்பி நிலைமாறும்'

'தன்னந் தன்னாலே சாதிக்கு சாதி மாளும்'

'சாதி பதினெட்டும் தன்னால் கேடாகும்'

—அகிலத்திரட்டில் அய்யா கூறியிருப்பவை.

பகவான் வைகுண்டரின் தீர்க்க தரிசனப்படி, இடையில் சில சமய வாதிகளால் ஏற்படுத்தப்பட்ட சாதிகள் முற்றிலும் அழியும் என்றோ, நிலை பெற்றிருக்கும் என்றோ கூற முடியாது.

ஆனால், எல்லா சாதிகளிலும் மாற்றம் ஏற்படும் முன்பு பிராமணர்கள் என்றால் தங்கள் கட்டுக்கோப்

பான கலாச்சாரத்தில் அடங்கியிருப்பார்கள். அதை மீறி வெளியே போகமாட்டார்கள் நல்லதோ, கெட்டதோ அதற்குள்தான் முடங்கிக் கிடக்கும். அதேபோல்தான் மற்ற சாதிகளும். நாயுடு என்றால் நாயுடு இனமக்களின் பழக்க விழக்கங்களிலேயே தங்கள் வாழ்க்கையை சுருக்கிக்கொள்வார்கள். பிற சாதியுடன் கலப்பு இருக்காது.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்கூட இது தான் நிலையாக இருந்தது. கற்றறிந்தவர்களும் ஆட்சியிலிருந்தவர்களும் கூட தங்கள் பெயர்களை குலப்பெயரோடு இணைக்காமல் சொன்னது கிடையாது. இராஜகோபாலாச்சாரி, சீனுவாச சாஸ்திரி, படம் தாணுப்பிள்ளை, ராமசாமி படையாச்சி, குமாரசாமிராஜா போன்ற சாதிகளின் மேல் நம்பிக்கை இல்லாத ஒப்பற்ற அறிஞர்களும், தலைவர்களும் கூட தங்கள் பெயர்களோடு ஓட்டி யிருக்கும் சாதிப் பெயரை விலக்கிக்கொண்டிருந்த தில்லை. அது அவர்களுக்கு ஒரு விலாசமாகவே உடன் இருந்தது.

ஆனால், இன்றோ அப்படி தங்கள் பெயரோடு, சாதிப் பெயரை சேர்த்துக் கொள்வதை சாமான்ய மக்கள் கூட விரும்புவதில்லை. தம் வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் அந்த சாதிப்பெயரை உபயோகித்த முதியோர்கள் கூட பிற்காலத்தில் விரும்பியே அதை நீக்கிவிட்டார்கள் அந்த அளவு

சாதி என்ற கோட்டுக்குள் தம்மை அடக்கிக்கொள்ள மக்கள் விரும்பாத நிலை வளர்ந்து விட்டது.

இதைத்தான் அய்யா நாராயணர், 'சாதி வரம்பு தப்பு நிலை மாறும்' என்று குறிப்பிட்டார்.

அதோடு ஒரு சாதி விழிப்புற்று தன் உரிமைகளுக்காகப் போராடும்போது, அச்சாதியை அதுவரை அடக்கி ஆதிக்கம் செலுத்தி வந்த மேல்ஜாதி, அதை நசுக்க முயல்வது இயல்பு அதன் காரணமாக தவிர்க்க முடியாமல், இனக்கலவரங்களும், சாதிச் சண்டைகளும் ஏற்படும். இந்தச் சண்டைகள் சுதந்திர நாட்டின் வேதனையான காட்சிகள். நாடு முழுவதிலும், தாழ்த்தப்பட்ட மக்கள் விழிப்புணர்வுடன் குரல் கொடுக்கும் போதெல்லாம் மேல்சாதியினர் அவர்கள் மேல் வன்முறை வெறியாட்டங்களைக் கட்டவிழ்த்துவிட்டு, அடக்குவது செய்திப் பத்திரிகைகளில் தினம் தினம் நாம் காணும் வேதனைச் செய்தி இது பாரத நாடு முழுவதுமே எல்லா மாநிலங்களிலுமே நடந்து வருகிறது. இந்த புதிய வேதனைக் காட்சிகளை அய்யா நாராயணர் நூற்றைம்பது வருடங்களுக்கு முன்பே தன் தீர்க்க தரிசனங்களில் குறிப்பிட்டிருக்கிறார். அப்படிக் கூறியதுதான்.

'சாதிக்கு சாதிமாளும்'

அடுத்து, இன்னொரு படி மேலே போய் பிற்படுத்தப்பட்ட சாதிகளே தங்களுக்குள் அர்த்தமில்லா

மல் மோதிக் கொண்டு பிளவுபட்டு சண்டையிட்டுக் கொள்ளும் என்றும், தம் தீர்க்கதரிசனத்தால் உணர்ந்தார் அய்யா நாராயணர். மேல் சாதியினர் சாமர்த்தியமாக அவர்களை அணி அணியாகப் பிளவு படச் செய்து பல்வேறு கோணங்களில் அவர்களைக் கெடுக்க வழி செய்வார்கள் என்பதை மிகத் தெளிவாகவும், உறுதியுடனும் வெளிப்படையாகக் கூறினார் அய்யா. அந்த வரிதான்.

'சாதி பதினெட்டும் தன்னால் கேடாகும்.'

சாதி பதினெட்டு என்று சொன்னது பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைத்தான்.

இப்படி, தாழ்த்தப்பட்டசாதிகளின் நிலையைப் பற்றி இவ்வளவு அவநம்பிக்கைக்கு உரியதாக அய்யா கூறியிருக்கிறாரே, அப்படியானால், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வளர்ச்சியே ஏற்படாது என்று அவர் கணிக்கிறாரா? என்று கேட்கத் தோன்றும்.

ஆனால், அய்யாவின் தீர்க்கதரிசனங்கள், நம் சந்தேகங்களை முறியடிப்பவையாக அமைந்திருக்கின்றன.

சாதிகள் ஒன்றோடொன்று சண்டையிடும் என்றும், தமக்குத்தாமே கேடுகளை வரவழைத்துக் கொள்ளும் என்றும் கூறிய அவர் இறுதியாக ஒரு

வார்த்தையில் இன்று பிற்படுத்தப்பட்ட மக்கள் பெற்று வரும் எழுச்சியைத் தெளிவாகச் சொல்லி விடுகின்றார் அதுதான்,

'தாழ்மையாய் வாழ்ந்த சாதியது நன்றாகும்'

அரிஜன முன்னேற்றத்திற்கு காந்திஜி நடத்திய போராட்டத்தின் விளைவுகளையும், இன்றுமண்டல் கமிஷனின் தீர்ப்பில் கிடைத்த நீதியையும்தான் அப்படி ஒரே வார்த்தையில் குறிப்பிட்டிருக்கிறார் அய்யா.

இது மட்டுமல்லாமல், இன்று நாம் காணும் சமூக சீரழிவுகளையும் அற்புதமாகத் தம் தீர்க்க தரிசனங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார் அய்யா. காட்டை அழித்து, விடு கட்ட நாம் பிளாட் போடு வதைக் கூட அய்யா தன் தீர்க்கதரிசனத்தில் விட்டு வைக்கவில்லை. தம் எளிமையான வார்த்தைகளில் அவர் கூறிய சில அதிசயிக்கத்தக்க தீர்க்கதரிசனங் கள் இவை.

'காடுநாடு ஆகுமென்று சொன்னசொல்
காலமும் சரியாச்சே சிவனே!'

அருள் நூல் பக்-21

'பட்டணங்கள் தோறும் பசிநோய் அதிகமதாய்
வட்டி அநியாயம் வாங்கிடுவார் கட்டழிந்து
பிள்ளையுடன் கொண்ட பெண்ணை விற்றிடுவார்.'

அருள் நூல் பக்-75

'பொய்புரட்டு அதிகம் அய்யா'

அருள் நூல் பக்78

'ஆண்மூப்பும் பெண்மூப்பும்
அதிகப்பட்டுப் போச்சு தப்பா'

அருள் நூல் பக்28

'மனுக்கள் தங்களுக்குள் மாகஎசல் உண்டாகும்'
'கள்ளர் பெருப்பார்'
'ஈனருக்குக் காலம் ரொம்பரொம்ப உண்டாகும்'
மாமோக ஆசையினால் மாசண்டை வரும்,
நாணி இறப்பார் நஞ்சுதின்றே இறப்பார்
கோணிக்குள்ளே இறப்பார் கீறிக்கொண்டேசாவார்
வைரம் விழுங்கி மாள்வார்கள் சிலபேர்கள்'

-அகிலத்திரட்டு பக் 164, 165

பெண்மக்களில் சிலர் முறை தவறி படும் அவல நிலைகளைக்கூட நாராயணர் எச்சரித்துக் குறிப்பிட்டிருக்கிறார்

ஏன், சில பெண்களுக்கு மீசை முளைக்கும்' என்று கூட அவர் குறிப்பிடத் தவறவில்லை....

18. அயோத்தியில் அழிவு வரும்

நடுத்தீர்ப்புக்கேட்குதற்கு நாளருந்து வருகுதப்பா
நடுத்தீர்ப்புக் கேட்டவுடன் நாடாள நான் வருவேன்.

(அருள் நூல் சிவகாண்ட அதிகாரப்பத்திரம்)

ஆன்மீக ரீதியாகவும் சரி - சமூக ரீதியாகவும் சரி,

பெண்களின் உரிமைக்காக முதன் முதலாக இந்திய மண்ணில் குரல் கொடுத்த பெருமைக் குரியவர், அய்யா நாராயணர்தான்.

இந்திய வரலாறு, இந்த அளவு வேகப் போராட்டம் நடத்திய வேறு ஒருவரைப் பற்றியும், இவருக்கு முன்னதாகப் பேசவில்லை,

உலகமெங்கும் உணவுக்காக ஒட்டு மொத்த மாகப் போராடியிருந்திருக்கிறார். உடைக்காகப் போராடியிருக்கிறார்கள்.

பெண்களின் சமூக உரிமைக்காகக்கூட போரா டியதுண்டு. ஆனால் பெண்மையின் மானத்தைக்

காக்க இரண்டாண்டு காலம் தவமிருந்து, மன்னர் ஆதிக்கத்தையே எதிர்த்துப் போராடி வெற்றி கண்டு, தனியொருவராகச் சாதனை புரிந்த அவதார புருஷர் அவர்.

அன்று, சான்றோர் இனப் பெண்களின் இழிவு நிலையாக இருந்த தோள்சீலை போடவிடாத' கொடுமையை எதிர்த்து பெண்மையையே தலை நிமிரச் செய்தவர் அவர்.

அப்படிப்பட்டவர், பெண்மையினால் பிற்காலத்தில் ஏற்படக்கூடிய சில அழிவு நிலைகளையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

அவதார புருஷர்கள் தங்கள் தீக்கதரிசனங்களால், சுட்டிக்காட்டுபவை நிந்தனை செய்வதற்காக அல்ல... சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து திருந்துவதற்காகத்தான்.

வெறும் சிரித்து, முகம் கோணாமல் பழகுவது மட்டும் நட்பு அல்ல....தவறு கண்ட இடத்தில் 'சுட்டிக்காட்ட வேண்டும்' என்று 'நட்பு'க்கு வள்ளுவர் கூறிய நியாயத்தை எந்தப் பெண்குலத்துக்காக வைகுண்டர் புரட்சிக் கொடி ஏந்தினாரோ, அந்தப் பெண்குலத்தின் விஷயத்திலும் கடைபிடித்து, அவர்களால் ஏற்படக்கூடிய சீரழிவுகளையும் குறிப்பிடுகிறார்.

அவையெல்லாம், நாம் இன்று செய்திப் பத்திரிகைகளில் பார்த்து மனம் வெதும்பும் செய்திகள்தாம்.

பெண்களின் முறைகேடான உறவுகளால் குடும்ப அமைதி கெட்டு, கொலைகள் சம்பவிக்கும் வேதனையான நிலைதான்....இன்று நாட்டில் நடக்கும் கொலைகளில் பெரும்பான்மையானவை. பெண்களின் தவறான ஒழுக்கத்தாலும், கணவர் அல்லாதவருடன் உறவு ஏற்பட இடம் தருவதாலும் என்பதே காவல் துறையினர் மூலம் தரப்படும் தகவல்கள்.

இப்படி நிலைகள் வரும் என்பதை உணர்ந்த பகவான் வைகுண்டர்.

பெண்கள் படிதாண்டாமல் வாழ்ந்த காலத்தி லேயே, இந்தத் தீர்க்க தரிசனங்களை வெளிப் படுத்துகிறார்.

❋ பொண்ணாலே ஆண் அழிவு பெருகும்.

❋ மேவரிய ஒருவருடன் ஒன்பத்தெட்டுபேர்
திருத்தமறவே திரிவார்கள்...?

(கல்யாணமான ஆண்களையே சில பெண்கள் விரும்பி வாழ்வைக் கெடுத்துக் கொள்வதைத்தான் சுட்டிக்காட்டுகிறார் வைகுண்டர்.)

❋ நித்தம் நித்தம் பெண்கள் மோகம் பெருகிக்
கண்ட கணவன் மேல்
மோகக்கலவி செய்வார்.

❋ ஞாயவழி பாராமல் நத்தியே நேசமுடன் சிற்றின்பம் செய்திடுவார்.

❋ ஏழு பெண் பிள்ளைகள் ஒரு ஆண் பிள்ளையை அடர்ந்து பிடிப்பார்கள்!

(அருள் நூலில் கூறப்பட்டிருப்பவை)

இப்படி அவர் குறிப்பிடும் செய்திகளில் ஆண்களும் குற்றவாளிகள்’ என்பது, உண்மையே. ஆயினும் இவற்றை பெண்களின் ‘சறுக்கிய! நிலைகளாகவே அய்யா குறிப்பிடுகிறார்.

அதற்குக் காரணம், ‘ஆண்களை மன்னித்து விட்டார் என்பதல்ல, பெண்களிடம் அவருக்கு இருந்த அபார எதிர்ப்பு காரணமாக, ‘பெண்களும் இப்படி இடம் கொடுத்து, அழிவுக்கு உடன் போகப் போகிறார்களே என்ற வைகுண்டசாமியின் கரிசனம் வெளிப்பாடுகளே! (மற்றபடி ‘ஆணாலே பெண் அழிவு’ அவர் குறிப்பிடத்தவறவில்லல.)

கூடவே, பெண்மையின் உரிமை வளர்ச்சியாக இன்னொரு தகவலையும் கூறுகிறார்.

‘கணவனை இழந்த பெண்ணுக்கு காட்டுவது இல்’ என்று ஒரு பெண்ணின் மணவாழ்வு கொண்ட முதல் கணவனோடு போய்விடும் என்று அவருக்கு ‘வெள்ளை’ கொடுத்துவிடும் வைதீகக் காலத்தில்-

பெண்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டு, விதவாவிவாகங்கள் நடைபெறும் என்பதையும் அய்யா, தம் தீர்க்கதரிசனத்தில் குறிப்பிடுகிறார்.

அறுத்த மாங்கல்யத்தை மிகுத்துக் கட்டுவார்கள்!

—இது வைகுண்டரின் வாக்கு (அருள் நூல்)

சில சுவையான சமூக மாற்றங்களையும் அவர் தன் தீர்க்க தரிசனங்களில் குறிப்பிடுகிறார்.

இன்றுகூட நம் தாத்தாக்கள், பாட்டன்மார், குடுமி, காதுளில் கடுக்கன்கள், அணியக் கண்டிருக்கிறோம்.

நூற்றைம்பது வருடங்களுக்கு முன்போ, கடுக்கன் அணியாதவர் குடுமி வைக்காதவர்கள் இல்லவே இல்லை.

அந்தக் காலத்திலிருந்து கொண்டு, அய்யா சொன்னார்!

❋ **'கடுக்கன் திருகாணி இல்லை**
கலியுகத்தில் வேலை இல்லை'

(அருள் நூல்)

❋ **கலியுகம் தன்னிலே தேடியே போட்டநகை**
கழன்றோடி போகக் கண்டேன்!

கடுக்கன் போன்ற நகைகள் மட்டுமா போகும்? குடுமியும் போகப் போகிறது என்றார் அய்யா, இதோ பாடல்!

'பின் குடுமி முடிந்தவர்
பூமியில் இருக்க மாட்டார்!

—அருள் நூல்

இப்படி நுண்ணிய சமூக, மாந்தர் நிலைகளில் கூட தோன்றவிருக்கும் மாற்றங்களைக் குறிப்பிட்டவர்-

இந்திய மண்ணில் நாம் இன்று கண்டு அதிர்ந்து போயிருக்கும் சில அதிர்ச்சியான தகவல்களையும் தம் தீர்க்க தரிசனங்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

வடஇந்தியாவின் இந்தியப் புராண வரலாற்றுப் பெருமைகளுக்கு அங்கே இருப்பவை. 'ராமாயணமும்', 'மகாபாரதமும்' நிகழ்ந்ததாகக் கூறப்படும் இடங்கள்தான்...

ஒன்று அயோத்தி.

இன்னொன்று குரு க்ஷேத்திரம்.

இவை, காலம் காலமாக இந்திய மக்களின் அஞ்சலிக்கும் வணக்கத்திற்கும் உரியதாக வந்தன.

ஆனால், இன்று?

அந்தத் தலங்களைப்பற்றி நினைத்தாலே, அந்தப் பகுதியில் நடைபெற்ற அழிவுகளும், வழக்குகளும் தான் நினைவுக்கு வரும்.

புனிதமான ராமரின் பூமி அது வானரம் முதல் காட்டுக் கரடி வரை அனைத்து உயிர்களையும் மனிதர்களுக்கு சமமாகக் கருதிய புண்ணிய அவதாரம் ராமர் ஜாதி வேற்றுமைகளைக் கடந்து கங்கை கண்ட வேடனையும் இலங்காபுரி அரக்கனையும் சகோதரராக ஏற்றதெய்வம் தாழ்த்தப்பட்ட 'சபரி'யின் எச்சிலை உண்டு சமத்துவம் கண்ட அருள் நாயகன் ஜடாயு என்ற பறவைக்கு ஈமக்கிரியை செய்து உயர்ந்த நாதன்.

அந்தத் தெய்வத்தின் புனிதத்தோடு நம் மனதில் புண்ணிய பூமியாக கொலுவீற்றிருந்த அயோத்தியின் இன்றைய நிலை என்ன?

'அயோத்தி' என்று நினைத்தாலே, அங்கு நடந்த கலவரங்களும், வழக்குகளும் தடைகளும் தான் நினைவுக்கு வரும்.

அயோத்தியின் சக்தி மகிமை அழிந்து விடாது

தர்மத்தை நிலைநாட்ட பஞ்சபாண்டவர்களும் கௌரவர்களும் போரிட்ட பூமி குருக்ஷேத்திரம். அதுமட்டுமல்ல ஐந்தாம் வேதமான கீதையை, கண்ணன் வாய்மொழியாகக் கூறி, உலகம் பெற்றுக் கொண்ட ஞானபூமி குருக்ஷேத்திரம்.

இன்று அதுவும் அரசியல் பார்வைகளோடு புகழ் அழிந்திருக்கிறது....

இந்த நிலையை, அன்றே குறிப்பிட்டுச் சொன்னார் வைகுண்டர் அவருடைய வாக்கு இது!

'அயோத்தி பட்டணம்தான் அழியுதடா என்மகனே!
குருநாடு அழியுதப்பா,
கோபால குருசாமி சொல்கிறேன்!

—அருள் நூல்

இவற்றோடு, இன்னும் பல புதிரான தீர்க்க தரிசனங்களையும் கூறுகிறார்.... அவை மேலோட்டமாக ஒரு கருத்தும், அடிப்படையும் பல தத்துவங்களைக் கொண்டவைகளாகக் காணப்படுகின்றன.

19. கோழிக் குஞ்சுக்குக் கொம்பு முளைக்குமா?

இரப்போர்க்கு அன்னமது ஈந்திடுங்கோ
கண்ணுமக்காள்
ஆடை கொடுத்திடுங்கோ அம்பலாசரம் செய்திடுங்கோ
கொடுத்தால் அன்னம் குறையாமல் கொடுத்திடுங்கோ
(அருள் நூல்—பக் 41)

அற்புதங்களும் அதிசய செய்திகளும் இடம் பெறாத மதம் கிடையாது.

இந்து புராணங்கள் கிறிஸ்தவர்களின் பைபிள் (புதிய ஏற்பாடு—பழைய ஏற்பாடு) போன்றவற்றில் நிறைய செய்திகள் நம்புவதற்கு சிரமமாக உள்ளதாய் இடம் பெற்றிருக்கின்றன.

பாயும் நதியின் அடியில் கிடக்கும் சரளைக் கற்களை யாரும் பொருட்படுத்துவதில்லை. நதியில் நீராடுவதையும், நதியால் நன்மை பெறுவதைப் பற்றியும் மட்டுமே மக்கள் கவலைப்படுவார்களே ஒழிய அடியில் கிடக்கும் சரளைக் கற்களைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை.

அதுபோல், மத நூல்களிலுள்ள தெய்வ போதனைகளையும், உயர்ந்த கருத்துக்களைப் பற்றியும் மட்டுமே, மக்கள் அக்கறை செலுத்துவார்கள். மற்றபடி, அதில் கூறப்பட்டிருக்கும் நம்ப முடியாத கதைகள், செய்திகள் இவற்றைப் பெரிதுபடுத்துவதில்லை. அவற்றுள் சில இடைச் செருகல்களாகக்கூட இருக்கலாம். வாய்மொழியாக ஒருவர் சொல்ல இன்னொருவர் கேட்க உருவான புராண ஏடுகளில் இப்படிக் கற்பனை நயமிக்க இடைச் செருகல்கள் ஏற்படுவது இயற்கை.

ஆனால், அய்யா நாராயணரின் அருள்வாக்கான அருள்நூலும், அகிலத்திரட்டும் இடைச் செருகல்களுக்கு இடம் கொடுக்காதவை என்று தெளிவாகப் புரிகிறது. அவை மூல ஏட்டின் வடிவிலேயே வெகுகாலம் பேணப்பட்டு சமீபத்தில்தான் அச்சுவடிவம் பெற்றிருக்கின்றன. சீக்கியர்களின் கிரந்தங்களைப்போல் அய்யா நாராயணரின் அருள் நூலும், அகிலத்திரட்டும் பக்தர்களால் தெய்வ அந்தஸ்துடன் போற்றப்படுகின்றன. அதில் ஒரு வரி மாறுதல் இருந்தாலும் அந்த மூல வார்த்தைக்காக பக்தர்கள் போராடுவதை நாம் அனுபவ பூர்வமாக அறிவோம். (சமீபத்தில் கூட நமக்கு அந்த அனுபவம் ஏற்பட்டது.) கடந்த இதழில் அச்சுப் பிழை காரணமாக அறுத்த மாங்கல்யத்தை மிதித்துக்காட்டுவார்கள்' என்று இடம் பெற்றிருந்தது. அது தவறு.

உண்மையில் அந்த வரிகள் இப்படி இருக்க வேண்டும்.

'அறுத்த மாங்கலியத்தை
மிகுத்துக் கட்டுவார்கள்'

இந்தக் குறையை பல அன்பர்கள் நமக்குச் சுட்டிக் காட்டிவிட்டார்கள்.

ஒரு எழுத்துப் பிழையை ஓரே நேரத்தில் பலர் சுட்டிக்காட்டுகிறார்கள் என்றால் அத்தனை பேருக்கும் அந்த மத நூலில் முழுக் கவனமும், பாராயணமும் இருக்கிறது என்று அர்த்தம்.

மூல நூலில் சிறிதளவு இடைச் செருகல்கூட ஏற்பட்டு விடாமல் இருக்க பக்தர்களின் இந்தக் கண்காணிப்பு ஒரு கவசமாகத் திகழும்.

இப்படிப்பட்ட ஒரு நூலில் பல அதிசய செய்திகள் தீர்க்கதரிசனங்களாக இடம் பெற்றிருக்கின்றன.

பகவான் வைகுண்டரே மிகவும் ஆணித்தரமாக அந்தச் செய்திகளைக் கூறுகிறார். உதாரணத்திற்குச் சில

* 'இரண்டு தலை மூன்று கண்ணுமாகப்
பிள்ளை தரித்துப் பிறக்கக் கண்டேன்'

* கோழிக்குஞ்சுகள் எல்லாம் கூட்டை விட்டு
எழும்பு முன் கொம்பு முளைக்ககண்டேன்'

* 'வெள்ளானை கடலுக்குள்ளே விளையாட கண்டேன்'

* போர் வெள்ளைக் கொககுப் புழுத்தின்ன போனவிடத்தில் புழுவெட்டிக் கொத்தக் கண்டேன்'

இவையெல்லாம் உயிரியல் சாத்திரத்தில் மிக வினோதமாகக் கருதப்படக் கூடியவை.

இரண்டு தலை மூன்று கண்களுடன் குழந்தை பிறக்குமா?

கோழிக் குஞ்சுக்குக் கொம்பு முளைக்குமா?

புழு வெட்டியதால் கொக்கு சாகுமா?

இவையெல்லாம் இயல்பாக கேட்கப்படக் கூடிய கேள்விகள்.

ஆனால், உலகெங்குமுள்ள பத்திரிகைச் செய்திகளைப் புரட்டிப் பார்த்தால் இப்படி உடற்கூறுகளில் வித்தியாசமான தோற்றங்கள் ஏற்பட்டு மக்களை அதிசயப்பட வைத்திருப்பது உண்மை.

இந்த அதிசய உடற்கூறு செய்திகளை பகவான் ஏன் குறிப்பிட்டுச் சொல்கிறார் என்பது நமக்குள் ஒரு சின்ன புதிர்.

சாதாரண பிராணிகளின் அதிசயங்களைக் கூறுவதற்காக மட்டுமா பகவான் இதைக் குறிப்பிட்டிருக்கிறார்.

சுவாமியின் சிந்தனைத்தரத்தில் உள்ளவர் களுக்கு இந்தச் செய்திகள் வெறும் விளையாட்டு வார்த்தைகளாகத்தான் இருக்க முடியும்.

ஓர் ஆழமான சமூகப் புரட்சி சிந்தனையாளர்- ஆன்மீக வழிகாட்டி பிராணியியல் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதில் நமக்கு வேறு ஒரு செய்தியும் புலனாகிறது.

சமுதாயத்திலும் மத வாழ்க்கையிலும் ஏற்படக் கூடிய புரட்சிகரமான மாற்றங்களை அவர் கோடிட்டுக் காட்டுவதாகவே நமக்குத் தோன்று கிறது.

இன்று அரசனாக இருப்பவன் நாளை இதே போல் அரசனாக இருக்கப் போவதில்லை.

'இன்று ஒரு ஆட்சி அமைப்பில் அதிகாரம் செலுத்திக் கொண்டிருப்பவர்கள் அதே மாதிரி தொடர்ந்து காலை நீட்டி அதிகாரம் செய்து கொண் டிருக்க முடியாது' என்றெல்லாம் சமூகத்திலும் தனி மனித நெறிகளிலும் ஏற்படுகிற மாற்றங்களைத்தான் மிருகங்கள் மூலமும், பறவைகள் மூலமும்—ஈசாப்பு, பஞ்ச தந்திரக் கதைகளில் சொல்வதைப் போல் பகவான் வைகுண்டர் சொல்லியிருப்பதாக நமக்குத் தோன்றுகிறது.

அதை வலியுறுத்துவதுபோல் சில வரிகள்தெளி வாக இன்னும் சில தகவல்களைத் தரிசனமாக அய்யா கூறுகிறார்.

'இன்று தாழ்த்தப்பட்டிருப்பவன், என்றுமே அப்படி இருக்கப் போவதில்லை. எதிர்த்து தன் மேல் இருப்பவனை வீழ்த்துவான். எதிரிகளை சிதறிடிப்பான். சின்னவர்கள் பெரியவர்களாக நடித்துக் கொண்டிருப்பவர்களைச் சாய்ப்பார்கள்.' என்று கூறாமல் கூறுவதற்காகவே கீழ்க்கண்ட செய்திகளை அருள் நூலில் கூறுகிறார்.

மிக எளிமையாகவே பொருள் புரியக்கூடியதாக அமைந்திருக்கும் அந்த வரிகள் இவை.

பாம்பைக் கடிக்க வந்த கீரியை சீறிமாறி பாம்பெட்டி
கொத்தக் கண்டேன் சிவனே அய்யா
பூனைபோய் யானையுடன் போர் பொருதி முன்காலால்
பொத்தி யெடுக்கக் கண்டேன் சிவனே அய்யா
பச்சைப்பாம்பை கண்டவுடன் மயில்களெல்லாம்பதுங்கி
கிடக்கக் கண்டேன் சிவனே அய்யா
ஆலா கருடனையும் சிட்டிவோடிப் பறந்து அடித்து
எடுக்க கண்டேன் சிவனே அய்யா
மயில் கணடாபோலே பச்சோந்திகளெல்லாம் மயங்கி
கிடக்கக் கண்டேன் சிவனே அய்யா
ஆடுபோய் மாடுடனே அலரவே மாக்கு போட்டு அது
போர் செய்யக் கண்டேன் சிவனே அய்யா

சட்டிக் காய்க்கு கொம்பு முளைத்து கோழியுடன் போர்
பொருத்தக் கண்டேனையோ சிவனே அய்யா
நாடுதனில் திரிந்து வாயல் காக்கும் நாயை நரி வந்து
கடிக்கக் கண்டேன் சிவனே அய்யா.

20. நாராயணருக்கும் 'பிரெஞ்சு' நாஸ்டர்டாமுக்கும் என்ன சம்பந்தம்?

பயந்து ஒடுங்கிக்கிடந்த மக்கள் நிமிர்ந்து, நம்மை ஒடுக்கி வைத்தவர்களை எதிர்த்து வெற்றி பெறுவதைத்தான் பூனை போய் யானையுடன் மோதிய பல விசித்திர உவமானங்களால் கூறியிருக்கிறார் அய்யா வைகுண்டர். இதை ஒரு சமூகப் புரட்சிமிக்க தீர்க்கதரிசனமாகவே எடுத்துக் கொள்ள தோன்றுகிறது.

இன்று உலகம் முழுவதும் மனித சமுதாய உரிமைப் போராட்டத்தின் தீர்க்கதரிசனம்தான் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் பகவான் வைகுண்டர் கூறிய அருள் வாக்குகள்.

இந்த சமூகப் புரட்சியில் சிறியவர்கள் வெற்றியை மட்டும் குறிப்பிடவில்லை. அவர் இன்னொரு அபாயத்தையும் குறிப்பிடுகிறார்.

நல்ல சக்திகளை, தீய சக்திகள் அழிக்கும் அபாயம் உண்டு என்பதையும் அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

அதற்கு ஒரு உதாரணம்.

* "பெற்றதாய் பிள்யையை முன்வைத்துப் படுக்கையில்

  ஈனா பேச்சில் வந்து தின்னக் கண்டேன் சிவனே அய்யா.

* பெருத்த ஊரில் உள்ள குருத்தைக் கடிப்பதற்கு

  பேய்வந்து சூழக்கண்டேன் சிவனே அய்யா முனிபெற்ற பிள்ளையைச் சுண்டெலி, தானும் கண்டு

  முடுக்கிக் கடிக்கக்கண்டேன் சிவனே அய்யா"

இந்த சமூக சிந்தனைகளோடு சில அறிவியல், புவியியல் சாத்திரங்களில் ஏற்படப்போகும் வித்தியாசமான கூறுபாடுகளையும் பகவான் வைகுண்டர் கூறியிருப்பது ஒரு வித்தியாசமான நிலை. உலகத்தில் மழை இல்லாமல் வறட்சி ஏற்படும் என்று கன்னியாகுமரியிலிருந்து ஒருவர் சொல்வது மிகவும் புதுமையான தகவல். எனென்றால் சதா சர்வ காலமும் மழை பஞ்சமின்றி செழித்திருக்கும் பகுதி அது.

ஆனால், அந்த வெள்ளச் சிறப்பான பகுதியில் இருந்து கொண்டு மழை வறண்டு போவதைப்பற்றி

யும், வான்பொய்ப்பது பற்றியும், அதே சமயத்தில் அளவுக்கு மீறிய மழையால் நாடு அழிவதைப் பற்றியும் அவர் துல்லியமாகக் குறிப்பிடுகிறார். (சமீபத்தில் குமரி மாவட்டத்திலேயே அப்படி வெள்ளத்தால் அழிவு ஏற்பட்டது). அந்த வரிகள்-

வறட்சியைப் பற்றி:

- ‘‘நாடு தன்னில் மழை தழைத்துப் பொய்யாமல் வானம் சுருங்கிவிடும்’’
- வானம் முறுகும் மழை கீழ் சொரியாது மாநிலத்தில் வேளாண்மை மழையில் மிகக் கேடு வரும்’’
- ‘‘கிணறு பாழ்ஆகும் கீழ்ஊற்றுப் பொய் யாகும் கிணறு பெருத்து ஏங்குவாரே மனுவோர்’’
- ‘‘கங்கைப்பால் வற்றும்’’

மழையால் அழிவு பற்றி

பேய் மழை என்று பொதுவாக கூறக்கேட்டிருக் கிறோம்.... ஆனால், கனத்த மழையை அய்யா வித்தியாசமான ஒரு வார்த்தை கொண்டு வர்ணிக் கிறார். யானைத் துதிக்கைபோல் மழை பெய்யும் என்று ஒரு புதுமையான வர்ணனையால் கடும்

மழை பெய்வதைக் குறிப்பிடுகிறார். அகிலத்திரட்டு நூலில் அதுபற்றி அவர் கூறியிருப்பது—

''மூன்றுநாள் இருள்மூடி
யானைத் துதிக்கைபோல் மழை பெய்யும்
அதிலே சிலதுர்ச்சனர்கள் எல்லாம்
மாண்டு போவார்கள்''

அய்யா சுட்டிக் காட்டியிருக்கும் சில பூகோள–வானியல் மாற்றங்கள்கூட நம்முடைய சிந்தனைக்கு ஆய்வுப் பொருளாக அமைந்திருக்கின்றன.

வானியல் மாற்றங்கள்.

அய்யாவின் தீர்க்கதரிசனப்படி பயங்கரமான இடிகளால், பிரபஞ்ச நிலைகள் மாறி அழிவுகள் காத்திருக்கின்றனவாம். அகிலத்திரட்டில் அவர் கூறுவது—

- ''வானத்து இடிகள் வருடம் வருடம் தோறும் நீள் நிலத்து விழும் நின்று மலை முழங்கும்''

- ''வானம் இடியாமல் மலைகள் இளகிடவும் கானமது நாடாய்க் கண்டதுவும் சூரியனும் தெற்கு வடக்காய் திசைமாறி நின்றிடவும்''

கடல்களில் கூட சில மாற்றங்கள் ஏற்படும் என்று அய்யா குறிப்பிடுகிறார். ஏற்கனவே, நம் பூமியின் அமைப்பில் சில நகர்தல்களும், சுருங்கல்

களும் ஏற்பட்டு பூமியில் பூகோள மாற்றங்கள் சம்பவித்துக் கொண்டிருக்கின்றன என்று ஆராய்ச்சி யாளர்கள் தெரிவித்திருக்கின்றனர். இதனால் கடல் களின் அமைப்பிலும் மாற்றங்கள் ஏற்படுவது இயல்பு. இதை அய்யாவும் தன் தீர்க்க தரிசனத்தில் தெரிவிக்கிறார்கள்.

'ஏழு சமுத்திரத்தில் மூன்று சமுத்திரம்
உள்வாங்கிப் போய்விடும்'

எல்லாவற்றுக்கும் புதுமையாக-அணு யுகத்தில் உள்ள நாம் கலங்கிக் கொண்டிருக்கும் உலகத்தில் கட்டைவண்டியும், மிருகங்களுமே வாகனமாக இருந்த காலத்தில் வேகமான வாகனங்கள் மூலம் மனிதர்களுடைய பயண தூரங்கள் சுருங்கும் என்பதையும் கூட நாராயணர் குறிப்பிடாமல் விட வில்லை.

ஆயிரமாயிரம் மைல்கள் தூரத்தைக் கூட சில மணி நேரத்துக்குள்ளேயே நாம் கடந்து விடுவதை அவர் அன்றே கூறினார்.

'நாளுக்கு நாளாய் நடக்கும் வழி குறுகும்' என்கிறார்.

அதுமட்டுமல்ல. இன்று அணுயுகத்தில் இருந்து கொண்டு எந்த ஆயுதத்தால் எந்த நாடு எப்போது அழியுமோ என்று கலங்கிக் கொண்டிருப்பதை தம் அருள்வாக்கிலேயே கூறி எச்சரித்திருக்கிறார்.

அருள்நூலில் அவர் கூறியிருப்பது-

'அண்ட பகிரண்டம் வெல்ல ஒரு
ஆயுதம் வந்திருக்குதப்பா'

இப்படி சமூக வாழ்க்கையிலும் தனி மனித வாழ்க்கையிலும் பல கூறுபாடுகளை பிரித்துப் பிரித்து உணர்த்திய பகவான் வைகுண்டரைப் பற்றி, சிலர் 'இவர் பிரஞ்சு நாட்டில் 500 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தீர்க்கதரிசியான நாஸ்டர்டாம் போன்றவரா?' என்று கேட்கின்றனர்.

நாஸ்டர்டாம் ஓர் அபூர்வ தீர்க்கதரிசிதான். சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தோன்றிய நெப்போலியன் போன்றவர்களைப் பற்றியும், ஐரோப்பிய ஆசிய நாடுகளில் தோன்றவிருந்த அரசியல் மாற்றங்களைப் பற்றியும் முன்கூட்டியே தெரிவித்தவர்.

ஆனால், பகவான் வைகுண்டர் நாஸ்டர்டாம் மாதிரி ஒரு 'ஜோதிடர்' அல்ல:

பிரஞ்சுக்காரர் பல தீர்க்கதரிசனங்களைச் செய்தியாகச் சொல்லியிருக்கிறார்.

ஆனால் அய்யா நாராயணரோ, பல சமூக மாற்றங்களைப் பற்றி உணர்த்தியது பெறும் தீர்க்கதரிசன செய்திகள் மட்டுமல்ல; மக்கள் விழிப்புறவும் ஆன்மீக எழுச்சி பெறவுமே, அந்தச் செய்திகளை

ஒரு எச்சரிக்கையாகவும், வழிகாட்டுதலாகவும் கூறி யிருக்கிறது.

பிரெஞ்சுக்காரர் சொன்னது: தகவல்.

அய்யா வைகுண்டர் அருளியது: தர்ம உபதேசம்!

இரண்டுக்கும் அடிப்படை உணர்விலும் நோக்கத்திலும் இப்படி பெரும் வித்தியாசம் உண்டு.

பகவான் வைகுண்டர், தம் உபதேசங்களால் மட்டுமல்லாது, தம் செயல்பாடுகளாலும் தம்மை ஒரு 'சாமானிய தீர்க்கதரிசி' என்ற நிலையிலிருந்து வேறுபடுத்தி உயர்த்திக் காட்டியுள்ளதாக, அவருடைய வரலாற்றுச் செய்திகள் உணர்த்து கின்றன.

21. தீர்க்கதரிசி தெய்வமாக முடியுமா?

பள்ளியறைதான் திறந்து பதியேறும் நாளையிலே
உள்ளபடி சொல்லுதற்கு உகந்துவாரே னென்மகனே

—அருள் நூல்

தெய்வங்களும், தெய்வ அவதாரங்களும் எல்லா மதங்களிலுமே தீர்க்கதரிசனங்களை மக்களுக்குக் கூறியிருக்கிறார்கள். வரும்பொருளை உணர்த்தியிருக்கிறார்கள். எச்சரிக்கையும் செய்திருக்கிறார்கள். நம்பிக்கையும் ஊட்டியிருக்கிறார்கள்.

ஆனால், இப்படி தீர்க்கதரிசனங்கள் சொன்னவர்கள் எல்லோருமே தெய்வங்கள் தானா?

நம் வீடுகளில், சிறப்பாக குடும்பப் பாசம் உள்ளவர்களையும், மனிதநேயம் உள்ளவர்களையும் 'அவர் தெய்வம் மாதிரி' என்கிறோம்.

அப்படி சமூகத்துக்கே மானசீகமாக வழி நடத்துதல் செய்பவர்களையும் மக்கள் தெய்வமாக போற்றுவதுண்டு.

ஆனால், இந்த வழியில் கண்ணோட்டமிட்டால் தெய்வ நிலைக்கும், தெய்வாம்ச நிலைக்கும் ஒரு சின்ன இடைவெளி இருப்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

பகவான் வைகுண்டர் என்றும் அய்யா நாராயணர் என்றும்

கடந்த நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாக தென்பாண்டிச்

சீமைகளிலும், திருவிதாங்கூர் பகுதிகளிலும், இன்று

சென்னைத் தலைநகரிலுமே நிழல் தாங்கல்கள் நிறுவி

வணங்கப்பட்டு வரும் முத்துக்குட்டி சுவாமிகள் தெய்வமா?

அல்லது தெய்வாம்சம் பொருந்தியவரா?

இந்தக் கேள்வியை நான் எழுப்புவதையே லட்சக்கணக்கான அய்யா வழி பக்தர்கள் விரும்ப மாட்டார்கள்.

அவர்களுடைய பக்தி நிலையை நான் கடிதங்கள் மூலமும், நேர்முகப் பேட்டிகள் மூலமும் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

அவர்களைப் பொறுத்த அளவில் அய்யா ஒருவரே தெய்வம். இன்றும் அய்யாவின் அருள்வாக்கான அகிலத்திரட்டையும், அருள்நூலையும் சீக்கியரின் வேதகிரந்தத்துக்கு இணையாக அந்த மக்கள் போற்றுவதை நான் அறிவேன்.

நன்றாக குளித்து சுத்தமாகத்தான் அந்த நூலை வாசிக்க ஆரம்பிப்பார்கள். வாயில் வெற்றிலை போட்டிருக்கக்கூடாது. புனிதமான சூழ்நிலையில் உட்கார்ந்திருக்க வேண்டும்.

அது மட்டுமல்ல. இன்றும் நிழல் தாங்கல்களில் அய்யாவின் நாமத்தாற், நோய்கள் குணமாவதாகவும், பிரச்சினைகள் வேண்டுதல் மூலம் தீர்வதாகவும் பக்தர்கள் மத்தியில் ஆழமாக, அசைக்க முடியாத நம்பிக்கையும் உண்டு.

பகவான் ராகவேந்தரரின் ஜீவ சமாதிகள் (பிருந்தாவனம்) சென்று மக்கள் தங்கள் மனபாரத்தையும், பிரச்சினை சுமைகளையும், இறக்கி வேண்டுதல் மூலமாகப் போற்றி சுபிட்சம் பெறுவது போல் அய்யா அவதரித்து வளர்ந்த சுவாமித் தோப்பு பதிக்கும் மக்கள் வருடம் முழுவதும் சென்று தரிசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அய்யாவின் திருநாளை ஒட்டி அரசாங்க விடுமுறையே விடப்படுகின்றது.

இந்த அளவு தலைமுறை தலைமுறையாக பெருவாரி மக்களின் வாழ்வில் தெய்வமாகத் திகழும் அய்யாவைப்பற்றி, அவர் தெய்வாம்சம் பொருந்தியவரா?' என்று நான் கேட்பதை எத்தனை பக்தர்களால் ஜீரணிக்க முடியும்?

ஆனால், நான் அந்தக் கேள்வியை முழுமையான ஆய்வுக் கண்ணோட்டம் கருதி எழுப்பித்தான் ஆக வேண்டியது இருக்கிறது.

தங்கத்தைக்கூட உரசித்தான் பார்க்கிறார்கள். அதனால் தங்கத்தின் பெருமைக்கு மாசு வருவதில்லை.

அய்யாவின் அவதார காலத்தை ஒரு பறவையின் பார்வையாகப் பார்க்கும்போது கீதையின் நாயகன் சொன்ன ஒரு கருத்துதான் நம் நினைவில் தோன்றுகிறது.

'எப்போது தர்மங்கள் குறைந்து அதர்மங்கள் மேலிடுகிறதோ அப்போது நான் வருவேன்' என்கிறார் கீதை நாயகர்.

மகாபாரதத்தில் அவரே அவதரித்ததும் அப்படி ஒரு சூழ்நிலையில்தான்.

வசுதேவர்-தேவகி வயிற்றில் பிறந்ததுவும், யசோதை-நந்தகோபாலன் மடியில் வளர்ந்ததுவும், கோபியரின் பிரேமையில் திளைத்ததுவும் அவருடைய அவதார காலத்தில் ஏற்பட்ட சாதாரண சம்பவங்கள்தான். அவை எவ்வளவு அர்த்தபுஷ்டியுள்ள சம்பவங்கள் என்றாலும், அவை அவரை அடையாளம் காட்டப் பயன்பட்டனவே ஒழிய அவருடைய அவதார நோக்கத்திற்கு ஒரு மினி வெளிப்பாடான நிகழ்ச்சிகள் அல்ல.

குருக்ஷேத்திரத்தில் பாரத யுத்தம் நடத்தி அர்ச்சுனன் மூலம் உலக மாந்தருக்கே வாழும் நெறியான கீதையைத் தந்ததுவும், அக்கிரமக்காரர்களை அழித்து, நல்லவர்களுக்குத் துணை நின்று பூமி பாரம் தீர்த்ததுவும்தான் அவருடைய அவதார நோக்கங்கள்.

இராமரும் அப்படியே.

அவர் தாடகையை அழித்துக் கொன்றதுவும், விஸ்வாமித்திரரின் யாகத்தைக் காத்ததுவும் கல்லான அகலிகையைப் பெண்ணாக்கியதும், வில்லை ஒடித்து சீதையை மணம் புரிந்ததுவும், தந்தையின் வாக்குக்காக வனவாசம் சென்றதுவும், வாலியைக் கொன்றதுவும் அவருடைய வாழ்க்கையில் சாதாரண சம்பவங்கள்தாம்.

இராமர் என்ற பெயரில் பகவான் அவதரித்ததற்கு இரண்டே இரண்டு நோக்கங்கள்தான்.

இராவணனைப் போன்று சகல வளமும் ஆற்றலும், அறிவும், வரம் பெற்ற பெருமைகளும் கொண்ட மனிதன் தவறு செய்யும்போது, தெய்வமே கண்டிக்கும் என்பதை உணர்த்தவே இராமர் அவதரித்தார்.

அதோடு தீமையை ஒழிக்கக் கூட்டு சேருவதில் பேதங்களே இருக்கக் கூடாது என்று உணர்த்தவே மன்னனான ராமன் கங்கைக்கரை வேடனையும்,

கிஷ்கிந்தாவில் குரங்கு இனத்தின் தலைவனான சுக்ரீவனையும், ஜாம்பவான் என்ற கரடியையும் தென்னிலங்கை அரக்க இனத்து விபீசணனையும் சகோதரர்களாக ஓர் இனமாக ஆக்கிக் காட்டினார்.

இவை சம்பவச் செய்திகள் அல்ல. இறை தத்துவம்.

சம்பவச் செய்திகளில் அபூர்வக் கற்பனைகளும் இருக்கலாம். நம்ப முடியாத தகவல்களும் இணைக் கப்பட்டிருக்கலாம்.

ஆனால் அவை எதுவும் அடிப்படை இறை தத்துவத்தை மாற்றாது.

இந்த இராமரையும், கிருஷ்ணரையும் எல்லா ருமே தெய்வமாகப் போற்றுவார்களா? ஒருமித்த குரலில் 'ஆம்' என்று கூற முடியாது.

சிலருக்கு கடவுள் போயும் போயும் சிறையில் பிறப்பாரா? ஆடு மேய்ப்பவர்கள் மத்தியில் வளர் வாரா? என்ற கேள்வி தோன்றும்.

இராமரைப்பற்றி, மனைவியைக்கூட காப்பாற்ற முடியாமல் போய் விட்டாரே என்று மனித ரீதியில் கேள்விக் கேட்கத் தோன்றும். எல்லாவற்றுக்கும் மேலாக 'தெய்வங்கள் மனித உடலோடு தோன்ற முடியுமா?' என்ற கேள்வி எழுப்பப்படுவதுண்டு.

உருவமே இல்லாத காற்று, இலை தளை அசைவுகளின் மூலமும் தன்னை அடையாளம் காட்டுகிறது. அதன் கோபத்தை புயலின் சீற்றத்

தில் பார்க்கிறோம். அதன் நேசத்தை வசந்தமான தென்றல் வீச்சில் பார்க்கிறோம். அதன் உயிர்ப்பு சக்தியை நம் சுவாசத்துக்கு ஆதாரமாக இருந்து உயிர்களை வாழ வைப்பதில் அறிகிறோம்.

ஆக, தெய்வம் ஒரு காரியம் பூமியில் செய்ய திருவுளம் கொள்ளும்போது, அது தமக்குப் பிரிய மான உருவத்தை எடுத்துக் கொள்கிறது. பத்து அவதாரங்களில், விலங்குகள், உருவத்தில்கூட பகவான் அவதரித்த நிலைகள் உண்டு. பிரம்மா கை நழுவவிட்ட வேதத்தைக் காக்க மச்சாவதாரம் எடுத்திருக்கிறார் பெருமாள். பூமியைக் காக்க வராக அவதாரம் (பன்றி) எடுத்திருக்கிறார். பிரகலாதனுக்காக சிம்ம அவதாரம் (நரசிம்ம எடுத் திருக்கிறார். உலகத்தில் வாழும் நெறியைக் காக்க பலராமனாக, பரசுராமனாக, ஸ்ரீராமனாக, கிருஷ்ணனாக இப்படி பல அவதாரங்கள் பூவுலகில் எடுத்திருக்கிறார். இவற்றை ஏற்றுக்கொள்ளாத வர்கள் பற்றி பிரச்சனை இல்லை.

ஆனால் தத்துவமாக ஏற்றுக்கொள்பவர்களுக்கு ஒன்று தெளிவாகத் தெரியும். பூமியில் தெய்வங்கள் தோன்றுவது என்றால், அரூபமாகவோ, வானுல கத்தில் அவர்கள் வீற்றிருப்பதாகக் கூறப்படும் உருவங்களாகவோ பூமிக்கு வருவதில்லை. அப்படி வந்தால் அவர்களை யாரும் அடையாளம் கண்டு கொள்வதும் முடியாது. ஏற்றுக்கொள்ளவும் முடி யாது மனிதர்கள் தங்கள் பார்வைக்குட்பட்ட, தாங்

கள் விரும்புகிற தோற்றத்தில் இறைவன் தோன்றி னால் மட்டுமே ஒப்புக் கொள்கிறார்கள், நம்புகிறார் கள். அந்த அவதாரத்தோடு ஐக்கியப்படுத்து கிறார்கள்.

ஒரு குழந்தைக்கு யானை தேவைப்படும் போது, தாத்தா தன் மனித உருவத்தை விட்டு விட்டு, அந்தக் குழந்தையின் முன் யானை போல் மண்டியிடுகிறார். உடனே மனிதனான தாத்தா யானையாகி விட்டார் என்று அர்த்தமில்லை. யானைபோல் மண்டியிட்டதாலே தாத்தாவின் உருவத்திற்கு மகிமை குறைந்து விடுவதுமில்லை. அங்கே ஒரு அன்பு பரிமாற்றமும், தேவை நிறை வேறுதலும் தான் நடந்திருக்கின்றன. தெய்வங் களின் பூலோக அவதாரங்களும் அப்படியே. பகவா னும், நம் பெரியோர்களும் தெய்வம் பூமியில் அவதரித்ததற்கு இரண்டே இரண்டு விதிமுறை களைத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒன்று- எங்கெல்லாம் தர்மத்தை மீறிய கொடுமைகள் நிகழ் கின்றனவோ, அங்கே தெய்வம் தோன்றுகிறது. அடுத்தது-'தெய்வம் மனுஷிய ரூப' என்று கூறப் படுவது போல், தெய்வம் மனித உருவில் காட்சி யளிப்பதையோ, பிறப்பதையோ முரண்பாடாக ஒதுக்க முடியாது.

இந்த இரண்டு விதிமுறைகளையும் கொண்டு அய்யா நாராயணரின் அவதார சம்பவங்களை நோக்கினால், நமக்குச் சில தெளிவுகள் ஏற்படு கின்றன.

22. அய்யாவின் அர்த்தமுள்ள அவதாரம்

ஏழைமதியாகப் பேசும் இல்லாதெளியோரை
எங்கேயென்று தேடி அடிப்பாரே
இப்படி கலியிருக்கும் தானதாலே
யென்னாலே ஆகுங்கண்டீர்
வைகுண்ட மிடம் போங்கோ
வலம்பக்கம் வாழ்வீர்கள்'

தெய்வம் உண்டா? இல்லையா? என்பது யுகம் யுகமாக மக்களிடம் நிலவி வரும் சர்ச்சை. அது முடிவில்லாதது. தெய்வத்தை நம்புபவர்கள் பற்றியும் ஒரு சுவையான கண்ணோட்டம் உண்டு.

தெய்வத்துக்கு மக்கள் தேவையோ, இல்லையோ மக்களுக்கு ஒரு தெய்வம் எப்போதும் தேவைப்பட்டே வந்திருக்கிறது. அதனாலே கடவுளை 'மக்கள் உருவாக்கிய மிகச்சிறந்த மனிதன் தான் கடவுள்' என்று சொல்வாரும் உண்டு.

தெய்வத்தைப் பற்றி தெய்வம் ஏதாவது சுய இலக்கணம் வகுத்திருக்கிறதோ என்னவோ,

ஆனால் மனிதன் தெய்வத்தைப்பற்றி ஏகப்பட்ட இலக்கணங்களை வகுத்திருக்கின்றான்.

'நம் கஷ்ட நஷ்டங்களைத் தீர்க்கும் சக்தி கடவுளுக்குத்தான் உண்டு. அவனன்றி ஓரணுவும் அசையாது என்று பக்திகொள்வோர் ஒரு ரகம். அவர்களுக்கு தெய்வம், தெய்வ உதவி இருப்பதாக உணர்வு ஏற்படாவிட்டால் கையும் ஓடாது, காலும் ஓடாது.

சின்னப் பிரச்சினை வந்தாலும் சரி, பெரிய குழப்பம் வந்தாலும் சரி, உடனே சுவாமியை வேண்டிக் கொண்டு, ஒரு நேமிசம் செய்து கொண் டால்தான் மனதில் ஆறுதல் ஏற்படும்.

இவர்கள் கடவுளைக் கிட்டத்தட்ட ஜனநாயக காவலர்களாகவே கருதுகிறார்கள். 'ஜனநாயகம்' என்பது மக்களுக்காக மக்களால் மக்களைக் கொண்டு உருவானது, என்று சொல்வார்களே, அதைப் போல் கடவுளும் நமக்கு சௌகரியங்கள் ஏற்படுத்தித் தருவதற்காக நம் கூடவே இருந்து கை கொடுக்கக் கடமைப்பட்டவர் என்ற அழுத்த மான நம்பிக்கைதான் நம் உலகத்திலுள்ள பெரும் பாலான மக்கள் மத்தியில் உண்டு.

அதனால்தான் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலேயே கடவுள் மக்களிடம் தோன்றி விட்டார்.

உலகத்தின் பல்வேறு பகுதியிலுள்ள ஆதிவாசிகள் ஒருவருக்கொருவர் தொடர்பு இல்லாதிருந்த போதும் கூட கடவுள் நம்பிக்கை என்பது எல்லாரிடமும் ஏக காலத்தில் ஏற்பட்டிருந்தது.

இது 'நம்மைப் பாதுகாக்க ஒரு சக்தி வேண்டும்' என்ற ஒரு நம்பிக்கையின் பேரில் ஏற்பட்ட கடவுள் பற்று.

சிலர் கடவுளை அப்படியெல்லாம் வியாபாரப் பொருளாக்கக் கூடாது. சின்னச் சின்ன காரியங்களுக்காக எதுவும் எதிர்பார்க்கக் கூடாது. வெறுமனே அவரை தியானித்தால் மட்டும் போதும். அது தான் உன்னத ஆன்மீகம் என்பார்கள்.

இப்படிப்பட்ட கருத்துக்களுக்கு ஒரு முடிவே கிடையாது. ஆனால், நான் உணர்ந்த வரையில் மக்கள் ஏற்றுக்கொண்ட தெய்வத்திற்கும், அவதாரத்திற்கும் ஒரு வலுவான சமூகப் பின்னணி இருந்திருக்கிறது.

அப்படிப்பட்ட சமுதாய நோக்கத்துடன், மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து வெளிப்படுத்திக் கொண்டவர்கள் தான் இறைவனாக, அவதாரமாகப் போற்றப்பட்டிருக்கிறார்கள்.

அய்யா நாராயணரின் வாழ்வில் இருந்த சமூக பின்னணியை சிந்தித்துப் பார்த்தால் நமக்குச் சில தெளிவுகள் ஏற்படுகின்றன. அவை,

தென்திருவிதாங்கூரை ஆண்ட கொடுங்கோலர்கள் அந்தக் காலகட்டத்தில் ஒரு உழைக்கும் இனத்தைக் கொடுமைப்படுத்தினார்கள் அவர்களுக்குப் பொருந்தாத வரிகள் விதிக்கப்பட்டன. அவர்களுடைய உழைப்பு சுரண்டப்பட்டது. அந்த இனத்துப் பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டனர். அவர்கள் கௌரவத்துக்கு மரியாதையே இல்லாமல் போய்விட்டது.

மன்னனோ, பெரிய ஜாதி என்று தம்மைக் கூறிக்கொள்பவர்களோ எதிரே வந்தால், இந்த இனத்துப்பெண்கள் மார்பில் தோளில் சீலை போடாமல் திறந்த மேனியாக வரவேண்டுமென்று கேவலமான நெஞ்சம் குமுறக்கூடிய ஒரு கொடுமை சர்வசாதாரணமாக நடந்து கொண்டிருந்தது.

அதை அந்தக்காலகட்டத்தில் தட்டிக்கேட்க நாதி கிடையாது.

அந்த இனத்தைத் தவிர, மற்ற இன மக்களாவது துணிகரமாக பாதுகாப்புக்கு வந்தார்களா என்றால், அதுவும் கிடையாது மன்னரும், மேல் தட்டு வர்க்கத்தினரும் உடனிருக்கும் பல தோழமை இனத்தவரும் பாதுகாக்க வரமுடியாமல், அந்த இனம் (சான்றோர்) ஒடுக்கப்பட்டுக் கிடந்தது.

சட்டத்தின் தீவிர பாய்ச்சலும், மேல்தட்டு வர்க்கத்தினரின் சுரணடலும் ஒருசமூக வாழ்வையே சீரழித்துக்கொண்டிருந்த நேரம்.

அவர்களைக் காக்க அந்தக் காலகட்டத்தில் மனிதர்கள் யாருமே இல்லை.

தெய்வம் மட்டும்தான் அவர்களைக் காக்க முடியுமென்ற ஒரு தவிர்க்க முடியாத நிலை.

திறமையும், உடல் வலிமையும் போர் முனைப்பும் கொண்ட அந்த இனம் இயலாமல், இயலாமை காரணமாக அடங்கிக்கிடந்ததாகக் கூற முடியாது.

இந்து மதத்தின் அவமானச் சின்னங்களான ஜாதியின் பெயராலும் சம்பிரதாய உபதேசங்களின் பெயராலும் அவர்கள் ஒடுக்கப்பட்டிருந்தார்கள்.

'தெய்வத்தைத் தவிர வேறு காக்கும் கதியில்லை' என்று இருந்தவர்களுக்கு காப்பாற்ற ஒருவர் வரவேண்டுமென்றால், அது தெய்வத்தைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?

அதனால் தெய்வமாக ஒருவர் வந்தார்.

வந்தவர், எந்த இந்து மதத்தைக் காட்டி அந்த சான்றோர் நசுக்கப்பட்டிருந்தனரோ அந்த இந்து மதத்தையே கையில் எடுத்துக்கொண்டு, அதன் அழுகலான பகுதிகளை உரித்துக் காட்டினார்.

அதை சாதிக்க இந்து மதத்திலேயே தான் ஓர் அம்சமாகத் திகழ்ந்தால் தான் அவரால் அதை நிறைவேற்ற முடிந்தது.

வேற்று மதத்தில் அவர் தோன்றியிருந்தால், இந்து மதத்தின் பெயரால் நசுக்கப்பட்ட மக்களை அவரால் காப்பாற்றியிருக்க முடியாது.

அதனால்தான், அந்த இந்து புராணங்களைக் கையில் வைத்துக் கொண்டு அதன் கூறுபாடுகளை அலசி அதற்குள்ளே முத்து எடுத்தார்.

'தான் தோன்றிய சான்றோர் இனம் தாழ்வுற்ற தல்ல' என்ற நம்பிக்கையை அந்த இனத்தாருக்கு முதலில் ஊட்டினார்.

'தெய்வம் வேறு எங்கோ இல்லை, பரம்பொரு ளான நாராயணரே நான்தான். நானே, மெய் ஞான உலகத்திலிருந்து பூமியில் தோன்றியிருக் கிறேன்' என்ற நம்பிக்கையை ஊட்டினார்.

மதச் சடங்குகளாலும், மதத்தைப் பற்றிய பயத் தாலும் இதுகாறும் அடங்கிக் கிடந்த மக்கள் இப் போது உயிர் கொண்டு எழுந்தார்கள்.

தமக்குள் தெய்வமே தோன்றிவிட்டதை அவர் கள் உணர்ந்து, தங்கள் சமூகத்திற்கு ஏற்பட்ட கொடுமைகளை எதிர்த்துக் குரல் கொடுக்கவும், போராடவும் தயாராயினர்.

அவர்களை வழி நடத்தினார் அய்யா நாராயணர்.

சமூக விலங்குகள் உடைக்கப்பட்டன. கொடுங் கோலர்களின் மத சூழ்ச்சியால் ஏற்பட்ட அவமானங் கள், இழிவுகள் எல்லாம் அந்த மதத்தின் பெயரா லேயே நொறுக்கப்பட்டன.

அய்யா அவதரித்த அந்த இனம் சமூக மேம் பாட்டை நோக்கி முன்னேறத் துவங்கியது.

தெய்வம் தவிர வேறு யாராலும் சாதிக்க முடியாத ஒரு காரியத்தை ஒரு சக்தி சாதித்துக் காட்டியிருக்கிறது என்றால் அதை தெய்வம் என்று போற்றுவது எப்படி தவறாக இருக்க முடியும்?

வேறு எந்தக் கால கட்டத்திலும் இந்து புராண வரலாற்றிலும் எந்தத் தெய்வ அவதராத்துக்கும் இவ்வளவு அத்தியாவசியமான சமூக நோக்கம் இருந்ததில்லை. தெய்வமே வந்துதான் தீர்க்க வேண்டும் என்கிற மாதிரி இவ்வளவு கூர்மையாக வேறு எந்த அவதார நோக்கமும் அமையவில்லை.

ஃ ஃ ஃ

மேலே நான் குறிப்பிட்டது என்னுடைய சொந்தக் கண்ணோட்டம். இதை மாற்றி சிந்திப்பவர்களும் இருக்கலாம். வேறு காரண-காரியங்களை உணர்த்துபவர்களும் இருக்கலாம்.

எல்லாவற்றுக்குமான ஆராய்ச்சிக் களமாக அய்யா நாராயணரின் அவதார வாழ்க்கை அமைந்திருக்கிறது.

பகவான் வைகுண்டரின் சமுதாய நோக்கத்தையும், சாதனையையும் மட்டுமல்லாது அவருடைய தனி வாழ்க்கையிலும் சில அற்புதங்களைச் செய்த தகவும் ஓரன்பர் (கு. பச்சைமால்) ஆதாரப்பூர்வமாகக் கூறுகிறார்.

அந்தத் தகவல்கள் —

1. வைகுண்டர் தவம் முடிந்து ஆட்சியில் இருந்த காலத்தில் ஒரு குடையின் கீழ் அமர்ந்திருப்பது வழக்கம். அக்குடைக்குப் 'பள்ளிக்குடை' என்று பெயர்.

பல்லாண்டுகளாக மழையில்லாமல் இருந்து மக்கள் துயருற்றபோது ஒருமுறை பக்தர்கள் வைகுண்டர் வெளியே உலவிவரும்போது அவரிடம் மழை முறையீட்டைக் கூற, அவர் நின்ற இடத்தில் நின்றுகொண்டே 'பள்ளிக் குடையை எடுத்து வா' எனத் தர்ம சீடருக்குக் கூற அவர் குடை கொண்டு வந்து அய்யா கையில் கொடுக்கவும் பெருமழை பெய்ததாம்.

2. இதேபோல் வேலாண்டி வாத்தியார் காலத்தில் ஒரு மழையின்மைக்காலம் வர அவரும், சீடரும் அய்யாவின் அருளை வேண்டினார். மழையும் பெய்தது. இதுகுறித்த வேலாண்டி வாத்தியாரின் தனிப்பாடல் ஒன்று கிடைத்துள்ளது.

''நன்றி கடற்கரை ஆண்டி
நாராயணப் பண்டாரமென நாமம் கூறி
சென்று கலி தேசபர சோதனைக்குத்
தெச்சணத்தில் வந்திருந்த சிறப்புக்காட்டி
நின்றிலங்கும் மக்களுக்காய் பாடுபட்டு
நிலைத்து நாடாளுவது நிச்சயமேயானால்
இன்றிரவில் மழை பொழிய வேணுமையா
என்றுயிரு பாதமதை இறைஞ்சினோமே!''

என்பதே அப்பாடல்.

வைகுண்டர் வாழ்ந்தபோதும் அவரை அண்டி னோர் பலன் பெற்றனர். அவர் வைகுண்டமேகிய பின்னும் நம்பினார் நற்பலன் பெற்றனர்.

8. வைகுண்டரின் இரண்டாவது பதியான பள்ளத்துப் பதிக்குக் கட்டிடம் கட்டத் திட்டமிட்ட போது, 'பச்சைப் பனைகளை வெட்டக்கூடாது' என்ற சட்டம் இருந்ததாம். 26 கை அம்பலம் கட்டத் திட்டமிட்டிருந்த நிலையில் பனை கிடைப் பது மிக அரிதாயிற்று. அப்போது பக்தர்கள் மிகவும் துயருற்றனர். அதுகண்ட வைகுண்டர், அவர்களை நோக்கி,

'வெள்ளிக்கிழமை 12 மணிக்கு நாராயணம் வந்து பனை வெட்டித்தாரேன்' என்று கூறிவிட்டுச் சாமித்தோப்புக்கு வந்து விட்டார். குறிப்பிட்ட வெள்ளிக்கிழமை 12 மணிக்குப் பெரும் புயல் வீசி நூற்றுக்கணக்கான பனைகள் இப்போது பள்ளத்துப் பதி இருக்கும் பகுதியில் 'தெற்கே தலை வைத்து வீழ்ந்து கிடந்தன. அவைகளைக் கோயிலமைக்கப் பயன்படுத்தினர். மக்கள் அய்யாவைத் தாமரைக் குளம் நாராயணம்' என்று போற்றினர்.

இனி-பகவான் வைகுண்டர் அவதார சுவாமித் தோப்புப் பதியின் தரிசனம் காண்போம்.

23. அய்யாவின் 'திரு'ப்பதி தரிசனம்

எல்லார்க்கு ஒருப்போலே ஈசன்நான் யிருக்கிறேன்
சொற்பெரிய ராச்சியத்தில் சீமைகட்டி ஆளலாமே
(அருள் நூல்-பக் 59)

அய்யா நாராயணர்-தந்தை திரு. பொன்னு மாடனுக்கும் தாயார் வெயிலாள் மடக்கொடி' என்று அகிலத்திரட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் மாதரசிக் கும், கி.பி. 1809-ம் ஆண்டு முத்துக்குட்டி என்ற பெயருடன் (முடிசூடும் பெருமாள் என்ற பெயரும் உண்டு) அவதரித்த சுவாமித்தோப்பு என்னும் சாஸ்தான் கோவில்விளை முன்னம் ஒரு காலத்தில் வேண்டுமானால் அடையாளம் காணமுடியாத சின்னஞ்சிறு ஊராக இருந்திருக்கலாம்.

ஆனால், இந்த சுவாமித்தோப்பு. இன்று அமைந்திருக்கும் குமரி மாவட்டத்தை மட்டு மல்லாது, தமிழகம் முழுவதிலுமே அறிமுகமாகி யிருக்கும் பெருமை பெற்றிருக்கிறது. அந்தப்

பெருமையை சுவாமித்தோப்பு ஊருக்கு தர்மமாக அளித்தது அய்யா வைகுண்டரின் கருணை.

சுவாமித்தோப்பு பகுதியில் நிகழும் அய்யா வைகுண்டரின் திருவிழா அந்த மாவட்டத்தைப் பொறுத்த அளவில் பொது விடுமுறை நாளாகவே அரசினால் அறிவிக்கப்பட்டு, பெருமைப்படுத்தப் படுகிறது நாகர்கோவில் நகரத்திற்குச் சென்று யாரைக்கேட்டாலும் சுவாமித்தோப்பு பகுதிக்கு வழி காட்டுவார்கள். அங்கு செல்ல போதிய பேருந்து, மற்று வாகன வசதிகளும் உண்டு.

ஆனால் நாகர்கோவில் நகரத்தில் தொடங்கும் ராஜபாட்டை ஓர் எல்லை வரைக்கும் சென்று அதற்குப்பின் சுவாமித்தோப்புப் பகுதியை ஒரு தனித்தீவு போல் சுலபமாக வாகனங்கள் செல்ல முடியாதபடி விட்டு வைத்திருப்பதில் என்ன சமூக ஆன்மீக நோக்கம் இருக்கிறது என்று புரியவில்லை. அய்யாவின் பதிவரை 'புளிச்' என்று சாலை வசதி செய்யாமலிருப்பது சின்ன உறுத்தலாக இருக்கிறது. ஒருவேலை அய்யாவை தரிசிக்க வருபவர்கள் சற்று சிரமங்களைத் தாங்கிக் கொண்டு வந்தால்தான் பக்தியில் கனம் கூடும் என்று நினைக்கிறார்களோ என்னவோ!

பாதை வசதிகள் மட்டுமல்லாது ஆலயத்தின் ஆன்மீக குருக்களான பால பிரஜாபதி போன்றவர் கள் கூட இப்படி எளிமையான குடில்களில் வாழ்

கிறார்கள். அந்த எளிமையோடு பக்தர்கள் வந்தால் போதும் என்ற மனோபாவம் அங்குள்ள ஆன்மீக பெரியோர்களுக்கு இருக்கும் போலும்.

என்னதான் அந்தப் பகுதியில் நிலவும் எளிமை நம்மை வியக்க வைத்தாலும் அய்யா வைகுண்டருக்குப் பிற்பட்ட காலத்தவரான நாராயண குருவின் ஆசிரமத்தை தரிசித்த நமக்கு சிறு ஏக்கம் ஏற்படாமல் இல்லை! விவேகானந்தர், அன்னையை தரிசித்த இடத்தையே விஸ்தரித்து ஒரு மாபெரும் சுற்றுலாத் தலமாகவும், மக்களை ஈர்க்கும் கேந்திரமாகவும் ஆக்கியதுபோல்.

அய்யா நாராயணர் அவதாரத் தலத்தை ஏன் ஒரு புவியீர்ப்பு ஆன்மீகக் கேந்திரமாக மாற்றியமைக்கக் கூடாது? என்ற கேள்வி மனதில் எழுகிறது.

ஆயிரக் கணக்கான நிழல்தாங்கல்களும், லட்சோப லட்சம் பக்தர்களும் தன்னலமற்ற பக்தி செலுத்தும் ஓர் ஆன்மீக இயக்கத்தின் தலைமை பீடம் ஏன் போதிய வசீகர வீச்சு இல்லாமல் இருக்கிறது.

ஆண்களும், பெண்களுமாக ஆலயத்திற்குச் செல்லும் முன் குளிக்கும் 'முத்திரைக் கிணறு' கூட தக்க அடைப்புகளின்றி 'திறந்த' நிலையில் விடப்பட்டிருக்கிறது.

இவை, நமக்குள் ஏற்பட்ட ஓர் ஆதங்கமே தவிர வேறு எதுவும் இல்லை.

அய்யாவின் ஆன்மீக இயக்கத்தை உலகெங்கும் பரப்ப முயன்று வரும் அப்பகுதியைச் சேர்ந்த அருளாளர்கள் இந்த நோக்கிலும் சிந்தையை செலுத்துவார்கள் என்றும் காலப் போக்கில் ஒரு மகத்தான ஆன்மீக கேந்திரம் அங்கு உருவாகும் என்றும், எதிர்ப்பார்ப்போமாக.

இது சுவாமித்தோப்புப் பகுதியின் புற அமைப்புத் தோற்றத்தைப் பார்த்தபோது நமக்கு ஏற்பட்ட மன உணர்வுகளே தவிர, அதன் ஆன்மீக கிளர்ச்சிகள் நம் முன் மையம் கொண்ட போது ஏற் பட்ட உணர்ச்சிகள் மிக வித்தியாசமானது.

'இதோ இதுதான் சுவாமிகள் ஆறாண்டு காலம் தியானம் 'செய்த இடம்' என்று பால பிரஜாபதி அடிகளார் வடக்கு வாசலைச் சுட்டிக் காட்டிய போதும், உருவமற்ற வழிபாட்டு மையமாக திகழும் அய்யாவின் கருவறைப் பகுதியை நமக்கு தரிசனம் செய்து வைத்தபோதும், நூற்றைம்பது ஆண்டு களுக்குமுன் பகவான் வைகுண்டர் கால் மிதித்து அங்கு நடத்திய ஆன்மீக சமூக எழுச்சிப் போராட் டங்கள் இதயத்தை ஓர் உணர்வுப் புயலுக்குள் சிக்க வைக்கின்றன.

இன்றும் எளிய மக்கள் அணிவகுத்து நின்று ஒற்றை திருநாமத்துடன் அய்யாவின் பதிக்குள் பக்திச் செழுமையுடன் வலம் வரும் காட்சி நூற் றைம்பது ஆண்டுகளுக்கு முன் அங்கு ஊற்றெடுத்

துப் பொங்கிப் பிரவகித்த ஆன்மீக வெள்ளத்தின் சாரல் இன்னும் தொடர்ந்து சிலிர்ப்பை ஏற்படுத்திக் கொண்டிருப்பதையே நம்முள் கனிவாய் உணர்த்து கின்றது.

அய்யா தாமாக பயிர் செய்த வயல் பகுதியை நமக்குக் காட்டுகிறார் பாலபிரஜாபதி அடிகளார். இன்னமும் அய்யா காலத்தில் இருந்த நடைமுறைப் படி தினமும் நெல்லெடுத்து கைக்குத்தலில் அரிசி யாக்கி அமுது சமைக்கும் சம்பிரதாயத்தை அங்கே காண்கிறோம். இன்னும் சுற்றியிருக்கும் நாகரிக உலகத்தின் படாடோப ஆளுமையின் சாயலின்றி அய்யாவின் திருப்பதியான சுவாமித்தோப்பு காக்கும் அமைதி, ஆன்மீக தியானத்தில் வேட்கை உள்ளவர்களுக்கு ஒரு வித்தியாசமான களமாகத் திகழ்கிறது.

அதற்கு அரிய சக்திக்கேந்திரமாக திகழ்வது அய்யாவின் கருவறை. அங்கே உருவம் இல்லை. ஒரு நாற்காலி இருக்கிறது. அய்யா அங்கே அமர்ந் திருக்கிறார் என்பதை உணர்த்துவது போல் ஒரு கண்ணாடி இருக்கிறது. மனிதர்கள் தம்மைத்தாமே ஆத்ம தரிசனம் செய்து கொள்வதை வலியுறுத்து வதுபோல் அந்தக் கண்ணாடி அங்கு அமைந்திருக் கிறது.

'மனிதர்களே, உங்கள் மனதை நீங்கள் சுத்தி கரித்துக் கொள்ளுங்கள். உங்கள் எண்ணம்போல்

தான் வாழ்வு அமையும். உங்களை நீங்கள் தூய சிந்தனையுடன் பரிசோதித்து அழுக்குகளை களைவதற்காக இந்தக் கண்ணாடியை உங்கள்முன் வைத்திருக்கிறேன். உங்களில் பலவீனமானவர்களுக்கு கைகொடுத்து வழி காட்டுவதற்காக நான் பக்கத்திலேயே நாற்காலியில் அமர்ந்திருக்கிறேன். உண்மையாகவே ஆத்ம பரிசோதனை செய்பவர்களுக்கு அருகிலிருந்து நான் துணை நிற்பதற்கு இந்த நாற்காலி, கண்ணாடி போன்ற திருக்காட்சிகள்' என்று அய்யா நாராயணரே அருளால் நமக்குக் கூறுவது போல் அமைந்திருக்கிறது அக்காட்சி.

பகவான் வைகுண்டர் ஹரி என்னும் நாராயணராக திருநாமம் கொண்டிருக்கிறார். ஆனால், அதே சமயத்தில் மகாவிஷ்ணுவுக்கு ஆபரணங்களாகக் கூறப்படும் அலங்காரப் பொருள்கள் எதுவும் இங்கே இல்லை. அவற்றிற்குப் பதிலாக உத்திராட்ச மாலை தான் அங்கு கொலுவேறி இருக்கிறது.

பொதுவாக, உத்திராட்சம் சிவனுக்குரியது என்பார்கள். நாராயணர் பதியில் உத்திராட்சம் அணிந்திருப்பது ஹரியும், சிவனும் ஒன்றே என்ற தத்துவத்தை உணர்த்தும் வேதாந்த சமரச ஒளியாகத் திகழ்கிறது.

அய்யாவின் திருப்பாதம் பட்ட அந்த மண்ணின் பரிஷம் நம்மீது படும்பொழுது அபூர்வ மனக் கிளர்ச்சி.

ஒரு கிறிஸ்தவருக்கு ஒரு பெத்லகேம் மாதிரி,
ஒரு இஸ்லாமியருக்கு மெக்கா மாதிரி,
ஒரு பௌத்தருக்கு ஒரு புத்தகயா மாதிரி,
ஒரு கிருஷ்ணபக்தருக்கு பிருந்தாவனம் மாதிரி,
ஒரு ராம பக்தருக்கு அயோத்தி மாதிரி,
ஒரு சிவபக்தருக்கு ஒரு காசி மாதிரி,
ஒரு சீக்கியருக்கு ஒரு அமிர்தசரஸ் மாதிரி.

—யாருக்காக இப்பதி?

இறைவனிடம் இறைவன்களுக்குள் அவர், இவர் என்று பேதம் பார்க்காமல் எல்லாம் ஒன்று, என்று போற்றும் சமரசவாதிகளுக்காக தோன்றி யிருக்கிறது இந்த அய்யாவின் பதி. அது மட்டுமா? ஒடுக்கப்பட்ட ஓராயிரம் கோடி ஜன சமுத்திரத்துக் குள் ஆன்மீக எழுச்சியும், சமூக எழுச்சியும் உரு வாக்கும் உன்னதப் பதியாக அமைந்திருக்கிறது இந்த சுவாமித்தோப்பு.

ஆண்டவன் என்றும் எளிமைக்கும், துணை நிற்பான் என்று நம்பி கை, எடுக்கும் கோடானு கோடு ஏழை உள்ளங்களுக்கு நம்பிக்கையூட்டும் வண்ணம் தன் தர்மக் கொடியை வானுயர உயர்த்தி வழிகாட்டிக் கொண்டிருக்கிறது அய்யாவின் இந்தத் திருப்பதி.

'தெய்வம் யாருக்காக?' என்று ஒரு கேள்வி

'எங்களுக்காக, எங்களுக்காக' என்று ஆர்ப் பரிந்து உரிமை கொண்டாடும் எண்ணற்ற வெள்ளை உள்ளங்களுக்கு வெள்ளமென அருள் சுரக்கும் ஞான சக்தி ஊற்றாகத் திகழ்கிறது இந்த அய்யாவின் பதி.

இங்கு உண்மையாக தரிசிப்பவர்களுக்கு பொன் கிடைக்கிறதோ பொருள் கிடைக்கிறதோ இகபர சுகங்கள் கிடைக்கிறதோ நமக்குத் தெரியாது. ஆனால் இந்த மண்ணில் ஒரு ஞானம் பிறக்கிறது.

ஏழை, எளியவர்கள் ஒடுக்கப்பட்டவர்களுக்குக் கை கொடுக்க எப்போதும் தெய்வம் தோன்றும் என்ற சத்தியம் இங்கே முழங்கிக் கொண்டேயிருக் கிறது.

நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் இங்கு சுடர் விட எழுந்த ஞானஜோதி காலங்களை வென்று யுகங்களைக் கடந்து தர்மத்துக்கும் ஆற்றல் பீடமாக என்றென்றும் நிகழும். இந்த உறுதியுடன் தர்மத் தின் பெயரால் இந்த மண்ணில் நின்று கரம் தூக்கி, கண்கள் நெக்குருக அஞ்சலித்து அமைகிறோம்.

*